# இலக்கியச் சிந்தனையாளர்
# டி.என். சேஷாசலம்

முனைவர் அ.நா. பெருமாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# இலக்கியச் சிந்தனையாளர்
# டி. என். சேஷாசலம்

முனைவர் அ. நா. பெருமாள்
மேனாள் இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை—113

கலா நிலையம் டி. என். சேஷாசலம்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-3
(22, 23-1-92)

Kalanilayam T. N. Seshachalam Endowment Lecture No. 3
Endowment Publication No. 30

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Ilakkiyach Cinthanaiyalar T. N. Seshachalam |
| Author | : | Dr. A. N. Perumal<br>Retd. Director, International Institute of Tamil Studies, Madras. |
| Publisher & copy right | : | International Institute of Tamil Studies, T.T.T.I. (Post), Taramani, Madras-113. |
| Publication No. | : | 164 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | September 1992 |
| Edition | : | First |
| Paper Used | : | White Printing |
| Size | : | 21×14 cms |
| Printing types | : | 10 Point |
| No. of Copies | : | 1200 |
| No. of Pages | : | VII+72 |
| Price | : | Rs. 12/- |
| Printers | : | Kanaka Dhurga Printers, Madras-96. Ph. : 49 25 342 |
| Artist | : | SATHYA |
| Subject | : | T. N. Seshachalam as a Literary Critic |


* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

இலக்கிய இதழ்வழித்தமிழ் வளர்த்த பெருந்தகை வழக்கறிஞர் டி. என். சேஷாசலம் அவர்களின் நினைவுப் போற்றுதலாக நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட 'கலா நிலையம் டி. என். சேஷாசலம் அறக்கட்டளை' யின் மூன்றாவது சொற்பொழிவு (22, 23-1-92) இந்நூல்.

இவ்வறக்கட்டளையின் முதலிரு சொற்பொழிவுகள் ஒப்பியல் (தமிழும் தெலுங்கும்) மற்றும் இலக்கியக் கோட்பாட்டு (அழகியல்) வரிசையில் அமைய இது அறக்கட்டளையாளரின் தமிழ்ப்புலமையையும் ஆய்வுத்திறனையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. நிறுவனத்தின் அழைப்பை ஏற்று, இப்பணியை நிறைவேற்றித் தந்துள்ள நிறுவன முன்னாள் இயக்குநரான நூலாசிரியருக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவிய சான்றோர், கலாநிலையம் டி. என். சேஷாசலத்தின் புதல்வர் திரு. பரணீதரன் அவர்கள்; சொற்பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் துணை நின்ற இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புதிருத்தியுதவிய திரு. சு. சண்முகவேலாயுதம்; சொல் அகராதி தயாரித்தளித்த ஆய்வு மாணாக்கர் செல்வி. நா. புனிதப் பொற்கொடி; செவ்வையாக அச்சிட்டளித்துள்ள கனக துர்க்கா பிரிண்டர்ஸ் ஆகிய அனைவர்க்கும் எங்கள் நன்றி.

அன்புடன்,
ச. சிவகாமி
அறக்கட்டளைப் பொறுப்பாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சென்னை—113
18-9-92



## ஆசிரியர் அறிமுகம்

பெயர் - முனைவர் அ. நா. பெருமாள்

பிறப்பு - 14-4-1930.

நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவர். பனிமொழி, பால் மதி, மாநலன் முதலான கவிதை நாடகங்களைப் படைத்ததுடன் தொலைக்காட்சி, வானொலி, மேடை ஆகியவற்றிற்கும் பல நாடகங்களை உருவாக்கியளித்துள்ளார். தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழக நாட்டுப்புறக் கலைகள், கும்மிப் பாடல்கள், தமிழர் இசை முதலான இருபதிற்கு மேற்பட்ட ஆய்வு நூல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும், தமிழ், ஆங்கிலம் இருமொழிகளில் வழங்கியுள்ளார்.

உலகளாவிய, தேசிய அளவிலான கருத்தரங்குகள் பலவற்றிலும் பங்கேற்றுள்ளார். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலிய வெளிநாடுகட்கும் சென்றுள்ளார். தமிழக அரசு, தமிழ்ப்பல்கலைக் கழகம், வி. ஜி. பி. நிறுவனம் வழங்கிய பரிசில்களையும், நாடக ஆய்விற்காகத் தமிழக அரசு வழங்கிய தங்கப் பதக்கமும் பெற்றவர். தமிழக அரசின் கலை மாமணி விருது போன்ற சிறப்புகளையும் ஏற்றுள்ளார்.

டாக்டர். ஏ. என். பெருமாள்
மேனாள் இயக்குநர்
உலகத்தமிழராய்ச்சி நிறுவனம்
சென்னை-113.

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து, சிறந்த தமிழறிஞரில் மிகச் சிறந்த இடம் வகிப்பவர் 'கலா நிலையம்' டி. என். சேஷாசலம் ஆவார். தமிழ் இலக்கிய அறிவு குன்றிய நாளில் கம்பராமாயணம், சூளாமணி, நளவெண்பா, திருக்குறள், பக்தி இலக்கியங்கள் போன்றவற்றை ஆர்வமுள்ளவர்களுக்கு அறிவு விருந்தாகக் கொடுக்க விரும்பி சேஷாசலம் அவர்கள் 'கலா நிலையம்' என்ற தமிழ் இலக்கிய இதழை 1928-ம் ஆண்டு தொடங்கி நடத்தி வந்தார்.

பல தமிழறிஞர்களின் சிந்தனையைப் பகிர்ந்து, தமிழுக்கு வழங்கும் பணியைச்சீரிய முறையில் சிறப்பாக அவ்விதழ் செய்துவந்தது. தமிழிலக்கியச்சிந்தனை ஊற்று சிலரது பேனாவின் வழியாகப் பீறிடத் தொடங்கியது. இது சேஷாசலம் தமிழுக்குச் செய்த மிகப்பெரிய தொண்டு.

ஆய்வு நலமும், சிந்தனைச் சிறப்பும் இல்லாத எழுத்துக்குக் 'கலா நிலையத்தில்' இடமில்லை. நன்கு படித்து, ஆழ்ந்து சிந்தித்து, அரிது முயன்று தரப்படும் கட்டுரைகளே அந்த இதழில் இடம்பெறும். தரமான இலக்கியச் சிந்தனைக்குத் தாமே சான்றாக விளங்கி, அருமையான கட்டுரைகளைச் சிந்தனைக் குவியல்களாக

எழுதி தமிழுக்கு வளம்சேர்த்தவர் டி. என். சேஷாசலம் ஆவார்.

அவரைப்பற்றி நினைக்கவும், சிந்திக்கவும், வாய்ப்பாக அவருடைய பெயரால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓர் அறக்கட்டளையை அன்னாரின் நல்மகனார் 'மெரீனா' அவர்கள் நிறுவினார்கள். அந்த அறக்கட்டளை சார்பில் 'இலக்கியச் சிந்தனையாளர் டி. என். சேஷாசலம்' என்ற தலைப்பில் இருநாள் சொற்பொழிவாற்ற எனக்கு வாய்ப்பளித்த நிறுவன இயக்குநர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

இப்பொழிவில் கூறியுள்ள கருத்துக்கள் சேஷாசலம் அவர்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளப் போதுமானவையல்ல. ஆனால்,ஓரளவு அவரைப்பற்றியும் அவரது சிந்தனைத் திறனைப்பற்றியும் தெரிந்துகொள்ள வழி அமைக்கும் என்று நம்புகிறேன். 'கலா நிலையம்' இதழ்களில் தொடர்ச்சியாக அவர் எழுதியுள்ள கட்டுரைகளை ஆழ்ந்து படித்தால் ஓரளவு அவரது நுண்மாண் நுழைபுலம் விளங்கும் என்று கருதலாம்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவை அச்சுவாகனம் ஏற்றி நூலுருவம் கொடுக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நன்றியோடு நினைக்கின்றேன். இத்தகைய பணி சீராகவும், சிறப்பாகவும் தொடரட்டும் என்று வேண்டுகிறேன்.

அரிகிருஷ்ணா இல்லம்
உசரவிளை,
புத்தளம் (அஞ்சல்)
குமரி மாவட்டம்

அன்பன்
ஏ. என். பெருமாள்

# உள்ளே

| | பக்கம் |
|---|---|
| இலக்கியச் சிந்தனையாளர் | 1 |
| இலக்கிய இதழாசிரியர் | 8 |
| சுவைத்து ஊட்டும் இலக்கியக் கனிகள் | 21 |
| சிந்தனைச் சீர்மை | 49 |
| நிறைவுச் சிந்தனை | 71 |
| சிறப்புச் சொல்லகராதி | 72 |

# இலக்கியச் சிந்தனையாளர்

உலகம் உவப்ப உயர் கருத்துக்களைப் பயன்மிக்க எழில் ஓவியங்களாக எழுத்து உருவில் கலைத்தன்மை சிறக்க இறவா நிலையில் இலக்கியச் செல்வங்களாக உருவாக்கித் தருவோர் படைப்பாளர்

இலக்கிய நயம் கண்டு அமைப்புத்திறன் உணர்ந்து சுவைப் பொருள் பருகி இன்புற்று மகிழ்வோர் சுவைஞர். இலக்கியத் திறன் கண்டு பயன்பொருள் புதையல் எடுத்து தரம் பிரித்து சிறப்பும் மறுப்பும் வினாவிடை விளக்கமாக எடுத்துக்கூறி ஆய்வுரையாக மதிப்பீடு செய்வோர் திறனாய்வாளர்.

இலக்கியச் செல்வங்களைச் சிந்தனை உலையிலிட்டுப் பல கோணங்களில் நுட்பமாக அணுகிப் பல்வகைப் பொருள்கண்டு, சிறப்புக்கூறுகளைச் சீர்தூக்கிப் பார்ப்போர் சிந்தனையாளர். திறனாய்வாளரும் சிந்தனையாளரும் அணுக்கத் தொடர்பு உடையவராயினும் நுணுக்கமான வேறுபாடு கொண்டவர்.

சிந்தனையாளரின் ஆழ்ந்த திறமையின் பரந்துபட்ட நுட்ப மான உணர்வோட்ட எல்லையைப் பொறுத்துச் சிந்தனைப் பரப்பு விரியவோ சுருங்கவோ செய்யலாம். ஆய்வுமுறைகள் சிந்தனையாளர்களைக் கட்டுப்படுத்தி அடக்கச்செய்யும் என்று கூறமுடியாது.

## இலக்கியச் சிந்தனை வாயில்கள்

மேலோட்டமாக எளிதில் வெளிப்படும் பொருளை முதலில் அறிந்து ஓரளவு தெளிதல் வேண்டும். பின்னர் ஏதாவது உட் பொருளை ஆசிரியர் பாடலில் புதைபொருளாக அமைத்துள்ளாரா என்பது பற்றி நன்கு சிந்திக்கவேண்டும். பாடலின் தனிச்

சிறப்பும் ஆசிரியரின் உண்மையான நோக்கும் உட்பொருளில் வெளிப்பட்டுத் தோன்றும்.

ஒட்டுமொழித் தன்மை தமிழுக்குத் தனிச்சிறப்பாக அமைந் திருப்பதை மனதில் கொண்டு, சொற்களை இயன்றவாறு பிரித்துப் பொருத்தமான முறையில் நூலின் கருத்துக்குப் பங்கமில்லா நிலையில் மேலான பொருள் காண முயலலாம். அவ்வாறு முயலும்போது பொருள் சிதைவும் கருத்து ஊனமும் நேராதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும்.

சிலேடைப்பொருள் காணவும் இம்முறை உதவும். சிலேடை யாட கவிஞர் எடுத்துக்கொண்ட பொருட்களின் இணக்கம் பற்றியும் பாடல் நோக்கம் பற்றியும் சிந்திக்கலாம். கவிபாடும் திறமையைக் காட்டும் நோக்கம்கொண்ட காளமேகப் புலவரின் சிலேடைப் பாடல்களைக் காட்டிலும் கம்பரின் பொருள் நயம்மிக்க இடப்பொருத்தமுடைய சிலேடைப் பாடல்கள் அறிவுச் சிந்தனையை அதிகம் கவர்ந்து சிறப்பதைக் காணலாம்.

கவித்திறனும் கருத்துச் செறிவும் இணைப்பொருந்தி உருவாகும் கவிதைகள் சீர்மையாகவும் சிறப்பாகவும் கருதப்படும். சொற்சிலம்பமாகச் சலசலக்கும் பாடல்கள் சிந்தனை வேகத்துக்கு எதிர்நிற்க இயலாத மெலிவினை உடையனவாகவே காணப் படுகின்றன.

சொற்கள் கவிஞனுக்கு ஏவல் செய்யவேண்டும். புலவர் ஆழ்ந்து சிந்தித்து அடுத்தோருக்கு உணர்த்த விரும்பிய பயனுடைய கருத்துக்களைச் சரியான முறையில் தாங்கிச் சுமக்கும் இன்சுவை கனிமரக்கிளைகளாகச் சொற்கள் செழுமையாகவும் வளமையாகவும் இருக்கவேண்டும்.

சில செய்யுட்களைப் பார்த்தால் அவற்றைச் சமைத்தோர் சொற்களைத் தேடிப்பிடித்து அவற்றுக்கு ஆட்பட்டுத் தம் கருத் திழிந்து அவதிப்படுவதைக் கண்டு இரங்கவேண்டிய அவல நிலை ஏற்படும். இத்தகைய பாடல்களால் கவிதைக் கலை நலிவடையும். அங்குச் சிந்தனைக்கு வாய்ப்பும் இல்லை. வேலையும் இல்லை.

சொற்கட்டாக மேலோட்டத்தில் தோன்றும் சில கவிதைகள் ஆழ்ந்த சிந்தனையின் அகழ்வாய்வால் சீர்மைக் கருத்துக்களின் கொள்கலமாக மாறித் தோன்றுவதும் உண்டு. இது சிந்திப்

போரின் திறமையைக் காட்டுவதாகவே அமையும். இருப்பினும் கவிதையில் இருந்துதான் இச்சிந்தனை தோன்றியது என்பதை மறுக்கமுடியாது.

பொருட்சுவையுடன் பாடலின் ஒலிநயம் இணைவது சிறப்பாகக் கருதப்படும். ஒலி அமைப்பில் கவிதைக் கருத்தை அமைத்துக் காட்டும் புலமைத் திறனும் உண்டு. வில்லிபாரதம், கலிங்கத்துப்பரணி, மனோன்மணீயம் போன்ற இலக்கியங்கள் பேரொலி காட்டிப் போராட்ட விளக்கப் பாடல்களைப் புனைந்து சிறந்துள்ளன. இவை சிந்தனைக்குச் சீரிய விருந்து படைக்கும் பகுதிகளாக விளங்குகின்றன.

இலக்கியங்கள் தோன்றிய கால இட உணர்வுகளை நன்கு புரிந்து அவற்றை அணுக வேண்டியது சிந்தனையாளரின் கடனாகும். காலத்தானும் இடத்தானும் மாந்தர் உணர்ச்சி கட்டுப்படுத்தப்படும். வாழ்க்கை இயல்புகள் மாறும். சமூக நிலையும் சிந்தனையும் வேறுபடும். இவற்றுக்குத் தக்கவாறு இலக்கியப் படைப்பாளரின் கருத்து மாறுபடும். இந்நிலையை மனத்தில் கொண்டே வால்மீகியையும் கம்பரையும் அணுக வேண்டும். ஒரே நூலைப் பாடிய இருவரும் ஏன் பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைகளில் மாறுபடுகின்றனர் என்பதைக் காரண காரியத்துடன் சிந்திக்கவேண்டும். குறை காண்பது எளிது. முறை காண்பது சிறப்பு. நிறை காண்பது அரிது. அமைதிகாண முயல்வது கடமை.

இலக்கியப் படைப்பில் மாந்தர் பண்பு சமூகப் பண்பாடு போன்றவை உணர்த்தப்படும் முறை சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. வாழ்வுக்கு இலக்கியம் பயன்படுகிறதா என்பதை அறிய இத்தகைய சிந்தனை சிறப்பாக உதவும்.

இலக்கியக் கருத்துக்களை விளக்கும்போது அதோடு ஒத்த பல்வேறு இலக்கிய மேற்கோள்களைப் பொருத்தமாகச் சுட்டிக் காட்டி ஒப்பீடு செய்து சிந்திப்பது சிறப்பாக மதிக்கப்படும். வலிந்து பொருத்த முயல்வது சிந்தனை நலிவினைக் காட்டிவிடும். ஒப்பீட்டுச் சிந்தனை பரந்த அறிவைக் குறையின்றிப் புலப்படுத்தும் தரமாக அமையவேண்டும். பன்மொழி இலக்கியங்களை ஒப்பிட்டு ஒத்த கருத்துச் சிந்தனை உலகளாவியது என்று நிருபித்துக் காட்டுவது பெரிதும் மதிக்கத் தக்கதாகும்.

பொருளாழம் கொள்ளும் முறையில் சொற்களைக் கவினுற இணைத்துக் கலைத்தன்மை சிறக்கப் பாடல்களைப் புனைவது படைப்புத் திறனைப் புலப்படுத்திக் காட்டும். சொற்கோவையைக் காட்டினும் பொருளமைவு சிறப்பிடம் பெறுவது என்பதை மனதில் கொண்டு பாடலியற்ற வேண்டும். இயல்பாகக் கவிதை பாடும் தன்மை வாய்க்கப்பெற்றோருக்கு நயமான சொற்கள் தாமே நாடிவந்து ஏவல் புரியும் என்று கூறுவர்.

கவிதை கலையுருவமாகும் போது கற்பனை கவிந்து அதற்கு மெருகேற்றும். அதன் பயனாகக் கவிதை சுவை மலிந்து சிறக்கும். மிதமிஞ்சிய கற்பனை கவிதைப் பொலிவைச் சிதைத்துவிடும். கவிஞனின் உணர்ச்சி உந்தல் கற்பனை ஊற்றைத் திறக்கும். திறந்த ஊற்று கட்டுப்பாட்டோடு கவிதையில் பாய்ந்துப் படிப் போரைக் கவர்ந்து, கவிஞரின் உணர்ச்சியை முறையாகப் பரிமாற வேண்டும்.

இலக்கியம் பயன்மிக்கதாக அமைந்து கனிகொடுக்கும் மரம் போன்று மக்களால் மதிக்கப்படவேண்டும். இலக்கியப் பயன் பலவாறு அமையலாம். தனிமனிதனுக்குப் பயன், குறிப்பிட்ட சமூகத்துக்குப் பயன், மாந்தர் இனத்துக்குப் பயன் என்று சிறப் பாகப் பிரித்துக் காணலாம். உலகுக்கு உதவும் இலக்கியம் உயரிடம் பெற்றுச் சிறக்கும். இலக்கியச் சிந்தனையாளர் இவற்றை நன்றாகப் புரிந்து இலக்கியத்தை ஊன்றிப் படித்துக் காய்தல் உவத்தல் அற்ற முறையில் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

பாடல்களைப் பொதுவாக மூன்று முறைகளில் விளக்கிப் பொருள் காணலாம். அவை குறிப்புரை, விரிவுரை, நுட்பவுரை என்பனவாகும். சிந்தனையாளர் அனைத்து முறைகளையும் பயன்படுத்திப் பொருள் தெளிவுபெற வேண்டும்.

நுட்பவுரை காண்பது சற்று கடினமான முயற்சியாகும். சிந்தனையாளர் ஆய்வாளரைப் போன்று தாமே சில ஐய வினாக்களை எழுப்பி விடை காண முயன்று சிந்திக்கவேண்டும். வினாக்கள் நூலின் பொதுத்தன்மைக்கும் பாடலின் சிறப்புத் தன்மைக்கும் ஒத்ததாக இருத்தல் வேண்டும். தொடர்பற்ற வினாக்கள் இடர்பாட்டுக்கு ஏதுவாகிவிடும். அகழ்ந்து பொருள் காண்பதற்கு இத்தகைய வினாவிடை முறை நன்கு உதவும் என்று கருதலாம்.

அனுமானப் பிரமாணம், காட்சிப் பிரமாணம் என இரு முறையில் பாடலுக்குப் பொருள் காண்பது உண்டு. இவ்வாறு இருக்கலாம் என்றும் கவிஞரின் கருத்து இப்படி இருக்கலாம் என்றும் பலவாறு அனுமானித்துப் பொருள்காண முயல்வதை அனுமானப் பிரமாணம் என்று கூறுவர். வெளிப்படையாகப் புலவனது காட்சிப் பொருளாகும் பொருத்தமான அனுமானம் ஒப்புக்கொள்ள தக்கதாகும்.

பாடலில் அமைந்துள்ள இலக்கண நுட்பங்களை விளக்கி அவற்றின் வாயிலாக அரிய சிறப்புக்களை அறிய முயற்சிக்கலாம். ஒரு தொடர் மாறுபட்ட இலக்கண அமைப்புககுக் கூறப்படுமாயின் அதை விளக்கி அதனால் ஏற்படும் பொருள் வேறுபாட்டை அறிந்து மேற்சிந்தனை செய்யலாம். அத்தகைய சிந்தனையின் பயனாகச் சிறப்புமிக்க பொருள் தோன்றி இலக்கியத்துக்குப் பெருமை சேர்க்கலாம்.

இலக்கியத்தைப் பல கோணங்களில் அணுகி ஆராயும் சிந்தனையாளர், அதில் திரண்ட பொருளின் அடிப்படையாகப் பல நல்ல கருத்துக்களை மக்களுடைய வாழ்வுக்குப் பயன்படத்தக்க முறையில் வழங்குவதும் உண்டு. அவை சிந்தனையாளரின் சிறப்பு விளக்கமாக இடம்பெறும். இவ்வாறு விளக்குவது மிகையோ என்று தோன்றவும் செய்யலாம்.

எக்காலத்து இலக்கியமும் எவ்விடத்து இலக்கியமும் இக்காலத்துக்கும் இவ்விடத்துக்கும் பயனோடு உதவவேண்டும் என்ற உயர் நோக்கத்தில் இலக்கியச் சிந்தனையாளர் தங்கள் சிறபபு எண்ணங்களைத் தருவதாகக் கருதலாம். இலக்கியச் சிந்தனையில் இத்தகைய கூடுதல் விளக்கம் வாழ்க்கைப் பயன் கருதி ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போன்று சிலர் இலக்கியத்தின் நோக்கை மறந்து தம் போக்கில் விரிவுரை செய்வது தவிர்க்கப்பட வேண்டும். தற் கருத்துத் திணிப்பாகவே அதைக் கருதமுடியும். எந்த வாயில் வழியாகவும் இலக்கியத்துள் நுழைய சிந்தனையாளருக்கு உரிமை உண்டு. ஆனால் அவருடைய விளக்கவுரையும் கருத்துரையும் எடுத்துக்கொண்ட இலக்கியத்துக்குப் பொருத்தமாகவும் மக்களுக்குப் பயனுடையதாகவும் இருக்கவேண்டும்.

சிறந்த இலக்கியம் சிறந்த பொருளைத் தாங்கி மலரும். சுரங்கத்தைத் தோண்டி ஆழமாகப் போகப்போக அரிய பொருள்கள் கிடைத்துக்கொண்டே இருப்பது போன்று இலக்கியத்தை ஆய்ந்து அகழ அகழ அரிய கருத்துக்கள் உரிய முறையில் தோன்றிக்கொண்டே இருக்கும். படைப்பாளர் உணராதவற்றைக்கூட சீரிய சிந்தனையாளரால் உணரவும் அறியவும் முடியும்.

## இலக்கியத்தில் தோய்ந்து துய்க்கும் சேஷாசலம்

தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நல்லறிஞர் டி.என். சேஷாசலம், இலக்கியப் பூங்காவில் நுழைந்து மகிழ்ந்து பறக்கும் மதுகரமாக இலக்கிய மலர்களில் தோய்ந்து அவற்றில் சுவை தேன் மாந்தி இன்பம் துய்த்து தன் ஆழ்ந்த சிந்தனை ஆற்றலால் அறிவமுதம் கடைந்தெடுத்து 'கலாநிலையம்' என்ற இலக்கிய வாரயிதழ் வாயிலாகத் தமிழ்மக்களுக்கு வாரி வழங்கிய இலக்கிய சிந்தனை வள்ளலாக விளங்கினார்.

சேஷாசலம் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் புலமையுற்று அவற்றிலுள்ள சிறந்த இலக்கியங்களை முறையாகக் கற்று சுவைமிக்க பகுதிகளைத் தேர்ந்தெடுத்து ஆழமாகச் சிந்தித்துப் பயன்மிக்க விரிவுரைகளாகத் தமிழுலகில் தவழ விட்டுள்ளார்.

இலக்கியச் சிந்தனை வாயில்கள் அனைத்தையும் அகலத் திறந்த உரிமையுடன் நுழைந்து பல அரிய கருத்துக்களைப் புதுப் பொலிவுடன் கண்டெடுத்துள்ளார். பாடல்களுக்குப் பொருள் காண வேண்டிய அனைத்து முறைகளையும் நிறைவாகக் கையாண்டுள்ளார்.

ஆயினும் இத்தகைய முறைகளில் அவருடைய சிந்தனை ஓட்டம் நிறைவடைந்ததாகக் கூறமுடியவில்லை. புதிய புதிய கோணங்களில் இலக்கியத்தை அணுக முற்பட்டிருக்கிறார். இலக்கியச் சிந்தனை உத்திகளைப் புதுப்பிக்கத் துணிந்திருக்கிறார்.

மேனாட்டு இலக்கியச் சிந்தனைக் கருத்துக்களின் தாக்கம் அவருக்கு மிகுதியாக இருப்பதை நன்கு அறிய முடிகிறது. தமிழ்ச்

சிந்தனையை நன்கு மதித்துள்ளார் என்பது தெளிவு. அதைத் தன்னுடைய சிந்தனை உரைக்குத் தளமாக அமைத்துள்ளார். மேனாட்டு உத்தி முறைகளைத் தன்னுடைய மேல்விளக்கச் சிந்தனைக்கு ஏற்றவாறு பயன்படுத்தியுள்ளார்.

சேஷாசலத்தின் மும்மொழிப் புலமையும் உலக இலக்கியப் பயிற்சியும் தமிழிலக்கியப் பற்றும் புதுமைச் சிந்தனையும் அவருடைய இலக்கிய அணுகுமுறைகளுக்குக் களமமைத்துக் கொடுத்திருப்பதாகக் கருதலாம்.

சேஷாசலம் இலக்கிய ஈடுபாடு மிக்கவர் என்பதை அவருடைய எழுத்துரைகள் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. அரிய நோக்கங்களுடன் பல்வேறு இலக்கியங்களை ஆய்ந்து தோய்ந்து அவர் படித்திருப்பதாகத் தோன்றுகிறது. இலக்கிய நயம் காண்பதிலும் சுவை கண்டு மகிழ்வதிலும் அவருடைய உள்ளம் நிறைவடையவில்லை.

இலக்கியத்தைச் சிந்திக்க வேண்டிய முறைகளைத் தனக்குரிய சிந்தனை கொள்கைகளாக அவர் வகுத்துக் கொண்டிருப்பது நன்கு புலனாகிறது. அவற்றுள் நான்கினைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

சிந்தனையாளர், படைப்பாசிரியரின் இதய உணர்வை நன்கு கண்டறிய வேண்டும். இலக்கியத்தின் உயிரோட்டத்தில் ஆன்மாவின் தன்மையை உணரவேண்டும். மனித வாழ்க்கையின் பயனும் அதை அடையும் வழியும் இலக்கிய ஓட்டத்தில் காட்டப் பட்டுள்ளதா என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும். இலக்கியம் பொய்யகன்ற மெய்வாழ்க்கைக்கு வழி வகுத்துள்ளதா என்பதை அறியவேண்டும்.

சேஷாசலத்தின் இலக்கியச் சிந்தனைக் களத்தை அறிந்து அவருடைய திறனை அளந்து காண இவ்விளக்கம் நன்கு உதவும். அவருடைய எழுத்தோவியங்களைப் பற்றிச் சிந்திக்கலாம்.

# இலக்கிய இதழாசிரியர்

## கலா நிலையம்

இலக்கிய உந்துதல் மிக்க டி.என். சேஷாசலம் தம் உணர்வு களை எழுத்துருவாக்கித் தமிழ் மக்களோடு பகிர்ந்து உறவாட ஆவல் கொண்டு 5-1-1928 அன்று சென்னையில் 'கலா நிலையம்' என்ற இலக்கியச் சிந்தனை ஏட்டை வாரயிதழாகத் தொடங் கினார். அது வியாழக்கிழமை தோறும் 1935 ஆம் ஆண்டு வரை பலவிதமான சிக்கல்களுக்கிடையே தொடர்ந்து வெளி வந்துள்ளது.

அக்காலக்கட்டத்தில் செம்மை இலக்கியங்களை அறிந்தோர் மிகக் குறைவு. அறிந்தோரிலும் இலக்கிய ஆர்வலர் மிக அரிது. ஆர்வம் இருப்பினும் பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்க மனம் இருப்போர் மிகச் சிலரே. இருப்பினும் கலாநிலையம் எட்டு ஆண்டுகள் இலக்கியப் பணி சிறக்க வாழ்ந்துகொண்டுதான் இருந்திருக்கிறது.

பணச்சிக்கல் இதழாசிரியரின் மன அமைதியை அரித்துக் கொண்டிருந்தாலும் அவர் மனம் தளராது தம் இலக்கியச் சிந்தனைமிக்க செல்வக் குழந்தையை மிடுக்கோடு நடைபயில வைத்தது துணிவான செயலாகக் கருதத்தக்கதாகும். பலவிதமான சிக்கல்களை எதிர்கொண்டு இவ்விலக்கிய இதழைத் தொடர்ந்து வெளிவரச் செய்தது சேஷாசலத்தின் தணியாத இலக்கிய ஆர்வத்தை நன்கு புலப்படுத்திக் காட்டுவதாகும்.

கலாநிலையம் தான் பிறந்த மண்ணோடு நில்லாது கடற் பயணம் செய்து ஈழநாட்டு மண்ணில் நடந்து, பல தமிழ் அறிஞர்களுக்கு நல்ல இலக்கிய விருந்து படைத்துள்ளது. அதற்கு அங்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு வியந்து பாராட்டித் தன் மனநிறவை ஓரிடத்தில் சுட்டிக் காட்டுகிறது.

## இதழின் நோக்கம்

கலாநிலையம் ஓர் இலக்கிய வார இதழ் என்று குறிப்பிடப் படுவதில் அதன் முக்கிய நோக்கம் இலக்கியங்கள் பற்றிய சிந்தனை என்பது செவ்வனே விளங்கும். இதன் சிந்தனை தமிழ் இலக்கியத்துடன் அடங்கவில்லை. ஆனால் அது வழங்கும் விருந்தை அருந்துவது தமிழர்கள் மட்டுமே.

தமிழ் மக்கள் தமிழிலக்கியங்களை மட்டும் அறிந்து சிந்திப்பு துடன் வேற்றுமொழி இலக்கியங்களையும் படித்துச் சுவைக்க வேண்டும் என்பது கலாநிலையத்தின் தலையாய நோக்கமாகும். மும்மொழிப் புலமையும் பன்மொழி அறிவும் பெற்ற இதழாசிரியர் இந்நோக்கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றுகிறார்.

கலாநிலையம் முதல் இதழில் முதல் பக்கத்தில் இடம்பெறும் ஆசிரியருரை (தலையங்கம்) இதழின் நோக்கங்களைச் செவ்வனே விளக்கிக் காட்டுகிறது.

> 'கம்பர் போன்ற தமிழ்க் கவிகளின் அழகையும் நயத்தையும் கேள்வியுற்ற தாமும் அக்கவிகளைப் படித்து அனுபவிக்க வேண்டும் எனும் விருப்பு எல்லோர் மனத் திலும் தோன்றி இருக்கிறது' (5-1-1928, ப. 1)

கம்பராமாயணத்தின் சிறப்பு, மேடைகள் வாயிலாகப் பரக்கத் தொடங்கிய காலத்தில் கலாநிலையம் தொடங்கப்பட்டதாகக் கருதலாம். படிப்பதற்கு நூற்கள் கிடைப்பது அரிதான சமயத்தில் நூலைப் படித்த அறிஞர் அதுபற்றி உரையாற்றுவதைக் கேட்டு மகிழ்ந்த பலர் அதைப் படித்துச் சுவைக்க ஆவல் கொள்வதை அறிந்த ஆசிரியர் அந்த ஆவலை நிறைவேற்ற விரும்புகிறார். ஆகையினால் இது இதழின் முக்கிய நோக்கமாக அமைகிறது.

கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களைப் படித்து இன்பம் துய்க்க வேண்டுமானால் தமிழ் மொழிப்பயிற்சி தேவை. இதை உணர்ந்த ஆசிரியர் 'தமிழ்ப்பாடம்' என்ற தொடர் பகுதியைத் தொடங்கி ஓரளவு தமிழறிந்தோர்க்குத் தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி அளிக்க முற்படுகிறார்.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல தமிழ் அறிஞர்கள் இலக்கிய இலக்கணப் புலமையுற்று ஒதுங்கி இருப் பதை ஆசிரியர் கேள்விப்படுகிறார். அவர்கள், ஆதரித்து அறிமுகப்படுத்துவாரின்றி அவதிப்படுவதை அறிகிறார். அவர் களது திறமையைத் தகுதிக்குத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும் என்று கருதுகிறார்.

கலாநிலையத்தின் வாயிலாகத் தமிழ் அறிஞர்களை தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கிறார். அவர்களுடைய சிந்தனை மலர்களை எழுத்துரை மாலைகளாகத் தொடுக்கச் செய்து கலாநிலையத்தின் கவினழகைப் பெருகச்

செய்ததுடன் அவற்றின் இலக்கிய மணத்தைத் தமிழ்நாட்டில் பரவச் செய்துள்ளார்.

கலாநிலையத்தின் வழியாகத் தமிழ் அறிஞர் பலர் தங்களுக்குள் தொடர்புகொண்டு அறிவு பரிமாற்றம் செய்து சிறப் பாக வளர்ந்துள்ளனர். ஆய்வு வல்லுநர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், இலக்கிய ஆர்வலர் அ. சீனிவாசராகவன் போன்ற பலரின் சிந்தனை வளர்ச்சிக்கும் அறிவு விளக்கத்துக்கும் கலா நிலையம் வழி வகுத்துக் கொடுத்துள்ளது.

ஆங்கிலப் பயிற்சி இல்லாதவர்களுக்கு அம்மொழி இலக்கியப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்று ஆசிரியர் சேஷாசலம் பெரிதும் விரும்புகிறார். இந்த விருப்பத்தைக் கலாநிலையத்தின் நோக்கங் களில் ஒன்றாகக் கருதி அதைச் செவ்வனே நிறைவேற்றிக் காட்டு கிறார்.

சேக்ஸ்பியர், ஷெரிடன், டென்னிசன் போன்ற பலரின் ஆங்கில இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்து விளக்கக் குறிப்புக்கள் தரப்படுகின்றன. தமிழர் ஆங்கிலப் புலமை பெற்றிருந்தால் தமிழின் பெருமை அவர்களால் ஒப்பீட்டு முறையில் சிறப்பாக விளக்கப்படும் என்பது அவருடைய கருத்து. (5-1-1928, ப. 1)

நான்காம் ஆண்டுத் தொடக்க இதழில் (8–1–1931) ஆசிரியர் தரும் குறிப்புக்கள் வாசகருக்கு அறிவுரையாகவும் இதழின் நோக்கவுரையாகவும் அமைந்துள்ளன. 'புரிமுகம்' என்று தலைப் பிட்டுத் தலையங்கம் எழுதப்படுகிறது.

இதழாசிரியர் வாசகரிடம் நட்புரிமையுடன் தம் மூன்றாண்டுப் பணிகள் பற்றிப் பேசுகிறார்.

> 'மதித்தெம்மை வரவேற்க நிற்குந் நான்காம் ஆண்டின் நல்வாயில் இன்று மிதிக்கிறோம். உவந் தெம்மைத் தொடர்ந்து வரும் கேண்மையோர்க்கு வழித்துணையாய் வழங்கிய மொழிகள் பற்பல' (8–1–1931, ப. 1)

கலாநிலையத்தை மதித்து வரவேற்கும் வாசகர்களின் நல்லாதரவை நன்றியோடு நினைத்து ஆசிரியர் மகிழ்ச்சி அடை கிறார். ஆர்வத்துடன் படித்தோரின் வாழ்வுக்கு வழித்துணை யாகப் பல அறிவுரைகள் வழங்கப்பெற்றுள்ளன. இதிலிருந்து மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும் என்பது இதழின் ஒரு நோக்கமாக இருந்துள்ளதை அறியலாம்.

யாருக்கு, எவ்வாறு எத்தகைய வாழ்வு பற்றி அறிவுரைகள் நவிலப்பட்டன என்பதைக் குறித்து ஆசிரியர் மேல்விளக்கம் தருகிறார்.

> 'அறியாமையை மறந்திருக்கும் ஏழ்மையை அறிவென்று கொண்டாடும் கைதவம் ஒருபுறமிருக்க, வெறுத்தகற்ற வேண்டிய சூழ்ச்சித் தந்திரங்களை ஆற்றல்சால் அறிவென்று பிழை செய்யும் தந்திரங்களையும் ஓர்தல் வேண்டும். இதனை 'முயலுக்கு முயல வேண்டா, சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, மல்வோலியோவின் மரபும் மாய்ந்ததில்லை அனைய தலையங்கங்களில் காட்டி வந்தோம்.' (8-1-1931. ப. 2).

மனிதன் அறியாமை இருளிலிருந்து விலகி அறிவொளி வீசிச் சிறக்கவேண்டும். மாறாக அறியாமையையே அறிவென்று கருதும் பேரறியாமையை நினைத்து எப்படித்தான் வருந்துவது. அவர்களை அறிவுறுத்தித் திருத்தும் வழி எதுவென ஆசிரியர் ஆழ்ந்து சிந்திக்கிறார்.

நயவஞ்சகர் நிறைந்த உலகில் பலர் தங்கள் அறியாமையின் காரணமாக ஏமாற்றப்படுகிறார்கள். சூழ்ச்சி வலையில் சிக்கிச் சீரழிகிறார்கள். கல்மனத் தீயரின் கயமைச் செயலைக் கண்டுணரும் அறிவும் ஆற்றலும் இன்றிப்பல்லோர் அழிந்தொழியும் அவலம் கண்டு ஆசிரியர் இரங்கி ஏங்குகிறார். அறிவோடு சிந்தித்தால் வஞ்சகரின் சூழ்ச்சித் தந்திரங்கள் வெற்று வேட்டாகிவிடும். மக்களை அறிவு விளக்கத்தோடு சிந்திக்கச் செய்ய வேண்டும் என்பது ஆசிரியரின் பேரவா.

கலாநிலையத்தின் முக்கியமான நோக்கங்களைப் பற்றி இரண்டாம் ஆண்டு (1929) முதல் இதழில் குறிப்பிட்டு ஆசிரியர் காட்டுகிறார். மூன்றைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

(1) நற்றமிழில் நல்ல பயிற்சி
(2) கவிகளின் நயம் கண்டுணர்தல்
(3) மற்றுள்ள மொழிகளின் மாண்பறிதல்

3-1-1929, ப:91

தமிழ் மொழியறிவும் இலக்கியச் சிறப்பும் நன்கு அறியச் செய்வதுடன் வேற்றுமொழி இலக்கிய அறிவும் தமிழ் மக்கள்

பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் கலா நிலையம் பணியாற்றி வந்துள்ளது. இதுவே அதன் முக்கிய குறிக்கோளாகஇருந்தது.

தமிழ் மொழியிலக்கியப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் இவ்விதழ், அறிஞர் சிலரின் இலக்கியச் சிந்தனை மிக்க கட்டுரை களை வெளியிட்டுள்ளது. அவை அறிவையும், சிந்தனையையும் பல நிலைகளில் வளர்க்கும் தரமானவை. அகப்புற வாழ்க்கை இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள் எனப் பல்வகை இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்று இதழ் வளம் பெற்றதைக் காணலாம். பல தொடர்கட்டுரைகளாக வெளிவந்து எழுத்தாற் றலையும் படிப்பார்வத்தையும் பெருக்கியுள்ளன.

முதல் மூன்று ஆண்டுகளில் வந்துள்ள கட்டுரைகளைக் கண்டு கலா நிலையத்தின் தமிழ்ப்பணியை நன்கு புரிந்து கொள்ளலாம்.

(1) சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், கட்டுரைகள் 51, (1928)
(2) கம்பராமாயணம், கட். 51 (1928)
(3) தேவாரமும் ஐந்திணையும் (1928)
(4) கம்பராமாயணம், கட். 48 (1929)
(5) அப்பர், கட். 50 (1929)
(6) வில்லிபாரதம், கட். 32 (1929)
(7) குலசேகரர்- தத்துவ விளக்கம், கட். 23 (1929)
(8) அகப்பொருள் விளக்கம், கட். 24 (1929)
(9) நம்மாழ்வார் வைபவம், கட். 12 (1929)
(10) கம்பராமாயணம், கட். 48 (1930)
(11) குறுந்தொகை-400 பாடல்கள், கட். 34 (1930)
(12) அப்பரும் 64 கலைகளும், கட். 36 (1930)
(13) நம்மாழ்வார் வைபவம், கட். 34 (1930)

இவை தவிர நள வெண்பா, சூளாமணி ஆகியவை பின்னர் வந்த இதழ்களில் முழுமையாக விளக்கம் பெற்றுள்ளன. மேலும் சில புறநானூற்றுப் பாடல்கள், திருக்குறள் பாடல்கள், பெருங்கதைப் பகுதிகள், மணிமேகலை பகுதிகள், சிலப்பதிகாரப் பகுதிகள், சில தனிப்பாடல்கள் போன்றவை சுவையாகவும் நயமாகவும் விளக்கம் பெற்றுள்ளன. இவற்றால் இதழ் நோக்கம் சிறப்பாக நிறைவேற்றப்பெற்றதாகக் கருதலாம்.

இலக்கியம் மனித வாழ்வுக்குச் சிறப்பாக உதவ வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கலாநிலையம் மக்களுக்கு அறிவு விளக்கம் தந்துள்ளது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 'அப்பர்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் 'அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்,' என்ற பகுதியில் வான நூல், வைத்தியம், யோகம், மந்திரம் போன்ற பல கலைகள் பற்றி அரிய விளக்கம் தரப்படுகிறது. பக்தி இலக்கியத்தில் இறையுணர்வு விளக்கப்படுவதுடன் வாழ்வுக்கு மிகத் தேவையான செய்திகளும் அடக்கப்பெற்றிருப்பதைக் கட்டுரை ஆசிரியர் தம் பரந்துபட்ட கலையறிவால் சிந்தித்து மிக நுட்பமாகப் பாடற்பொருளை அகல விரித்து வாழ்க்கைக்கு உதவும் பயன்பொருளாக ஆக்கித் தருவது எண்ணியெண்ணி இன்புறத்தக்கது.

இப்பகுதியில் பதினாறாம் பிரிவாக வைத்தியக் கலை இடம் பெறுகிறது. அதில் அப்பரின் பாடலொன்று எவ்வாறு விளக்கப் படுகிறது என்பதைச் சுருக்கமாகக் காணலாம். இயற்கை தூய்மையாகவும் அழகாகவும் விளங்கிய நிலையிலும் மனிதரின் உடல்நலம் சிவபக்தி நிறையா இடங்களில் நோயால் பீடிக்கப் பட்டிருந்தது என்பதற்கு ஐயமில்லை என்று கூறும் கட்டுரை ஆசிரியர் அப்பரின் பாடலொன்றை எடுத்து விளக்குகிறார்.

(3-1-1931, பக். 3)

'திருக்கோயி லில்லாத் திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத் திருவி லூருந்
பருக்கோடி பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினோடு பலதளிக ளில்லா வூரும்
விருப்பினோடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல வடவி காடே'

(தனித்திருத்தாண்டகம், பா.5)

தேவாரப் பாடல் கலாநிலையத்தின் வழியாக எத்தகைய விளக்கம் பெற்று உலகத்துக்கு வழங்கப்பெறுகிறது என்பதைக் காணலாம்.

'திருக்கோயிலிற் செய்ய வேண்டிய திருத்தொண்டும் அதன் வழிபாட்டுக்குரிய நியமங்களும் திருக்கோயிலில் காணப்படும் ஒவ்வொரு பண்டமும் தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் திட சக்தியையும் தருவதுடன் யாதொரு வியாதியும் வராது தடுக்கும். பிணியாளன் அவ்விடம் பக்தியுடனும் உள்ளன்புடனும் செல்வானாகில் அக்கணமே தீப்பிணி யாவும் நீங்கிப் பொன்னனைய திருமேனி பெறுவான். இக்கருத்தையே அப்பர் 'திருக்கோயிலில்லாத் திருவில் ஊர்' காடு என்றார்.

ஏனெனில் அவ்வூரில் வசிப்பதால் காட்டில் வசிப்பது போன்று எவ்வியாதி சம்பவத்திற்கும் இடம்கொடுப்பான் என்பது அவர் கருத்தாகும். சர்வ வியாதி நிவாரண சக்தி பெற்ற திருநீற்றை மேனியில் தரிக்காமல் இருப்பது வியாதி உண்டாவதற்கு ஒரு வழியாகும். (8-1-1931, பக். 3).

இறைவுணர்வுக்கு உரிய இப்பாடலுக்குரிய விளக்கம் உடல் நலம் பேணுவதற்கு உரியதாவதைக் கருதிப் பார்க்க வேண்டும். விளக்கம் இதோடு அமையாமல் நிகழ்காலப் பழக்க வழக்கத்துக்குத் தாவுகிறது. மக்கள் தினமும் மேல்நாட்டுக் குளியல் பொடி, சவரப்பொடி, தலைப்பொடி, முகப்பொடி முதலியவற்றைப் பயன்படுத்தி நோய்வாய்ப்படுவது சுட்டப்படுகிறது. இத்தகைய பொடிகளைப் பயன்படுத்துவதினால் மக்கள் பலவிதமாக நோயுற்று வருந்துவது விளக்கப்படுகிறது. பின் கட்டுரை ஆசிரியர் இப்பொடிகளைப் பயன்படுத்தி அவதிப்படும் மக்களின் அறியாமையை நினைத்து இரங்குகிறார். 'இதை நவீன நாகரிகத்தில் இருபாலாரும் ஏற்று மகிழ்கின்றனர்! அந்தோ! மக்கள் நலம் நாடும் விளக்கச் சிந்தனையாக இதைக் கருத வேண்டும். இதே உணர்வுடன் பாடலின் விளக்கம் விரிவடைகிறது. திருநீற்று மகிமை கூறப்படுவதைப் பார்க்கலாம்.

'நமது தமிழ் நாகரிகத்தில் எக்காலத்திலும் ஒரே குணமாயும் பூசப்பூசப் பொன்னிறம் நமது உடலுக்குக் கொடுக்கத் தக்கதும் பூசவினியதும் சுந்தரமாவதும் புகலிவேந்தர் திருநீற்றுப்பதிகத்தில் பகர்ந்த நற்குணங்கள் யாவும் ஒருங்கு வாய்த்து சுலப விலையில் அல்லது இலவசத்தில் கிடைக்கக்கூடியதுமான திருநீறு நமது வர்த்தக ஸ்தலங்களிலுள்ள மேல்நாட்டுப் பொடிகளை ஒழித்திட்டு என்று புகுமோ அறியோம்' (5-1-1931, பக். 3).

இக்கால வழக்கத்தைப் பொருத்தி மக்கள் நலம் நாடும் ஆக்கச் சிந்தனைமிக்க கட்டுரை ஆசிரியர் அக்கால பழக்கத்தையும் சுட்டிக் காட்டி உரைவிளக்கம் செய்கிறார்.

அப்பர் காலத்திலும் நமது மேல்நாட்டுப் பொடிகளைப் போல், சாஸ்திர நிபுணர்களான திகம்பர சமணர்களும் செய்து தாங்களும் அணிந்து பிறரையும் அணிவித்தனர்' என்பதைத் தேவாரத்தில் காணகிறோம்.

'இத்தகைய பொடிகள் யாவும் விஷப்பொடிகளே. உடனே மனிதரைக் கொல்லாவிடினும் நாளடைவில் தேகத்துக்கு நன்மை விளைவிக்கா. வாகீசர் கூறியவாறு இப்பொடிகள் கடுப்பொடியாகும்.

'கடும்பொடி யட்டி மெய்யிற்
 கருதியோர் தவமென் றெண்ணி
வடுக்களோ டிசைந்த நெஞ்சே!
 மதியிலீ! பட்ட தென்னே?
மடுக்களில் வாளை பாயும்
 திருவையா றமர்ந்த தேனை
அடுத்துநின் றுன்னு நெஞ்சே!
 அருந்தவம் செய்த வாறே!

(திருவையாறு — திருநேரிசை, 5)

ஒரு பாடலை விளக்கத் தொடர்புடைய இன்னொரு தேவாரப் பாடலை, மேற்கோளாக இணைத்திருப்பதை இங்குக் காணலாம். தமிழறிவு புகட்டுவதுடன் மக்கள் நல வாழ்வுக்கு உரிய நல்ல அறிவையும் இணையாக ஊட்டும் முறை சிந்திப்பதற்கு உரியது. கலாநிலையத்தின் இலக்கியப் பணியின் சிறப்புக்கூறாக இதைக் கருதலாம். அனைத்து இலக்கியங்களும் இவ்வாறு விளக்கப் படுவதையே இதழாசிரியர் விரும்புகிறார்.

மேலும், வீணாகக் காயசித்தி செய்வதில் பயனில்லை; ஜீவன் முத்தி அடையும் நிமித்தமே அதைச் செய்யவேண்டும் என்ற கருத்தை 'நில்லா வாழ்வு நிலைபெறுமென் றெண்ணி' என்று தொடங்கும் அப்பரின் தேவாரப் பாடல் (திருக்கருவில்-திருக்குறுந் தொகை, 7) வழியாக விளக்குவதையும் பார்க்கலாம். (8-1-1931 ப. 5).

வில்லிபாரதப் பாடல்களை விளக்கும் கட்டுரையாளர் உள வியல் சிந்தனையுடன் மாந்தரின் வாழ்வியல் போக்குகளை இணைத்துக் காட்டித் தெளிவுரை தருவது நல்வாழ்வுக்கு ஏற்ற பயனுரையாக அமைகிறது.

கண்ணன் துரியோதனனிடம் தூது சென்றபோது இராசராச னாகிய துரியோதனனுக்குச் சினமூட்டித் தான் அறிவோடு அடங்கி இருக்கிறான். துரியோதனனின் விவேகமில்லா வேகமும் கோபமும் ஒரு பாடலால் விளக்கப்படுகிறது.

'மெய்வி ளங்கவரு குருகு லத்தினிடை
வந்து வெஞ்சமர் விளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தூ ணிடை
அறைந்து ரைக்குமிவை காவலன்!

இப்பாடற் பகுதியைக் கட்டுரை ஆசிரியர் உளவியல் வாழ்வியல் கூறுகளுடன் விளக்குவது சிறப்பாக அமைவதுடன் கலாநிலையம் இதழ் இலக்கியங்களை அணுகும் முறையையும் காட்டுகிறது. உரை விளக்கத்தைப் பார்த்து இக்கருத்தை நன்கு அறியலாம்.

'கண்ணன் இவ்வாறு விட்டுரைத்ததும் துரியோதனன் வைதவைகளைப் பார்க்குங்கால் ஒருண்மை தெளிய வரும். மற்றைப் பாசுரங்களில் கூறியதுபோல் கண்ணன் சபைக்கு வரும் போதே வசவுடன் தொடங்கி இருந்தால் வைவதில் துரியோ தனன் சிறிதும் இளைத்தவன் அல்லன், ஆதலினால் அச்சொற் போரில் ஒருவரும் வெற்றியுடன் வெளியேற முடியாது. துரியோதனனது சபையின் எழில் சிதையுமெனினும் கண்ணனும் சிறிது சேற்றைப்பூசிக் கொள்ளவே நேர்ந்திருக்கும்.

'கண்ணன் யதார்த்தமாய்ப் பேசவும் துரியோதனன் சீற்ற மாய் வசையுரை கூறவே அவனவையின் போலிச் சிறப்பு சிதை கிறது. கண்ணன் அவ்வசவுச் சேற்றில் இழியாமல் நகையுடன் வெளியேறியதை,

'சீல மற்றவர் சினைந்த போதுமொரு
தீதி லாதவர் செயிற்பரோ'

என்று மிகத் தெளிவாக வில்லிப்புத்தூரார் கூறுகிறார். (17-1-1935, ப. 45).

கண்ணனது அமைதியும் அடக்கமும் துரியோதனனுக்கு அடங்காச் சினத்தை மூட்டுகின்றன. ஆனால் அதைக் கண்ண னிடம் காட்ட முடியாத நிலை. கண்ணன் மிகவும் அமைதியாக வெளியேறுகிறான். ஆனால் துரியோதனனோ கோபத்தால் மதிமயங்கி விவேகத்தை இழக்கிறான்.

துடித்தெழும் கோபம் வடிகால் தேடி ஓடுவது மனித இயல்பு. கோபமுற்ற துரியோதனன் கண்ணன்மீது பாயாத தன் சினத்தை விதுரன்மீது ஏவுகிறான். அதன் பயனாக விதுரனின் பலம்மிக்க துணையை இழந்து மெலிகிறான் (24-1-1935, ப. 58).

இத்தகைய சிந்தனை விளக்கத்தைப் படிப்போர், இலக்கியத்தை அறிவதுடன் தாங்கள் வாழத்தக்க வாழ்க்கை முறைகளையும் அறிவர் என்பது உண்மை. இதுவே இந்த இலக்கிய இதழின் முதன்மை நோக்கம். அதுவே இலக்கியச் சிந்தனையாளர் சேஷாசலத்தின் இலக்கியக் கல்விக் கொள்கை.

பேரிலக்கியங்களை அணுகுவது போன்று தனிப்பாடல் விளக்கங்களும் வாழ்வின் பொது நன்மைகளை அடிப்படையாகக் கொண்டே கலாநிலையத்தில் தரப்படுகின்றன. புலவர் புராணத்தில் இடம்பெறும் நெற்குன்ற வாணர் பற்றிக் கூறும் முறையை எடுத்துக்காட்டி இவ்வுண்மையை நிறுவலாம்.

'நெற்குன்ற வாணர் அன்பு, அடக்கம், பொறுமை, கல்வி கடவுள் வழிபாடு முதலிய தன்மைகளில் தலை சிறந்தவராய்த் திகழ்ந்ததோடு 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போய்ப் பெறுவதெவன்' என்ற பொய்யாமொழியையும் நன்கு போற்றியவராய் வாசுகி அம்மையே போன்று 'அன்னைதயையும் அடியாள் பணிவும் பொன்னின் அழகும் புவிப்பொறையும் அன்ன நடை பேசித் துயிலும் விறல்மந்திரி மதியும்' உடைய ஒரு பாவை நல்லாளைத் திருமணம் முடித்துத் 'தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை' என்ற இல்வாழ்க்கைக் கடன்களையும் செவ்வனே ஆற்றி வருவாராயினர்!' (2–7–1931, ப 510).

இவ்விளக்கம் நல்வாழ்வுக்கு உரிய பல கூறுகளை விரித்துக் கூறுவதைக் காணலாம். இதில் பல இலக்கியக் கருத்துச் செல்வங்கள் ஒரே பேழையுள் அடக்கப்பட்ட அரும்பொருள்போல் தரப்படுவது நோக்குவதற்கு உரியது. கலாநிலையம் ஓர் இலக்கிய ஏடு என்பதையும் அதன் ஆசிரியர் சேஷாசலம் ஓர் இலக்கிய ஆர்வலர் என்பதையும் இதிலிருந்து நன்கு உணரலாம்.

சுவைமிக்க இலக்கியப் பகுதிகளை நாடகப் போக்கில் நயமாக எழுதி நன்கு விளங்க வைக்கும் முறையும் கையாளப்படுகிறது. உதயணன் சரித்திரம் இம்முறையில் சுவை அழுத்தத்துடன் தரப் பெறுகிறது. (23-5-1935, ப. 326; 30-5-1935, ப. 344).

இக்கதை உரை விளக்கமாகவும் நாடக உருவிலும் நவிலப் படுவதைப் பார்த்து இம்முறையின் சிறப்பை உணரலாம். நாட்டு அரசியான உதயணனின் தாய் காட்டுக்கு வருகிறாள். அவள் ஒரு மரத்திலேறி இருக்கிறாள். அங்கு வந்த முனிவர் ஒருவர் அவளைக் கண்டு வியப்புற்று உரையாடல் தொடங்குகிறார்.

முனி : நீ யார்?

அரசி : நான் ஒரு பெண்பிள்ளை

முனி : நீ இவ்விடம் எப்படி வந்தாய்?

அரசி : என்னை ஒரு பெரும் பறவை தூக்கி வந்தது.

முனி : கீழே இறங்கி வா.

அரசி : பெரியோரே! சாதி மாறுபட்டால் நான் கீழே வர இயலாது.

முனி : நீ என்ன சாதி?

அரசி : நான் சத்திரிய சாதி.

முனி : நானும் சத்திரியன் தான்.

அரசி : அவ்வாறானால் சத்திரிய தருமத்தைக் கூறுவீராக.

முனி : கேள்! இதுதான் சத்திரிய தருமம்.
(அவர் சத்திரிய தருமம் இதுவெனக் கூறினார்)
(23-5-1935, பக். 327)

நாடகவுணர்வு உரையாடலுக்கு ஏற்ற பகுதிகளை மட்டும் இவ்வாறு தந்து விளக்கவுரைப் பகுதிகளை உரைநடையில் தந்துள்ள பாங்கு படித்துப் புரிவதற்கு நயமாகவும் சுவையாகவும் உள்ளது. எளிமையும் இனிமையும் இம்முறையில் கலந்து கற்போரைக் கவர்கிறது. இத்தகைய உரைவிளக்க முறையைக் கலாநிலையம் ஆதரித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும்.

கம்பரையும் வால்மீகியையும் ஒப்பிட்டு விளக்கும்போது சேஷாசலம் கூறும் ஒரு கருத்து இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

> 'நிகழ்ந்தவோர் நிகழ்ச்சியினை நாடகமாகக் காட்டுவதும் கதையாக ஓதுவதும் ஆகிய இரு முறைகளில் இங்கு, கம்பர் முன்னதையும் வால்மீகி பின்னதையும் கையாண்டுள்ளனர்' (28-6-1928, ப. 511)

'கதை முறையில் தொடர்ந்து வரும் வரலாறு மக்களின் இயல்பு காத்து பொது வகையில் நிகழ்வதுவே போதும். இதுவன்றி நாடகத்தில் பாத்திரங்கள் குணச்சிறப்பும் இணங்கவைத்தல் விதியென்ற வேற்றுமையைக் காட்டுதல் வேண்டும்' (19-7-1928, ப. 572.)

இவற்றுள் அடங்கியுள்ள கருத்துக்களைச் சீர்தூக்கி நாடக வமைப்பில் தரப்படும் விளக்கப் பகுதிகளின் சிறப்பை எடையிட்டுக் காணலாம். கலாநிலையம் பாடல்களை நன்கு விளக்குவதற்குக் கையாண்ட உத்திமுறைகளில் இதுவும் ஒன்று.

## சிறப்புத் தன்மைகள்

ஆங்கிலத்துக்கு உயர்வு கொடுத்துத் தமிழின் சிறப்பை உணராதவர்களுக்குத் தாய்மொழிப் பற்றுடன் அதன் பெருமைகளை உள்ளவை உள்ளவாறு உணர்த்திக்காட்டிய சிறப்பு கலாநிலையத்துக்கு உறுதியாக உண்டு.

பாடலின் சிறப்பு விளக்கத்துக்கு உதவும் தரமாக இலக்கண நுட்பங்களை முறையாகச் சுட்டிக்காட்டித் தகுந்த விளக்கம் கொடுத்துள்ள பாங்கு உயர்வாக மதிக்கத்தக்கது.

தமிழ்ப் பாடம் என்ற பகுதியைத் தொடங்கி நளவெண்பா போன்ற இலக்கியங்கள் வாயிலாகத் தமிழ்ப் பயிற்சி அளித்ததை நல்ல தமிழ்த் தொண்டாகக் கருதலாம். எண்பதற்கும் அதிகமான பாடங்களைத் தொடர்ந்து வெளியிட்டு ஓரளவு தமிழ் தெரிந்தோர்க்குப் பேரளவு தமிழ் இலக்கியத் தெளிவும் இலக்கியப் பயிற்சியும் அளித்துள்ள கலாநிலையம் தமிழ் மக்களின் நன்றிக் கடப்பாட்டுக்கு உரியதாகும்.

ஆங்கில இலக்கியத்தில் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து தமிழில் மொழிபெயர்த்து தந்துள்ளமை மொழி வளர்ச்சிக்கும் ஆக்கமான சிந்தனைக்கும் பெரிதும் உதவும் தரமாக உள்ளது. இலக்கியத் தரம் வாய்ந்த புதினத்துக்கும் மதிப்புக்கொடுத்து தற்கால இலக்கிய வளர்ச்சிக்கும் கலாநிலையம் அடிகோலியுள்ளது. மலிவான இலக்கிய வரவால் தமிழ் நலிந்துவிடக் கூடாது என்ற உயர்வான சிந்தனையுடன் இவ்வார இதழ் அயராது அரிய பணியாற்றி உள்ளது.

கலாநிலையத்தின் ஆசிரிய உரைகள் (தலையங்கம்) மக்கள் நலம் நாடி, சமூகச் சிந்தனைக் களஞ்சியங்களாக மனித நேய உணர்வுடன் அறிவாக்கக் கருத்துக்களுடன் மலர்ந்துள்ளன.

சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, வாழ்வாங்கு வாழ்பவர் என்ற பெருந்தலைப்பில் ஆன்ம வாழ்க்கை பற்றிய சிந்தனை, நாம் ஒழுக்கம் பிறழ்வதேன், சத்திய விளக்கம் போன்ற பத்து தொடர் கட்டுரைகள் அரிய சிந்தனைக்களங்களாக அமைந் துள்ளன. அவை அனைத்தும் தொகுக்கப்பெற்று நூலாக்கப்பட வேண்டியவை.

சேஷாசலத்தின் உள்ளமும் உணர்வும், எண்ணமும், எழுத்தும் கல்வியும் கேள்வியும், சிந்தனையும் சீர்மையும் கலந்து உருவான கலாநிலையம் அவருடைய ஆளுமையைச் சிறப்பித்துக் காட்டும் சான்றாக உள்ளது.

இலக்கிய இலக்கணப் புலமையும், மனித நேய உணர்வும், ஆன்மநேய சிந்தனையும் கூடிக் கலந்த சேஷாசலத்தின் திறமையை அவருடைய இலக்கியப் பணிகள் வாயிலாக மதிப் பிட்டுக் காட்ட முயலலாம்.

# சுவைத்து ஊட்டும் இலக்கியக் கனிகள்

*சுவைத்திறன்*

ஆழப்படித்து அகலச் சிந்தித்து நன்குணர்ந்து கவிதைப் பொருளும் கவிஞர் திறனும் கண்டறிந்து இலக்கியச்சுவை பருகி மனம் களித்துப் பிறருக்குத் தன் மனத்தெழும் உணர்ச்சிப் பெருக்கை உவந்து ஊட்டும் திறமை இலக்கியச் சிந்தனையாளருக்கு இருக்கவேண்டும். படித்துப்புரிதல், சிந்தித்து உணர்தல், சுவைத்து மகிழ்தல், வழங்கிக் களித்தல் ஆகிய வரிசைப்படி நிலைகளில் இலக்கிய அறிஞர் பணி அமைய வேண்டும்.

சுவைத்திறன் மனிதனுக்கு மனிதன் மாறுபட்டு அமையும். ஒருவருக்குச் சுவைப்பது இன்னொருவருக்குக் கசப்பது சுவைப் புலனின் வேறுபாட்டைக் காட்டும். மண்ணின் இயல்பால் நீரின் தன்மை மாறித் தோன்றுவது போன்று சிந்திக்கும் மனத்தின் இயல்பால் இலக்கியத்தின் சிறப்பு மாறித் தோன்றலாம்.

எவ்விதமான முன்முடிவும் இன்றிச் சிந்தனைத் தெளிவுடன் உண்மையான ஆர்வம் கொண்டு இலக்கியத்தை அணுகி அதன் பொருளை நன்குணர்ந்து எத்தகைய கொள்கை சார்பும் இல்லாமல் சிந்தித்தால் அதன் சுவையை உள்ளவாறு அறிய இயலும்.

காய்தலும் உவத்தலும் இல்லாமல் படித்தலும் சிந்தித்தலும் கொண்டு இலக்கியத்தை நெருங்கினால் அதன் உண்மையான இயல்புகளைக் காணமுடியும். இவ்வாறு இலக்கியத்தைப் பருகுவோரால்தான் அதை உண்மையாக உணர்ந்து உள்ளவாறு சுவைத்து உறுதியாகக் கருதியவற்றைப் பிறருக்கு நன்கு எடுத்துச் சொல்ல முடியும்.

இத்தகைய கருத்துக்களை அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டு சேஷாசலம் இலக்கியங்களை எவ்வாறு சிந்தித்துள்ளார் என்பதைக் காணலாம். அவர் தமிழ், ஆங்கில மொழி இலக்கியங்களை மிகுதியாகக் கற்று அவற்றை விளக்கி மிகுதியான கருத்துக்

களைக் கலாநிலையத்தின் வழியாகத் தமிழ் உலகுக்கு வழங்கி யுள்ளார்.

அவருடைய சொற்சித்திரங்கள் இலக்கியக் கடலில் எழும் ஆய்வுச் சிந்தனை அலை வீச்சின் இடையே தெறித்துச் சிதறிய முத்துக்கள் போன்று தோன்றுகின்றன. பல்வேறு இலக்கியங் களை ஆழ்ந்து கற்றதுடன் நன்கு சுவைத்து மகிழ்ந்திருக்கிறார். நுட்ப உணர்வுடன் அவற்றைப் பற்றிப் பல கோணங்களில் சிந்தித்திருக்கிறார்.

தம் சிந்தனைகள் தம்மோடு தேங்கி வற்றி விடக் கூடாது என்ற நினைப்பில் கட்டுரை கால்வாய்கள் வழி தமிழரின் மன நலமும் அறிவுச் சிந்தனையும் செழிக்க அவர்களின் பார்வைக்குப் படும்படியாகக் கலாநிலையம் ஏரியில் தேக்கி வியாழக்கிழமை தோறும் இதழ்மடை திறந்து இலக்கிய அறிவுப் புனலைப் பாய்ச்சி சேஷாசலம் தமிழுக்கு நற்பணியாற்றி உள்ளார்.

ஒரு மொழியில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் சிறந்தவை என்று கூறமுடியாது. மேலும் தோன்றியவற்றை எல்லாம் கற்றுத் தேறவும் முடியாது. ஒவ்வொரு வகை இலக்கியம் ஒவ்வொருவருக்குப் பிடிக்கும். மனதுக்குப் பிடித்ததை மனமுவந்து படிப்பர். ஒருவர் விரும்பிப் படிக்கும் நூலைக்கொண்டே அவருடைய மனநிலையையும் பண்பு நலனையும் புரிந்து கொள்ளலாம்.

சேஷாசலத்தை மிகவும் கவர்ந்த தமிழ் இலக்கியம் கம்பராமா யணம். ஆங்கில மொழியில் சேக்ஸ்பியர் நாடகங்களை மிகவும் விரும்பிச் சுவைத்திருக்கிறார். வால்மீகி இராமாயணத்தை நன்கு படித்துள்ளார். இவை தவிரவும் இம்மொழிகளிலுள்ள பல இலக்கி யங்களைக் கற்று சிந்தனை மலர்களை உதிர்த்திருக்கிறார். பல்வேறு இலக்கியங்களை எவ்வாறு சிந்தித்துள்ளார் என்பதைப் பார்க்கலாம்.

**கம்பராமாயணம்**

சேஷாசலம் கம்பரைப்பற்றி மிக உயர்ந்த கருத்து கொண் டிருந்தார் என்பதைக் கலாநிலையம் முதல் இதழிலேயே நன்கு காணலாம். அதை ஆசிரியரின் உரையாகச் சிறப்பித்துக் குறிப் பிடுகிறார். கம்பரின் கவிகள் கவினழகும் பொருள் நயமும்

மிக்கவை என்பது அவருடைய கருத்து (5-1-1928, ப.1)[1]. இவருடைய மனத்தில் கம்பருக்கு மிக உயர்ந்த இடம் ஒதுக்கப்பட்டிருப்பது தெளிவு. முதல் இதழிலிருந்தே கம்பராமாயணத்தைப்பற்றி சுவை விளக்கம் தரத் தொடங்கி இறுதிவரைத் தொடர்கிறார்.

கம்பராமாயணத்தில் முதற் கட்டுரைக்கு 'ஓடும் ஓடையில் வேதம் ஓதுதல், என்ற தலைப்புக் கொடுத்திருப்பது சிந்தனைக்கு உரியது. கம்பர் பால காண்டத்தில் ஆற்றுப்படலம் பாடுகிறார். சேஷாசலம் அப்பாடல்களில் வேதம் ஓதப்படுவதைக் கேட்கிறார். ஆற்றுப்படலத்தில் ஊறிப் பாயும் கவிஞரின் ஆன்மீகச் சிந்தனையில் கூடிக் களிக்கும் சுவைஞரின் ஆன்மீகஉணர்வை இவ்விளக்கக் கட்டுரை தெளிவாகப் புலப்படுத்திக் காட்டுகிறது.

முதற்பாடலுக்கு உரைவிளக்கம் தரும் பான்மையே சிந்தனைக்கு உரியதாக அமைகிறது. பாடலைத் தந்து விளக்கம் கூறுவதற்கு முன்பே முன்னுரை போன்று ஓர் அழுத்தமான சிந்தனையை முன்மொழிந்திருப்பது சேஷாசலத்தின் சிறப்புத் தன்மையாகத் தோன்றுகிறது. இதை அவரது உத்தி முறைகளில் ஒன்றாகக் கருதினாலும் தவறில்லை.

அவரது முதற்பாடல் விளக்கத்தை விரிவாகவே பார்க்கலாம்.

'கற்பெனும் நற்குணம் சிறந்து விளங்கும் நாடு இக்கோசல நாடு' என்பதுவே இம்முதற் செய்யுளின் கருத்தாயினும் கம்பர் அவ்வளவு சுலபமாக அதைச் சொல்லிவிடவில்லை,

ஆச லம்புரி யைம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்சொலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்'

இப்பாடலுக்குச் சொற்பொருள் விளக்கம் தந்து முதலில் புரிய வைக்கிறார். கோசல நாட்டில் பாயும் சரயு நதியை விளக்க வந்த கவிஞர் ஐம்புலன்களால் மனிதனுக்கு ஏற்படும் துன்பத்தைப் பற்றிக் குறிப்பிடுவதைச் சுட்டிப் படிப்போரின் சிந்தனையைக் கட்டுரை ஆசிரியர் வேறுபக்கம் திருப்புகிறார். பின் மேல் விளக்கம் செய்ய முற்படுகிறார்.

ஐம்புலனுணர்வும் அதனால் நேரும் துன்பங்களும் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது. இருப்பினும் பெண்களின்

கட்புலனைப் பற்றித் திரும்பச் சொன்னதின் காரணம் என்னவர்க இருக்கும் என்ற சிந்தனையில் அவருடைய ஆய்வுக் கண்ணோட்டம் நன்கு புலனாகிறது. எழுப்பிய வினாவுக்கு எழுந்த விடை ஆய்வுப் பெருக்காகப்பாய்கிறது.

'காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம் ஆகிய ஐம்பெரும் குற்றங்களிலும் தம் இந்திரியங்கள் செல்லாவகை இருபாலரும் நிறுத்தினர். இவை ஆடவருக்கும் பெண்டிருக்கும் இயைபு இன்றியே அவரவர் தடுப்பதற்கும் ஆள்வதற்கும் தகுதியான குற்றங்கள்.

ஆனால் ஒழிந்து நின்ற மோகத்தால் வரும் தீமையோ இருவரும் இயையாது ஆகாது. தேர்ந்த மனத்தவராயினும் ஆடவர் சிற்சில சமயங்களில் மையிலங்கு விழிகொண்டு மயலூட்டும் மாதர் கண்களுக்கு இரையாகித் தாம் கைக்கொண்ட நன்னெறி விட்டுப் பிறழ்ந்து விடுவதும் உண்டு என ஓர் குற்றச்சாட்டு இருத்தலால் 'தூயவ ராடவர்; அவர் தூய்மையைக் கலைக்கும், எண்ணும் கருவியும் அங்குத் தூயதேயாதலால் கற்பிற்குக் குறைவொன்றும் வருவதற்கு நிமித்தமில்லை' என்று தோற்றுவிப்பார்போல் மீண்டும் ஒருமுறை நம் கவி நங்கையர் நெடுங்கண்ணைக் கருதிக் கூறுகிறார் (5-1-1929, ப. 8).

இவ்விளக்கத்தோடு அமையாமல் அதற்கு எடுத்துக்காட்டாக மேனகையின் மோகவிழிக்குப் பலியாகி இடருற்று வருந்திய கோசிக முனிவரின் அவலநிலையை விளக்குகிறார். ஆக்கச் சிந்தனையுடன் அழுத்தமாகத் தன் கருத்தை விளக்கிக் காட்டும் ஆற்றலைச் சேஷாசலத்திடம் காணமுடிகிறது.

வீடணன் அடைக்கலம் வேண்டிவரும்போது கம்பர் பாடிய ஒரு பாடலை விளக்கும் முறை குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகிறது. பாடலைப் படித்துச் சிந்தித்து உணர்ச்சி அலைகள் உள்ளத்தில் மோத மனம் திறந்து கூறும் ஆசிரியரின் உரை வியக்கத் தக்கதாக அமைகிறது. இப்படியும் ஒரு மனவெழுச்சியை இலக்கியம் ஊட்டுமா என்று எண்ண வேண்டி உள்ளது.

பாடலறிமுகம் அடக்கமாகவும் எளிமையாகவும் காணப்படுகிறது. ஆர்வத் தூண்டலாக அது அமைந்ததாகக் கூற முடியாது. அதை முதலில் காணலாம்.

'வீடணன் அடைக்கலம் புக இராமனின் பாசறைக்கு வருகிறான். வானரத் தலைவர் அவன் அரக்கன், வஞ்சகன்

உறவாடிக் கெடுக்க வந்துள்ளான்; அவனை ஒழித்திடுக; என்று உறுதியாகக் கூறியபோது பெருமைக்குப் பேரணியான இராமன் கூறுகிறான்;'

இவ்வுரையில் காணப்படும் ஒரு தொடர் கவனத்தை ஈர்க்கும் தரமாகப் பெய்யப்பட்டுள்ளது. 'பெருமைக்குப் பேரணியான இராமன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டுரையாளரின் மனவுணர்ச்சியின் புலப்பாடாகத் தோன்றுகிறது. அதோடு அமையாமல் அவருடைய மனக்குறையின் வெளிப்பாடாகவும் காணப்படுகிறது.

இராமனின் பெருமை பற்றிய பெரும் மதிப்பு அவருடைய மனத்தில் ஆழ வேரூன்றி அகல விரிந்துள்ளது. அதைப் பெருமையோடு வெளிக்காட்ட இந்த இடத்தைப் பயன்படுத்துகிறார்.

அனுமன் வாயால் சீதையைக் 'கற்பினுக்கணி' என்று கூறி வியந்த கம்பர் இராமனை இவ்வாறு ஏற்றமுறக் கூறவில்லையே என்ற ஏக்கத்தில் 'பெருமைக்குப் பேரணி' என்று சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கலாமோ என்று நினைத்துப்பார்க்கும் தரமாக இத் தொடர் இவ்விடத்தில் பதிக்கப்பட்டுள்ளது.

பாடலைக் குறிப்பிட்டு அதற்குரிய தனிச்சிறப்பாக உரை விளக்கத்தில் தம் மிகுவுணர்ச்சியைக் கொட்டிக் கவிழ்ப்பது இத் தொடரில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சிப் பெருக்கின் உடைப்பாக இருக்கலாம். கம்பர் பாடலாக உருவாகிய இராமனின் இதயக் கூற்றைப் பார்க்கலாம்.

'பிறந்தநாள் தொடங்கி யாரும்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டோ வென்னைச்
சரணென வாழ்கின் றானைத்
துறந்தநாட் கின்று வந்து
துன்னினான் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றோ வென்றும்
இருந்தநா ளாவ தென்றான்'

இந்தப் பாடலைத் தந்ததும் கட்டுரை ஆசிரியருக்கு மூண்ட உணர்ச்சிப் பெருக்கு முட்டி மோதிச் சொற்களாக வெடித்து வேகமாக வெளியேறுகிறது.

'இந்தப் பாசுரம் எவரது செவிதோறும் மயிர்க்கால் தோறும் உட்புகுந்து உடலெல்லாம் தோலெலாம் ஊனெலாம் ஊறும் உதிரமெலாம் என்பினுள் துளையெலாம் பரவிப் பரவிப் பரவசமாக்க வில்லையோ அவரெலாம் ஆண்டகை என்பதற்கு ஆள்வது எப்படியோ!

'பிறரது இகழ்ச்சியால் இறப்பதே மேன்மை எனில் அதனின்று தன் மதிவலியால் தப்பினார் என மகிழ்வான் சிறுமைக்கே சிந்தையளித்து உழல்கின்றான் என்று செப்பல் வேண்டும்.

'பிறர் நமக்குத் தீமைபுரிய நிற்குங்கால் அதனின்று தப்பிய போது தம் மதியையோ மற்று வேறோர் விதியையோ நினைத்து மகிழ்கின்றார் மக்களே போன்ற மாக்கள். அவர்களும் அதனுள் அடங்கிய தாழ்மையின் திறத்தை அறிந்து கொள்ளா இழுதைகளே!. (12-2-1931, ப. 101.)

கவிஞரின் கருத்தை விடவும் சுவைஞரின் இதய உணர்ச்சியே மிகுதியாக இந்த விளக்கத்தில் புலப்படுகிறது. பலவிதமான அனுபவங்களின் தாக்கத்தில் ஏற்பட்ட மனக்குமட்டல் இவ்வேகவுரையாக வெளியேறுகிறது. சொற்கள் அத்து மீறிக் கட்டவிழ்த்து விடப்படுவதைக் கவனிக்கலாம்.

தன்னுயிர் நீத்தாயினும் பிறருயிர் காக்க வேண்டும் என்ற பேரறம் இவ்வுரையால் வலியுறுத்தப்படுகிறது. கட்டுரை ஆசிரியரின் மனநிலை இதனால் நன்கு விளங்குகிறது. இத்தகைய விளக்கத்தைக் கட்டுரை ஆசிரியரின் தன்னுணர்ச்சி விளக்கமாகத் தான் கருத முடியும்.

கம்பராமாயணத்தை மிகவும் ஈடுபாடு கொண்டு சேஷாசலம் படித்துப் பல பகுதிகளைச் சுவைத்து மகிழ்ந்துள்ளார். தம்மை மிகவும் கவர்ந்து மெய்மறக்கச் செய்த பகுதிகளை ஆய்ந்து தோய்ந்து அரிய சிந்தனைச் செல்வங்களாக்கித் தமிழ் மக்களுக்குக் கலாநிலையத்தின் வழியாக நல்ல விருந்து படைத்துள்ளார்.

அவருடைய சிந்தனைப் பேழையில் அரிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. கம்பர் தமிழ்க் கவிதை வானில் மங்கா ஒளி மிக்க தாரகையாக விளங்குகிறார். வால்மீகியின் வழி நூலாகக் கம்பராமாயணம் இருப்பினும் பல நிலையில் முதனூலை மிஞ்சி விடுவதை ஒப்பீட்டு ஆய்வு நிலையில் ஆசிரியர் சுட்டிக் காட்டு

கிறார். கதை வரலாறு ஒன்றாயினும் இருவரின் படைப்பாற்றல் வேறுபாட்டால் கம்பரின் படைப்பு இலக்கியத் தரத்தில் மேம்பட்டுக் காணப்படுகிறது.

கருத்தழுத்தம் மிக்க தொடர்கள் கம்பரின் பொருத்தமான பயன்பாட்டால் மகுடத்தில் பதித்த மணியாக ஒளி வீசிச் சிறக்கின்றன. பதித்தச் சொற்றொடரில் உதித்த கருத்துப் பாத்திரப் பண்பைப் பாங்குற விளக்குவதுடன் காவியப் பெருமையை வானளவாக உயர்த்திக் காட்டுகிறது.

சேஷாசலம் இராமனை மாமனிதனாக மதிக்கிறார். கம்பனை மாகவியாகக் கருதுகிறார். கவிதைகளைச் சீர்தூக்கிச் சிந்தித்துப் பல கோண ஆய்வுக்கு உட்படுத்தும்போது இராமனின் சிறப்புக்கும் கம்பனின் பெருமைக்கும் மிகச்சிறு அளவுகூட மாசு ஏற்பட அவர் மனம் ஒப்பவில்லை. அத்தகைய நிலை ஏற்படும் இடங்களைக் காரணகாரியங்களுடன் ஆய்ந்து அலசி மாசகற்றி மாணிக்கமாக்கிக் காட்டிவிடுகிறார்.

கம்பராமாயணம் சேஷாசலத்துக்கு அறிவுச் சுரங்கமாகி விடுகிறது அதைத் தோண்டித் தோண்டிப் பொன்னும் வைரமும் எடுத்து தமிழ் மக்கள் முன் பரிவுடன் வீசுகிறார். சேஷாசலத்தின் இலக்கியச் சிந்தனை கம்பரின் கவித்திறனை விளக்கும் அகழ்வாய்வு போன்றுள்ளது. அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் உலகக் காப்பிய வரிசையில் கம்பராமாயணத்துக்கு ஒரு சிறந்த இடம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

கம்பரின் இதய உணர்வுகள் சொல்லாக்கமாகிச் சிறந்துள்ளதைச் சிந்தனை ஓவியங்களாக்கிச் சேஷாசலம் கவினழகுடன் உலகக் கண்களுக்குக் காட்டுகிறார். ஆன்ம ஒளியும் வாழ்க்கைச் சீரமைப்பும் இணைந்து கம்பராமாயணத்தில் பிணைந்து சிறப்பதைச் சிந்தனை வாயிலாகத் திறந்து காட்டுகிறார்.

## சூளாமணி

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சூளாமணி சேஷாசலத்தைக் கம்பராமாயணம் போன்று கவர்ந்துள்ளது. சொல் நயமும், தொடையினிமையும், செய்யுளோசையும் கனிந்த இப் பாசுரங்கள் தங்கிய மனத்தைத் தன்வயப்படுத்தித் தூய்மையாக்கும் பெருமையால் கம்பரது நூலிற்கு இணையோ என

மதிக்க நினைப்போர் இலராகார் (8-1-1931, ப. 2). சூளாமணிப் பாடல்களைப் பாசுரங்கள் என்று குறிப்பிடுகிறார். அதன் பொருட்சிறப்புப் பற்றிக் குறிப்பிடாது விட்டது சிந்தனைக்கு உரியது.

சூளாமணி அவருடைய காலத்தில் கிடைப்பதற்கு அருமை யாக இருந்துள்ளது. அதனை ஒரு கலைப்பொருளாகக் கருதிச் சிறப்பிக்கிறார்.

‘கலையினது இலக்கணம் ஆயிரம் கூறினாலும், கலை நூல் இலக்கணம் ஆயிரம் கேட்டாலும், அது கலைப்பொருள் ஒன்றைத் துய்த்து மகிழ்வதற்கு இணையாகாது. அத்தகைய கலைப் பொருளில் ஒன்று சூளாமணி.

‘சிறந்த காவியங்களுள் ஒன்றாய் இந்நூல் விலைக்குக் கிடைப்பதற்கு அரிதாய்க் கிடப்பதாலும், யாம் (சேஷாசலம்) அறிந்தவரையில் இதுகாறும் யாரும் அதற்கு உரையெழுத முயன்றிலர் ஆதலாலும் யாம் அதனை உரையோடு இவ்விதழ் களில் வரைந்து வைக்க முன்வந்தோம். (8-1-1931, ப.2). உரையெழுதப்படாத பாடல்களுக்குப் பொருள் கண்டு உரை யெழுதுவது மிகவும் கடினம். துணிவுடன் இப்பணி செய்ய இவர் முன்வந்தது இவரது ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் காட்டு வதாகும். தாம் பெற்ற இலக்கிய இன்பத்தைப் பிறருடன் பகிர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற தணியா ஆவலே இத் தகைய துணிவுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

கம்பராமாயணத்துக்குப் பொருள் விளக்கிச் சிந்திப்பது போலன்றிச் சூளாமணிக்குப் பொருள் கண்டு விளக்கும் முறையில் குறிக்கத்தக்க மாற்றம் காணப்படுகிறது. தானே முதலில் அதற்கு உரையெழுதுவதாகக் கருதியதினால் இந்த முறையைக் கைக்கொண்டிருக்க வேண்டும்.

பாடலை முதலில் தந்து அதற்குச் சொற்பொருள் தந்து அதை எளிமையாகப் புரிய வைக்கிறார். அடுத்து, கருத்து விளக்கம் சிறிது நுட்பமாகத் தரப்படுகிறது. இலக்கணச் சிறப் புடைய தொடர்கள் குறிப்பிடப்பெற்று விளக்கப்படுகின்றன. பொருள் விகற்பங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. தேவையான பாடல்களுக்கு ஆசிரியரின் சிறப்பு விளக்கம் இறுதியில் தரப் படுகிறது.

எந்தப் பாடலாவது சிலேடையாக இருப்பின் அதற்கு இரு வகையாகச் சொற்பொருள் விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஏழாவது பாடலுக்குத் தந்துள்ள இருபொருள் விளக்கம் நயமாக அமைந்து ஆசிரியரின் பொருள்காண் திறனைச் சிறப்பித்துக் காட்டுகிறது. சொற்களின் புணர்ச்சி முறைகள் சுட்டிக்காட்டப் படுகின்றன.

ஆசிரியரின் சிறப்பு விளக்கம் பெற்றுள்ள 1 7, 8, 10, 12, 13, 16, 21 போன்ற பல பாடல்கள் சுவைத்து மகிழத்தக்கவைகளாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பல கோண பார்வைக்கு உட் படுத்திச் சிந்தனைக் கலவையாக்கிப் பொருள் கனியச் செய்து உரை விளக்கம் தருகிறார். அவரது கருத்துரைகள் சூளாமணி யின் சிறப்புக்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன.

பொருள் விளக்கம் செய்யும்போது பிற இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டிக் கருத்துச் சீர்மையைப் புலப்படுத்துகிறார். இலக்கியத் தரத்தை வரையறை செய்வதற்கு இம்மாதிரி மேற் கோள் விளக்கம் நன்கு உதவும்.

பத்தாவது பாடலுக்குச் சீவக சிந்தாமணியிலிருந்தும் பன்னி ரண்டாம் பாடலுக்குப் புறநானூற்றிலிருந்தும் இருபத்தி மூன்றாம் பாடலுக்கு நளவெண்பாவிலிருந்தும் மேற்கோள்கள் காட்டப்படுகின்றன.

பாடல்களுக்கு ஆசிரியர் தரும் தன் விளக்கமே அவருடைய சிந்தனைத் திறமைக்கு உரைகல்லாக அமைகிறது. ஒரு பாட லுக்கு அவர் தரும் தன் விளக்கத்தைக் காணலாம்.

'கலவர்தஞ் சிறுபறை யிசையிற் கைவினைப்
புலவர்தேம் பிழிமகிழ் குரவை பொங்கும்
குலவுகாற் கோவலர் கொன்றைத் தீங்குழல்
உலவுநீ ளசுணமா வுறங்கு மென்பவே' (33)

இப்பாடலுக்குரிய சொற்பொருள் விளக்கத்தை முதலில் தந்து, பாடற்பொருளை விளங்கவைத்த பின்னர் தன் சிறப்பு விளக் கத்தை நிறைவாகத் தருகிறார்.

கலவர்தம் — நெய்தநில மக்களது (சொற்பொருள்)
கலவர் — கலம் உடையவர் கலவரென்றாயது

அவ்வாறே புலவர் — புலம் உடையவர் (புலம் — வயல்) என்றும் பொருள்கொண்டு மருதநில மக்களென்றும் உரைக்கலாம். எனினும் கைவினை என்பது நுண்கலையைக் (Fine arts) குறிக்கும். கூத்து அல்லது நாடகம் நுண்கலையாதலால் இங்குப் புலவர் என்பதைக் கூத்தர் என்ற பொருளில் கொண்டோம்.

குரவை என்பது ஒருவகைக்கூத்து. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் 'குரவையாவது எழுவரேனும் ஒன்பதின் மரேனும் கைகோத்து ஆடும் கூத்து' என்றார். ஐங்குறுநூற்று உரை ஆசிரியர் குரவையை மகளிர் தம் காதலரோடு ஆடுமாட்ட மெனக் கொண்டுள்ளார் என்று தோன்றுகிறது.

இச்செய்யுளில் முன்னிரண்டு அடிகள் நெய்தலுக்கும் மருதத் துக்கும் திணை மயக்கம் காட்டுவன. மருதத்துக்குக் குரவை உரியதெனக் கம்பரும் பின் கருதினார். பின் இரண்டு அடிகளும் முல்லைக்கும் குறிஞ்சிக்கும் ஆம். 'குலவுகால் கோவலர்' என்றது குழல் வாசிக்கும்போது ஒரு காலை மறுகாலின்மீது வளைய வைத்து நிற்றல் வழக்கமாதலின். 'குலவுச் சினைப் பூக்கொய்து' என்னும் தொடர்க்கு 'வளைந்த கோட்டுப் பூவைப் பறித்து' எனப் பொருளுரைப்பர் புறநானூற்றுரை கண்டவரும்.

அசுணமா — கேகயப்புள். இது மலையில் வாழ்வதும் இசை நுணுக்கம் அறியவல்லதும் எனக் கருதப்படுகிறது. 'கோதில் யாழ் நறைபடுத்த அசுண நன்மா' என்றார் கம்பரும்.

ஈற்றுச்சீர் 'என்பவே' என்பது அசை (22-1-1931, ப. 47).

உரையெழுதப்படா இலக்கியத்துக்குப் புதிதாக ஒருவர் உரை யெழுத முற்படும்போது எழும் சிக்கல்கள் எத்தன்மையான என் பதையும் எத்தகைய அறிவாக்கம் கொண்டோர் உரை எழுத முனைய வேண்டும் என்பதும் இவ்வுரை கண்டவர்களுக்கு ஓரளவு விளங்கும்.

அகராதிப் பொருளோடு நிறைவடையாது பழைய உரை யாசிரியர் பொருளையும் நுண்மையாகக் கண்டு பொருண்மை யோடு சிந்தித்திருப்பது உன்னுதற்கு உரியது. 'குலவுகால்' என்ற தொடர் இம்முறையால் சிறப்புற்றது.

**குரவைக்கூத்து நிலத்துக்கு நிலம் வேறுபடும். நெய்தலுக் குரிய குரவையை இவ்வுரையாசிரியர் நினைத்துப் பார்க்கவில்லை.**

நினைத்திருந்தால் முதலிரண்டு அடிகளில் அவர் குறிப்பிட்டுள்ள திணை மயக்கம் ஐயத்துக்கு உரியதாகிவிடும்.

'புலவர்' என்பதற்கு அவர் உரைகண்ட முறை சிறப்பாக உள்ளது. ஆனால் இது, இசைப் புலவரைக் குறிக்கிறதா? கூத்தரைக் குறிக்கிறதா? என்பது பற்றியும் சிந்தித்திருக்க வேண்டும். தாளவிசை பற்றிய குறிப்பு 'சிறுபறை இசை' என்பதில் அடங்கிவிடுகிறது. பண்ணிசையும் குரவைக்கூத்துக்கு உண்டு என்றால் இசைப் புலவருக்கு அங்கு இடம் ஒதுக்க வேண்டும். அக்கால அருங்கலை ஆக்க முறை தெளிவாக அறிய முடியாத ஒன்றாக இருப்பதினால் உறுதியான பொருள் கூறுவது அரிய முயற்சியாகவே உள்ளது.

ஆயினும் சேஷாசலம் சூளாமணிக்கு முதலுரை காண முயன்றது அவரது துணிவையும் மிக முயன்று உரை கண்ட அவரது அறிவுப் பரப்பையும் உறுதிப்படுத்திக் காட்டுகின்றன.

தோலாமொழித் தேவரின் உவமை கூறும் திறனைச் சூளா மணிப் பாடல் ஒன்றின் வாயிலாக விளக்கும் சேஷாசலத்தின் சிந்தனை ஓட்டம் நாம் கண்டு மகிழத்தக்கதாக உள்ளது. உவமைப் பொருத்தமும் ஊறும் பொருளும் விளக்கம் பெற்றுச் சுவையூறிச் சிறப்பதைப் பார்த்து இன்புறலாம்.

'அகிலெழு கொடும்புகை மஞ்சி னாடவும்
முகிலிசை யெனமுழா முரன்று விம்மவும்
துகிலிகைக் கொடியனார் மின்னிற் றோன்றவும்
இகலின மலையொடு மாட மென்பவே' (40)

பாடலுக்குச் சொற்பொருள் விளக்கம் தந்து நன்கு புரியவைத்த உரையாசிரியர் இதில் கூறப்பெற்றுள்ள உவமைச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார்.

வெளிப்படப் புலனாகும் உவமைப் பொருளைச் சொற் பொருள் விளக்கத்தில் காட்டியவர் சிறப்புப் பொருளைத் தன் விளக்கமாகத் தனித்துக் கூறுகிறார். படிப்போர் கவனத்தைத் தனித்து ஈர்க்கும் தரமாக இம்முறை அமைகிறது.

'மலைக்கும் மாடத்திற்கும் இருக்கும் பொருத்தத்தைக் காட்டி உவமை கூறியதால் இது ஏதுவுவமையணி. மஞ்சு என்பதற்கு வெண்மேகம் எனக் கூறுவர் நச்சினார்க்கினியர். அகிற்புகை வெண்மையாக இருப்பதினால் மஞ்சு போன்றது. தம் கூந்தற்கும் ஆடைக்கும் மாடத்துள்ளிருக்கும் மாதர் அகிற்புகை ஊட்டுவர்.

'இன்' உருபுகள் எல்லாம் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருளன. மஞ்சின் நாடவும் எனப் பிரித்து மேகம்போல் நெருங்கிச் சூழவும் என்று பொருள் கொள்ளினும் அமையும்.

மஞ்சின் ஆடவும் — மேகம்போல் திரிவதாலும் (அதனருகில்)
(29-1-1931, பக். 67-68)

அணியின் பொருத்தம் கூறிப் பெயர் விளக்கம் செய்வதில் அணியிலக்கண அறிவுபெற வழியுள்ளது. தொடர்களை எப்படியெல்லாம் பிரிக்க முடியுமோ அப்படியெல்லாம் பிரித்துப் பொருள் காண முயல்கிறார். பொருத்தமான பொருளை ஏற்றுக்கொள்ளச் செய்கிறார். இலக்கணப்புலமை பொருள் காண்பதற்கு மிகத் தேவை என்பதை நன்கு புலப்படுத்திக் காட்டுகிறார்.

இன்னொரு சூளாமணி பாடலில் இடம்பெறும் ஒரு தொடருக்கு அவர் கண்டுள்ள பொருள் பொருத்தமாக இருந்தாலும் சற்று சிந்தனைக்கு உரியதாக இருக்கிறது. கால இடப் பழக்கத்தை ஒட்டிய ஓர் ஐயம் எழ இடம் உள்ளது.

'தாழிவாய்க் குவளையுந் தண்ணெ னோதியர்
மாழைவா ணெடுங்கணு மயங்கி வந்துசென்
றாழிவார் மின்குர லாலித் தார்த்தரோ
வேழைவாய்ச் சுரும்பின மிளைக்கு மென்பவே' (43)

'தாழிவாய்க் குவளை' என்பதற்கு அவர் பொருள் கண்டுள்ள முறையைப் பார்க்கலாம்.

தாழிவாய்க் குவளை—சாடிகளில் அலங்காரமாக வைத்துள்ள குவளை மலர். தாழ்ந்திருப்பது தாழியாகக் குளமெனப் பொருள் கொள்ளலாம் எனினும் மாடங்களை வருணிக்கும் பாகத்தில் இச் செய்யுள் வருவதால் தாழிவாய்க் குவளை என்பதற்குப் பூப்பெய்து அலங்காரமாய்க் கூடத்தில் வைக்கும் (Flower vas) சாடியிலுள்ள குவளை எனப் பொருள் கொண்டோம். குளத்துக்கும் மாடத்துக்கும் வண்டுகள் மாறிமாறிப் பறந்து இளைத்தன என்பதும் பொருந்தும். (29-1-1931, பக். 68)

இப்பொருள் விளக்கம் உரையாசிரியரின் ஐயப்பாட்டையும் புலப்படுத்தும். ஆயினும் பொருள் கண்டுள்ள முறையும் சிந்தனையும் சிறப்புடையன என்பதற்கு ஐயமில்லை. இக்கால வழக்கம் அக்காலத்தில் இருந்திருக்க முடியாது என்று கூற முடியாது.

சேஷாசலம் சூளாமணியைப் படிக்க முயன்றதும் அதை நன்கு புரிந்து சுவைத்ததும் பின்னர் அதற்குச் சிறப்பான உரையெழுதி இலக்கியப் பெருமையை உணர்த்தியதும் அறிஞர் உலகம் பாராட்டத்தக்கதாகும்.

நூலின் முற்பகுதிக்கு முறையாக உரைவளம் கண்ட ஆசிரியர் பிற்பகுதிக்கு அவ்வாறு எழுதாது, பாடல்கள் தராது உரை விளக்கம் செய்வதின் காரணம் புரியவில்லை. சூளாமணி முழுவதற்கும் முழு விளக்கம் தராது விட்டது இலக்கிய ஆர்வலர்க்கு வருத்தம் தருவதாகும்.

இருப்பினும் சேஷாசலம் செய்த பணி குறைமதிப்புடையது அன்று. ஓர் இலக்கியப் படைப்புக்குப் புதிதாக எழுதுவதற்கு உரிய வழிமுறைகள் செயல்முறையாகக் காட்டப்பட்டுள்ளதாகக் கருதலாம். இப்பணி தமிழுக்கு உரியது. இதை உரியவர் சிந்தித்துக் கலாநிலையத்திலிருந்து பெயர்த்தெடுத்து என்றுமுள்ள தமிழுலகுக்கு வழங்க முயற்சிக்க வேண்டும். இதனால் தமிழ்ப் பாடல்களுக்கு உரைகாணும் முறையே செம்மையாக மாறலாம்.

கம்பராமாயணத்துக்கும் சூளாமணிக்கும் சேஷாசலம் விளக்கவுரை தருகிறார். இரண்டும் பயனுடையவை என்பது உண்மை. ஆனால் கம்பரின் இதயக்குரலும் ஆன்ம உணர்வும் வேறுபடுவதை ஆசிரியர் நன்கு அறிந்தே உரை விளக்கம் தருகிறார்.

ஆயினும் சூளாமணியைக் 'கம்பரின் நூலிற்கு இணையோ' என மதிக்க நினைப்பது (8-1-1931, ப. 2) சிந்தனைக்கு உரியதாகிறது. கம்பரின் நோக்கும் போக்கும் தோலாமொழித் தேவருடையதிலிருந்து வேறுபட்டது. படைப்புத் திறனிலும் கருத்து அழுத்தத்திலும் இருவரும் வேறுபடுகின்றனர். கம்பராமாயணம் இலக்கியத் தரம் மிக்கது.

### நூல்வெண்பா

இலக்கியப் பணி வேறு கல்விப்பணி வேறு என்று நன்குணர்ந்த சேஷாசலம் தமிழ்ப்பாடம் என்ற பகுதியைக் கலாநிலையத்தில் தொடங்கி நூற்றுக்கு அதிகமான பாடங்களை எழுதி இருக்கிறார். இது ஒரு நல்ல பணியாகத் தெரிகிறது. இதைப்பற்றி அவரே கூறுகிறார்.

'பேசுவதுடன் எழுதவும் படிக்கவும் மாத்திரமல்லாது வேறு எவ்விதப் பயிற்சியும் இல்லாதவரும் சிறிது காலத்துக்குள் தமிழ்ப் பாஷையில் தேர்ச்சியுற்று எடுத்த நூலைப் பிறர் உதவியின்றித் தாமே வாசித்தறிந்து அனுபவிக்கக்கூடியவர்களாகும் பொருட்டு வாரம்தோறும் போதனா முறையில் இப்பாகம் எழுதி வருவோம்' (5-1-1928, ப. 13).

இலக்கியச் செய்யுள் வாயிலாக இக்கல்வி தரப்படுகிறது. மொழி என்ற பெயரால் எதையெதையெல்லாமோ பாடங்களாக்கி மோதல் பயிற்சியளிக்கும் பாவச் செயலைச் செய்யாது சரியான படிப்பைச் சரியான முறையில் சிரமம்பாராது நன்கு முயன்று நன்மை நாடிக் கொடுக்க வேண்டும் என்ற உண்மையான ஆர்வத் துடிப்பில் இப்பாடங்கள் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளன.

முதன்முதலில் நளவெண்பாவைக் கொண்டுப் பாடப் படிப்புத் தொடங்குகிறது. இதைப் பற்றிச் சிந்திக்கும்போது பேராசான் தெங்கம்புதூர் முதுபெரும் புலவர் தா. சாஸ்தாங்குட்டிப் பிள்ளை கூறிய கருத்து நினைவுக்கு வருகிறது. 'தமிழ் இலக்கண இலக்கியம் படிக்க விரும்புவோர் முதலில் நளவெண்பாவை நன்கு படிக்க வேண்டும். அதிலுள்ள பாடல்களை மனப்பாடம் செய்தால் மிக எளிதாக வெண்பா பாடும் திறனைப் பெறலாம்' (தமிழ்ப் பாடம் தொடங்கும்போது நேரில் கூறியது, 1963).

சேஷாசலம் தமிழ்ப் பாடத்தை நளவெண்பாவில் தொடங்கியது சரியாகவே படுகிறது. அதன் கதை வரலாறு, கட்டுக்கோப்பில் சிக்கல் அதிகம் இல்லாதது. ஆகையினால் எளிதாகப் புரிந்துகொள்ளலாம். பாடல்கள் படிக்கச் சுவையாகவும் எளிமையாகவும் இருக்கும். எந்நிலை நோக்கினும் நளவெண்பாவில் கடினம் இல்லை. தமிழ்ப் படிக்க விரும்புவோருக்குச் சரியான நுழைவாயிலாக நளவெண்பாவைக் கருதலாம்.

அவ்வாயிலை அகலத் திறந்து தமிழின் மாண்பையும் மதிப்பையும் கண்டு மகிழத் தமிழரை ஆர்வத்துடன் அழைத்து தமிழமுதைச் சேஷாசலம் ஊட்டத் தொடங்குகிறார். இலக்கியச் சிந்தனை பகுதி போன்று இலக்கியப் பாடப்பகுதி அமையவில்லை.

சொற்பொருள் விளக்கம் மிக எளிமையாகத் தரப்படுகிறது. தமிழைச் சுமாராகத் தெரிந்தவரும் நன்கு புரிந்து சுவைக்கும் தரமாக உரை வகுத்துக் காட்டப்படுகிறது. கவிதை விரிவாகப் பின்விளக்கம் கூறப்படுகிறது. ஆய்வுரைக்கு அங்கு இடம் ஒதுக்

கப்படவில்லை. ஊடே ஊடே இலக்கணப் பாடம் இனிதாகவும் சுவையாகவும் புகட்டப்படுகிறது. அங்கு இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பப்படுகிறது.

நளவெண்பா பாடலொன்றை எடுத்து அவர் எவ்வாறு பொருள் விளக்கமும் இலக்கணக் கல்வியும் தந்து தமிழ்ப் பாடம் நடத்துகிறார் என்பதைக் காணலாம்.

'காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப் — பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு'

இப்பாடலுக்குப் பதப்பிரிவு, அன்வயம், பதவுரை, கருத்து விளக்கம், விரிவுரை ஆகிய ஆறு பிரிவுகள் வகுக்கப்பட்டு விளக்கங்கள் தரப்படுகின்றன. விளக்கப் பிரிவில் இலக்கண அறிவு புகட்டப்படுகிறது. இலக்கணம் கற்பிக்கப்படும் முறையைச் சிறிது பார்க்கலாம்.

தகைமைத்து — தன்மையை உடையது. இதுதான் இச் செய்யுளுக்குப் பயனிலை.

எது தகைமைத்து? நாடு — நிடதநாடு, இது எழுவாய். இலக்கணம் கூறியபின்னர் சிறப்பு விளக்கம் தரப்படுகிறது.

நிடத நாட்டில் கயலும் காவியும் தாமரையும் இருந்தன வென்றால் பூமிக்குக் கண் போன்று எப்படி அது ஆயிற்று ? மீன், நீலமலர், தாமரை இலை மாதர்களின் கண்ணிற்கு உவமையாகக் கூறப்படும் பொருட்கள். மீனாக்ஷி, நீலயதாக்ஷி, பத்மாக்ஷி அல்லது பங்கஜாக்ஷி என்னும் பெயர்களில் இதன் வழக்கத்தைக் காணலாம் (5-1-1928, ப. 13).

முதலில் நன்கு பொருள் விளக்கிக் காட்டி விடுவதினால் மேல் வருவன தேவைக்குத் தக்கவாறு குறிப்பு விளக்கங்களாகத் தரப்படுகின்றன. கம்பராமாயணம் போன்று சிந்தனை மிக்க ஆய்வு விளக்கங்கள் இடம்பெறவில்லை.

நாலாம் பாடத்தில் 9, 10 ஆகிய இரண்டு நளவெண்பா பாடல்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன. அவற்றுள் உருவாக்க சிறப்புமிக்க ஒன்பதாவது பாட்டைச் சேஷாசலம் அணுகிக் கற்பிக்கும் முறை சிறப்பாகத் தோன்றுகிறது.

'வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்-தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக'

இப்பாடலில் வதனமதி, மதிபூத்த பூங்குவளை, குவளைக்காடு ஆகிய தொடர்கள் சிறப்பாக விளக்கப்படுகின்றன. 'வதனமதி' என்பது உருவக அணி. வதனம் என்பது முகம். மதிவதனம் என்றிருப்பின் அது மதி போன்ற வதனம் என்று விரிந்து உவமை அணியாகிவிடும். ஆனால் இத்தொடர் வதனமாகிய மதி என்று விரிவதால் உருவக அணியாகும்.

'மதிபூத்த பூங்குவளை' — இது சந்திரனில் பூத்துள்ள அழகான குவளை மலர் என்று பொருள்படும். இது இல்பொருள், இருப்பினும் நன்கு பொருந்தும் பொருள். மதி முகத்துக்கும் குவளை கண்ணுக்கும் உவமையாக முகத்தில் இருக்கும் கண் 'மதிபூத்த குவளை' ஆகிறது.

'குவளைக்காடு', தெருவில் செல்லும் நளனை, மாடங்களில் நின்று இமையாது நோக்கும் பெண்களின் கண்களுக்கு உருவகம். குவளைக் காடாகிய மகளிர் கண்பார்வைக்கிடையே நளன் நடந்து செல்கிறான். (26-1-1928, ப. 69-70).

பாடலின் பொதுப்பொருள் தருவதுடன் அணி விளக்கம் மிக விரிவாகத் தரப்படுகிறது. இத்தகைய சிறப்பு விளக்கம் படிப்போரைக் கவர்ந்து தமிழின் பெருமையைப் பறைசாற்றும். இதனைப் படிப்போர் மனதில் புகழேந்திப் புலவர் ஓர் உயரிடம் பெற்றுச் சிறப்பது உறுதி.

சேஷாசலம் நளவெண்பாவைக் கொண்டு நடத்தும் தமிழ்ப் பாடம், ஓர் இலக்கிய விளக்கப் பகுதியாக அமைந்து பெரும் பயன் தருகிறது. இலக்கியமும் எளிமை, பொருள் விளக்கமும் எளிமை. இரண்டும் படித்துச் சுவைக்க இனிமையாக உள்ளன.

ஈடுபாட்டுடன் படிக்காமல் இத்தகைய சிறப்பான முறையில் பொருள் விளக்கம் தரமுடியாது. தமிழ்ப்படிக்க விரும்புவோர் நன்கு விரும்பி அதைக் கற்று மகிழவேண்டும் என்ற ஆர்வ மிகுதியே இவ்வாறு நல்விளக்கம் தர அவரைத் தூண்டியிருக்க வேண்டும். இது நளவெண்பாவுக்கு ஒரு புதுமலர்ச்சியாகும்.

## பிற தமிழ் இலக்கியங்கள்

சேஷாசலத்தைத் தவிரவும் வேறு சிலரும் தமிழ் இலக்கிய விளக்கங்களை விரிவாகக் கலாநிலையத்தில் எழுதுகின்றனர். இவர் கம்பராமாயணம், சூளாமணி, நளவெண்பா ஆகியவற்றைக் கூடியவரை முழுமையாக விளக்கம் தர முயன்றுள்ளார். வேறு சில இலக்கியங்களில் குறிப்பிட்ட சில பாடல்களுக்கு மட்டும் இலக்கிய நயம் காண முற்பட்டுள்ளார்.

கலித்தொகையில் ஒரு பாடலுக்குப் பொருள் விளக்கம் செய்து நயம் கண்டு உரைக்கிறார். நயம் கண்ட இடத்தை மட்டும் பார்க்கலாம்.

'தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
ஈரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை'
(மருதக்கலி, பாடல் 1)

பரத்தையுடன் இன்புற்றுத் திரும்பிய தலைவனை நோக்கித் தலைவி அவன் குணமிலாச் செய்கையைச் சுட்டிக்காட்டும் பாடல்.

இப்பாடலுக்கு உரிய சொற்பொருள் விளக்கத்தை முதலில் தந்து விடுகிறார். பின் தனியாகச் சிறப்புப்பொருள் செறிந்த 'ஈரணி' என்ற தொடரை எடுத்துக் கொள்கிறார்.

தலைவன் தனக்குரிய ஆண் அணியோடும் பரத்தையின் அணியோடும் வந்து நின்றான். ஆதலின் தலைவி ஈரணி என்றாள் (23-5-1935, ப. 333). 'ஆணணி, பரத்தையணி' என்னும் தொடர்களில் ஒன்றன் உயர்வையும் மற்றதன் தாழ்வினையும் முன்பின் நிறுத்தித் தலைவனின், பரத்தை ஒழுக்கத்தின் இழிவை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

'மதுகரம்' என்ற புனைபெயரில் 'மலர்வனம்' என்ற தலைப்பில் பல்வகைத் தமிழ்ப்பாடல்கள் சேஷாசலத்தால் சுவை யூறப் பரிமாறப்படுகின்றன. இவர், இலக்கியப் பூங்காவில் மணம் மிக்க கவிதை மலர்களில் இனிதாக ஊறும் நயமாகிய தேனை உண்டு மகிழும் வண்டாகத் தன்னைக் கருதியதனால் 'மதுகரம்' என்ற புனை பெயரைச் சூடியது மிகப்பொருத்தம். தம் இலக்கிய உந்துதலில் எழுதும் கட்டுரைப் பொழிலுக்கு 'மலர் வனம்' என்ற பெயரமைத்தது மிகச்சரி.

ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பா மாலையில் அமைந்துள்ள ஒரு பாடலை எடுத்துக் கொள்கிறார்.

'திங்கள் விளங்குத் திகழ்ந்திலங்கு பேரொளி
யங்கண் விசும்பி னகத்துறைக-செங்கட்
குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
பயில்வளையை நல்கிய பால்'

துறக்கமும் நிரயமும் மாந்தர் விதியின் வயத்தினால் எய்துவர். மற்றவ் விதிக்கே தானும் ஒரு துறக்கம் அளிப்பதற்குரிய அதிகாரம் காதலர் கண்ணே உளது போலும்.

விதியால் மாந்தர் பெறத்தக்கதைக் காதல் ஈடேற உதவிய விதிக்கு உவந்தளிக்கும் காதலனின் மனவெழுச்சியை இப் பாடல் உடைத்துக் காட்டுகிறது. இத்தகைய உணர்வை உவந்து காணும் ஆசிரியர் அதை வியந்து கூறுகிறார். 'விதி வழங்கிய காதலும் வாழ்க' காதல் மிகுதியால் விதியை வாழ்த்திய செம்மலும் வாழ்க' என்று உணர்ச்சி மிகுதியால் வாழ்த்தித் தன் விளக்க வுரையை நிறைவு செய்கிறார். (18-4-1924, ப. 316).

சேஷாசலம் ஒரு பாடலைப் படிக்கும்போது அதன் பொரு ளுணர்ச்சியைத் தன்னுணர்ச்சியால் கண்டறிந்து அதில் மூழ்கித் திளைக்கிறார். அவருடைய சொற்கள் உணர்ச்சிப் பரிமாற்ற வாயில்களாக அமைகின்றன.

மணிமேகலைக் காப்பியத்தை முற்றிலும் ஓதியறிகிறார். மணிமேகலை துறவுபூண்டு ஒழுகும் திறனைப் பற்றிச் சிந்திக் கிறார். உலக இயல்பு, மாந்தர் இயல்பு, மணிமேகலை துறவு இயல்பு, சாத்தனாரின் கவிதை இயல்பு அனைத்தும் கூடிக்கலந்து சேஷாசலத்தின் சிந்தனை இயல்பைத் தட்டி எழுப்புகின்றன.

இலக்கியச்சுவை பீறிடுவதாக உணர்கிறார். நயம் மிக்க இடமாக இது அவருக்குத் தோன்றுகிறது. பரத்தமை வாழ்க்கைச் சூழலில் இளமையின் உணர்ச்சி உந்தல் நெக்கித் தள்ளும் பருவத் தாளை, இளவரசனின் காதல் துரத்தலையும் மீறிக் கட்டுப் படுத்தும் தாயின் துணைகொண்டு தவறாத தவத்தை மேற் கொள்ளச் செய்த சீத்தலைச் சாத்தனாரின் கவிதையாற்றல் சேஷாசலத்தைக் கவர்கிறது.

உடனே மலர்வனம் புக்க மதுகரமாக மாறுகிறார். உணர்ச்சிப் பெருக்காக அவரது பேனா விரைகிறது. மணி மேகலை 'தனதன்னை பூட்டிவிட்ட தவநிலை தளராமல் நிறை காத்த நேர்மையை நுண்ணிதின் ஓதிய சீத்தலைச் சாத்தனாரின் திறத்தை நினைக்கும்தோறும் நினைப்பவர் சித்தம் தெளிவுறத் திகழாதோ! பித்தம் தெளிய மருந்து வேறுதான் உண்டோ!' (6-12-1928, ப. 976).

ஒரு பாடலை ஆழ்ந்து படித்தவுடன் சேஷாசலம் அக்கவிதை உணர்ச்சியில் மூழ்கித் திளைத்துத் தன்னை மறந்து விடுகிறார். தம் உணர்ச்சியைத் திறந்து காட்டுகிறார். அது மிகையோ என்று கருதத் தக்க அளவு உடைப்பெடுத்துப் பாய்கிறது. ஆனால் அவரொத்த உணர்ச்சிமிக்க சிந்தனை உடையோர் அவரோடு இணைவரே அன்றிப் பிணையாது இரார். இலக்கியத்தைக் கலையாகவே கண்டு களிக்கும் தன்மை இவரிடம் மிகுதி.

சிலப்பதிகாரம் சேஷாசலத்தால் நன்கு போற்றப்பெற்றுள்ளது. அதில் இடம்பெறும் கானல்வரிப் பாடல்கள் அவரை ஆய்வுக் களத்தில் இறக்கிப் பெரிதும் சிந்திக்கச் செய்துள்ளன. இப்பாடல்களால் கோவலனும் மாதவியும் பிரிந்ததின் காரணத்தை விரிவாக ஆய்கிறார்.

கோவலன் பாடிய 'திங்கள் மாலை வெண்குடையான்' என்று தொடங்கும் பாடலும் மாதவி இசைத்த 'மருங்கு வண்டு..............' எனத் தொடங்கும் பாடலும் விரிவான சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இருவரும் தம்தம் பாடலில் கொண்ட பொருளும் ஒருவர் பாடலுக்கு ஒருவர் பொருள் மாறி உணர்த்தலும் அவ்வாறு மாறியுணர்ந்ததற்கு உரிய வாழ்வியல், உளவியல் காரணங்களும் விரிவாக அலசப்படுகின்றன. (3-11-1929, பக். 775-776).

கோவலனுக்கும் மாதவிக்கும் இசைவாகவும் மாறுபாடாகவும் பொருளமைவு பெற்ற பாங்கை விளக்கி, இத்தகைய பாங்குடன் இசைப்பாடல்களைப் பொருளிசைச் சிறப்புடன் மிகத் திறமையாகக் கலைத்தன்மை பொலியப் பாடிய இளங்கோவைப் பாராட்டிச் சேஷாசலம் மனநிறைவு அடைகிறார்.

ஒரு பாடலை எவ்வாறெல்லாம் சிந்திக்க இயலுமோ அவ்வாறெல்லாம் சிந்திக்க முயலுகிறார். பொருத்தமானதை ஏற்று மனத்தெளிவடைகிறார். இலக்கியச் சிந்தனை, கொள்கைகளை வகுக்க இவருடைய இலக்கிய கட்டுரைகள் பெருந்துணை செய்யும் என்பது உண்மை. சிலப்பதிகாரப் பாடல்களை இவர் நோக்கும் முறை மிக நுட்பமானது.

திருக்குறள் சேஷாசலத்தின் மனதை மிகவும் கவர்ந்துள்ளது. குறிப்பிட்ட சில குறட்பாக்கள் அவரால் சிறப்புப்பொருள் பெறுகின்றன. கடவுள் வாழ்த்துப் பகுதியிலுள்ள இரண்டாம் குறள் அவரை நன்கு ஈர்த்துள்ளது.

'கற்றதினா லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

பழமுதிர்சோலையில் கனிந்த சுவைக்கனியாக இக்குறளைத் தேர்ந்தெடுத்து, இராமனுக்கு இன்கனி கொடுத்து மகிழ்ந்த சபரியின் பெயரைப் புனைபெயராகக் கொண்டு பழமுதிர்சோலை என்ற தலைப்பில் இந்தக் குறள் விளக்கப்படுகிறது. (2–1 1930, ப. 16).

இதை ஆன்மீக உணர்வுமிக்க பாடலாக ஆசிரியர் கருதுகிறார். கற்பதினால் விளையும் பயன் இறைஞானமாக இருக்க வேண்டும். இறைஞானம் பெற்று இறையடி போற்றிப் பணிதல் வேண்டும். அத்தகைய மெய்ஞ்ஞானம் அருளாத கல்வியால் பயனேதும் இல்லை. கல்வியின் பயன் மெய்யறிவு ஊட்டல். மெய்யறிவு ஆன்மீகச் சிந்தனையைப் பெருக்கும். ஆன்மீகச் சிந்தனை இறை உணர்வைக் கூட்டும். இறையுணர்வில் தோய்ந்த மனம் உலகியல் பற்றை மறந்து இறையடி நாடிப் பொருந்தும்.

இக்குறளுக்கு விளக்கம் செய்யும்போது ஞானி சாலமன், முனிவர் பால், அறிஞர் கிரே போன்றோரின் அரிய உரைகளை மேற்கோள் காட்டுகிறார். ஒன்றின் சிறப்பைப் புலப்படுத்தப் பல சிறந்த உரைகளைப் பொருத்திக் காட்டுவது இவரது உத்தி முறைகளில் ஒன்றாக உள்ளது. மேலும் இது அவரது அறிவுப் பரப்பைப் புலப்படுத்துவதுடன் சிந்தனைச் சீர்மையினையும் காட்டுகிறது.

வில்லிபாரதம் கிருஷ்ணன் தூது சருக்கம், சேஷாசலத்தின் மனதை மிகவும் கவர்ந்துள்ளது. தமிழ்ப்பாடம் கற்பிக்கும்

பகுதியில் (பாடம் 108) ஒரு பாடலை எடுத்து விளக்கம் தருகிறார்.

நீதூது நடந்தருளி யெமதுநினை
 வவர்க்குரைத்தா னினைவின் வண்ணம்
தாதூதி யளிமுரலுந் தண்பதியும்
 தாயமும்தான் தாரா னாகின்
மீதூது வளைகுலமும் வலம்புரியும்
 மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்க பொருதெனினும்
 பெறுவனிது வசையு மன்றே (9)

இப்பாடல் தருமன் கூற்று. கிருஷ்ணனைத் துரியோதனினிடம் தூது அனுப்பும்போது அவரிடம் தருமன் சொல்லியது. துரியோ தனன் பாண்டவரை மறந்து விட்டானாயின் அது அவனுக்குப் பேராபத்து. தங்களுக்கு உரிய தாயபாகத்தை அவன் தர மறுத்தால் கால தூதர் மனம் களிக்கப் பெரும் போர் நடக்கும். அதனால் தங்களுக்கு வசையே இல்லை. முறையாக அவன் தர மறுத்ததைப் பெறுவதற்காகப் போர் புரிதல் முறையே ஆகும். ஆகையினால் அது வசையன்று.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள 'எமது நினைவு' என்ற தொடரைப்பற்றி ஆசிரியர் மிகவும் சிந்தித்து இலக்கியத் தரத்தையும் புலவர் திறனையும் அளவிட முயல்கிறார். அதற்குப் பல வாறு விளக்கம் தருகிறார்.

நாட்டைப் பாண்டவர் எவ்வாறு அடைவர் என்ற நினைவு அற்றுத் துரியோதனன் இருப்பானாயின் அதன் விளைவு கடுமை யாக இருக்கும்.

பாண்டவரைச் சூதில் வென்று காட்டுக்கு அனுப்பும்போது செய்த உடன்படிக்கையை அவன் மறந்து பாண்டவரைப் பற்றிய நினைவு இல்லாமல் இருந்தால் பேரழிவு வரும்.

பாண்டவர் பல ஆண்டுகள் துரியோதனனின் பார்வையில் படாதிருந்ததினால் அவர்களைப் பற்றிய நினைவு மறந்து இருக்கலாம். அது அவன் பிழை. தாங்கள் தாயபாகத்தைப் பெறும் தகுதியோடு இருப்பதை அவனுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

இன்னொரு முறையிலும் இத்தொடருக்குப் பொருள் விளக்கம் காணலாம். துரியோதனன் பாண்டவர் நினைப்பை மறந்து இருப்பானாகில் அவனுக்கு இவர்கள் சிறப்பாக இருப்பதை நினைவுபடுத்த வேண்டும். அதோடு பாண்டவரின் பேராற்றலைக் கண்ணன் செவ்வனே எடுத்துக்காட்டியும் தாயத்தை மறுத்தால் போர் வருவது உறுதி; அப்போரில் துரியோதனன் பூண்டோடு அழிவது உறுதி என்பதைக் கண்ணன் உறுதியாக அவனுக்கு நினைவுபடுத்த வேண்டும்.

இவ்விளக்கத்தைத் தரும் ஆசிரியர் இதைப்பற்றி மேலும் சிந்திக்கிறார். இவ்வாறு விளக்கம் செய்வதாயின் அது தருமனின் உயர் பண்புக்கு இழுக்காகிவிடும் என்று ஆசிரியர் கருதுகிறார். தங்களது பேராற்றலைப் பற்றிய செருக்கும் துரியோதனனைத் தங்கள் பலம் காட்டி அச்சுறுத்தும் ஆணவமும் தோன்றுவதால் சான்றாண்மை மிக்க தருமனின் பண்புநலனைப் பாதிக்கும் தன்மை இவ்விளக்கத்தில் இருப்பதாக ஆசிரியரே கூறி இதனை ஒதுக்குகிறார் (6-2-1930, ப. 110).

இவ்வாறு தம் விளக்கத்தையே மேலாய்வுக்கு உட்படுத்தி நிறைகுறை காண்பது ஆசிரியரின் ஆய்வு நேர்மையைக் காட்டுகிறது.

தமக்குப் பொருத்தமற்றது என்று தோன்றுவதையும் எடுத்து விளக்கியதின் காரணத்தைச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு விளக்கம் காண இடம் இருப்பதால் இதேபோன்று இன்னொருவர் சிந்தித்து எழுத வாய்ப்பு உள்ளது. ஆனால் அது ஒரு குறைக்கு இடம் வகுப்பதை அவர் அறியாமல் இருக்கலாம். அதனால் இழுக்கு நேரிடலாம். அதைத் தவிர்க்க இவ்வாறு விளக்கி அதனைத் தாமே மறுத்துக் காட்டியதாகக் கருதலாம்.

இப்பாடலுக்குச் சேஷாசலம் தரும் பல்சிந்தனை விளக்கமும் கருத்தும் சிந்தித்து மகிழத்தக்கன. இலக்கியத்தை எவ்வெவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதற்கு இவ்வணுகுமுறை சிறந்த ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

### வடமொழி இலக்கியம்

ஆசிரியர் வடமொழிப் பயிற்சி பெற்று வால்மீகி இராமாயணத்தில் நன்கு புலமை அடைந்துள்ளார் என்பதை அவரது கம்ப இராமாயணம் உரைவிளக்கம் வாயிலாக அறியமுடிகிறது. கம்பரை

யும் வால்மீகியையும் பல இடங்களில் ஒப்பிட்டு ஆய்வுசெய்கிறார். வடமொழிப் புலமை இல்லாமல் இந்த அளவுக்கு அவரால் சிந்திக்க இயலாது.

காளிதாசரின் நாடகங்களையும் அவர் படித்திருக்கவேண்டும். ‘புரூரவன் தபுதார நிலை’ என்ற தலைப்பில்] ஓர் இலக்கிய விளக்கம் தருகிறார் (13-9-1928, பக். 734-736). இது ‘விக்ர மோர்வசீயம்’ நாடகத்தின் ஒரு நிகழ்ச்சியைத் தழுவி எழுதிய தாகும்.

புரூரவஸ் தன் காதலியான ஊர்வசியைக் காணாமல் ஏங்கு கிறான். அளவற்ற கவலையால் அவனது மனம் அல்லலுற்று வாடுகிறது. தான் செய்வது அறியாது அங்குமிங்கும் தேடி அலை கிறான். பயனில்லை. அவளை எங்கும் காண முடியவில்லை. திகைக்கிறான். அரற்றி அழுகின்றான்.

யாரிடம் கேட்டு அறியமுடியும். அங்கு யாரும் இல்லை. வான்வெளியைப் பார்க்கிறான். அதில் மேகங்கள் மிதந்து செல் கின்றன. அவற்றை நோக்கிப் புலம்புகிறான். தன் மனம் கவர் காதலியை அவை கண்டிருக்குமோ என்று எண்ணி ஏக்கத்தோடு பார்க்கிறான். அவனது கலங்கிய நிலை காளிதாசனால் வட மொழிப் பாடலாக வெளிவருகிறது.

அப்பாடலைச் சேஷாசலம் படிக்கிறார். உணர்ச்சி உடைப் பெடுத்துப் பாய்கிறது. அது பெருக்கெடுத்து வால்மீகியின் உணர்ச்சியோடு கலந்து தமிழ்ப்பாடலாக வெளியேறுகிறது. அதில் புரூரவஸின் நிலை தெரிகிறது.

‘கலையுங் கலைந்து மனமும் மருண்டு
தலையோ நிமிர்ந்து தாரோ வதங்கி
மலையூ டடர்ந்த வனத்தே தனது
நிலையோ தளர்ந்து நெடிதே யுயிர்த்து’

புரூரவஸ் காதலியைக் காணாது மருண்டு விளித்து மயங்கித் தவித்து மலையும் காடும் நிறைந்த இடத்தில் நிற்கிறான்.

உடை நெகிழ்வதை உணரா நிலை. செய்வதறியா மன நிலை. செய்வதெது என அறியாது தலை நிமிர்ந்த நிலை. உள்ளக் கொதிப்பில் வெம்பிய மாலையை அணிந்த நிலை. மலை மலிந்த காட்டகத்தில் தன் மெய் தளர்ந்த நிலை. நெட்டுயிர்த்து மனம் வெதும்பும் நிலை.

இத்தனை அவல நிலைகளும் பெற்று நிற்கும் புரூரவஸ் மன்னனை இத்தமிழ்ப் பாடல் படம்பிடித்துக் காட்டுகிறது. வட மொழியில் படித்து உணர்ந்ததைத் தமிழ் மொழியில் வடித்துக் கொடுக்கும் கவிதை ஆற்றல் சேஷாசலத்தின் படைப்புத் திறனுக்குச் சான்றாக அமைகிறது.

இருமொழிப் பயிற்சி இன்றி இதனைச் செய்ய இயலாது. மொழிக் காழ்ப்பின்றிப் பன்மொழி கற்றுத் தன்மொழி வளமுற நாடி முயலும் தகுமனம் பெற்ற நல்லறிஞராகச் சேஷாசலம் திகழ் கிறார். இத்தகைய தமிழ்ப்பணி ஏற்றிப் போற்றத்தகும் நற்பணி.

## ஆங்கில இலக்கியம்

ஆங்கில மொழிப் புலமைமிக்க சேஷாசலம் அதை மிகவும் மதித்துள்ளமை அவருடைய எழுத்துக்களில் நன்கு புலப்படு கிறது. குறிப்பாகச் சேக்ஸ்பியரின் நாடகங்கள் அவரை மிகவும் கவர்ந்துள்ளன. அனைவரும் ஆங்கிலத்தின் சிறப்பை உணர வேண்டும் என்ற ஆவல் மிகுதியாகக் கொண்டுள்ளார்.

கலாநிலையம் இதழில் அதைப்பற்றிக் குறிப்பிடுகிறார். 'ஆங் கில மொழியின் அருங்கலைச் சிறப்பைத் தாங்கிய, மேனாட்டுக் கவிகளுள் முதலெனப் போற்றப்பெறும் சேக்ஸ்பியரின் நாடகம் ஒன்றை மொழிபெயர்த்து, அதனருமையை விளக்குவதற்குரிய விரிவுரையுடன் இவ்வாண்டின் இவ்விதழ்களில் வருவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டு வருகிறோம் (8-1-1931, ப. 2).

'ஒதல்லோ' என்ற சேக்ஸ்பியர் நாடகத்தை முழுநிலையாக மொழி பெயர்த்து பக்கத்துக்குப் பக்கம் தேவையான விளக்க உரை தருகிறார். நாடகத்தின் பெருமையை உணரத்தக்க முறையில் மொழிபெயர்ப்பும் விளக்கமும் அமைகின்றன. தொடராக இப் பணி மேற்கொள்ளப்படுகிறது. படிப்போரின் மனத்தைக் கவரும் தரமாக உள்ளது.

சேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசர்' நாடகம் மொழிபெயர்க்கப் பட்டுத் தனி நூலாக வந்துள்ளது. இதன் தமிழாக்கம் மூல நூலைச் சரியாகப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தால் சற்றுக் கடினமாகச் செய்யப் பெற்றுள்ளது. குறிப்பாக மார்க் ஆண்டனியின் நீண்ட உரை புரிவதற்கு அரிதாகத் தோன்றுகிறது. விரும்பி முயன்று படிப்போர் பயனடைவர்.

தமிழ்ப் பாடல்களுக்கு மேற்கோள் விளக்கங்களாகப் பல நாடகப் பகுதிகள் மொழிபெயர்ப்பாகத் தரப்படுகின்றன. நளவெண்பா, சுயம்வர காண்டத்தில் நளன் அன்னத்தைத் தூது விடும் பகுதியில் (தமிழ்ப்பாடம், 14) 'ரோமியோ ஜூலியட்' நாடகத்திலுள்ள ஜூலியட் செவிலி உரையாடல் மிக விரிவாக மொழிபெயர்த்துத் தரப்படுகிறது (5-4-1928, பக். 268-272).

இந்த இடத்தில் இவ்வளவு விரிவாக இந்நாடகப் பகுதியைத் தரவேண்டுமா என்ற சிந்தனை எழுவது இயல்பு. தமிழ்ப்பாடப் பகுதியில் ஆங்கிலமும் பயிற்றுவிக்கப்படுகிறது. இது ஓர் ஒப்பீட்டு இலக்கியக் கல்வியாக அமைகிறது. இதன் வாயிலாக ஆங்கில மோகம் பிடித்தோர்க்குத் தமிழின் பெருமை நேருக்கு நேர் விளக்கப்படுகிறது. இது ஒரு நல் முயற்சி. பயன்மிக்கப் பயிற்சி.

சேக்ஸ்பியரை மட்டும் அறிவதில் மனநிறைவு அடையக் கூடாது என்ற எண்ணத்தில் பல சிறந்த ஆங்கில அறிஞர்களை அறிமுகப்படுத்துகிறார். செறிடன் எழுதிய 'பிசாறோ' நாடகம் நற்றமிழில் களிநடம் புரிகிறது. இது நல்ல மொழிபெயர்ப்பாக அமைகிறது.

சம்பந்த முதலியார், சலசலோசன செட்டியார், சங்கரதாஸ் சுவாமிகள், விபுலானந்த அடிகள் போன்றோர் ஆங்கில நாடகங்களை மொழி பெயர்க்கும்போது பாத்திரப் பெயர்களைத் தமிழ் மக்களுக்குப் புரியும் நிலையில் மாற்றிவிடுகின்றனர்.

ஆனால் சேஷாசலம் அவ்வாறு செய்யவில்லை. அப்படியப்படியே தமிழ் எழுத்துக்களில் தந்து விடுகிறார். தம் மொழிபெயர்ப்பைப் படிப்போர் அந்த நாடகங்களை ஆங்கிலத்தில் படிக்கும்போது ஓர் அந்நியத் தன்மையை உணரக் கூடாது என்று கருதி இருக்கலாம். இவருடைய மொழிபெயர்ப்பில் இருமொழிகளுக்குமே சிறப்பிடம் தரப்படுவதை நன்கு அறியலாம்.

ஆல்பிரெட் டென்னிசனின் கவிதையான 'ஒயினான்' (Oenone) என்பதைத் தமிழ்த் தழுவலாகச் 'சந்திரை' என்ற பெயரில் தருகிறார் (3-1-1929, பக். 8-10). இது தனித்தன்மையுடன் காணப்படுகிறது. ஆங்கிலக் கவிதையைத் தமிழ்க் கவிதையாக்கி வழங்குகிறார்.

'வான்கடல் மேய்ந்த சூன்முதிர் மங்குல்
மீன்முடை யுணவை வெறுத்திட நினையா
கடிகமழ் காவின் காய்கனி மேவிப்
படியிடை யிறங்கப் பார்ப்பன போன்று
மலைமுடி யெட்டிக் கைநிரை வாங்கிச்
சிலைநுனி நின்றும் சினைநுனி பற்றி
இருபுற மோங்கிய பெருவரைச் சாரல்
தருக்களி னூர்ந்து தவழா விழிய' (ப-8)

இவ்வாறு தமிழாக்கக் கவிதை வளர்கிறது. கவிதை நடையும் தமக்கு இயன்றதே என்பதைச் சேஷாசலம் இதன் மூலம் காட்டுகிறார்.

ஆங்கிலத்தில் இருப்பதைத் தமிழறிந்தோர் தகுமுறை அறிய தகுவழி காண்கிறார். பல இலக்கியச் செல்வங்களைத் தமிழர் படித்தறிய விரும்புகிறார். அதற்கான வழிமுறைகளைக் கையாள்கிறார். கலாநிலையத்தில் 'வாழ்வாங்கு வாழ்வார்' என்ற தொடர் கட்டுரையை எழுதும்போது பல ஆங்கில மேதையரின் உரைகள் விரிவாகவும் சுருக்கமாகவும் இடம் பெறுகின்றன.

'அழகுடை யொருபொருள் நிரந்தர உவகையாமே'
ஜான் கீட்ஸ்— (19-2-1931, ப-122)

(1) மனிதனே முன்னும் பின்னும் கதுவிய கண்களால் உவகையைக் காண்கிறான். (2) இன்பம்தான் உன்னை உகந்து அழைக்கும் போதெல்லாம் அதற்கு உறவாம் ஒரு துன்பமும் தொடர்கிறது காண்; தாமஸ்கிரே.— (5-3-1931, ப-162)

தாமஸ் கார்லைல் எழுதிய ஒரு கட்டுரைப் பகுதியை மிக விரிவாகத் தமிழாக்கித் தருகிறார். இளைஞருக்கு உரிய சிந்தனை: 'தம்பி! வீர வாழ்க்கையில் தன் உயிரை வழங்கிவிட வேண்டும். கொடையேபுரிக; தக்கபடி உன்உயிரை விற்கவோ எதிர்பார்க்காதே. எந்த விலைதான் உனக்குத் திருப்தியாகத் தோன்றும். உனக்கே உன் ஆயுளுக்கு நியாயமான விலை. கடவுள் படைப்புப் பொருள் அனைத்தும் நினக்கே. ஆகாயப் பொருளனைத்தும் ஆதியந்தம் என்ற அலகிலாக் காலம் எல்லாம் இவைகளே உன் உயிருக்குத் தகுந்த விலை என்று திருப்தி அடைவாய்

அத்தனையும் வேண்டும். உண்மையைச் சொல். அதனில் ஒரு அணு குறைந்தாலும் ஒவ்வுவாயோ' (12-2-1931, ப-102)

உயிர் விலைமதிப்பற்றது. அதை எளிமையாகக் கருதி எதை யாவது பெற்று எதையாவது செய்ய முன்வருவது அடிமைத்தனம். உலகமே ஒருவனுக்கு உற்ற கூலியாகும். உலகு பயனடைய உயிரைக் கொடுப்பதே உரிய செயல்; அதையே செய்ய தியாக உணர்வுடன் இளைஞர் முன்வரவேண்டும்.

இவ்வாறு வாழ்வுக்கு வளமுடைய கருத்துக்களை வழங்கும் ஆங்கில அறிஞர்களின் எழுத்துக்களைத் திரட்டியளித்து மிகப் பயனுடன் தமிழ் உலகுக்குச் சேஷாசலம் நல்ல தொண்டு செய் துள்ளார்.

'சத்திய விளக்கம்' என்ற கட்டுரையில் (1931) ராபர்ட் லூயி ஸ்டீபன்ஸன் (ப. 362), ஜான் மில்டன் (ப. 362), ஓமர் கயாம் (ப. 362), ரால்ப் வால்டோ எமர்ஸன் (ப. 402, 442), இயேசு கிறிஸ்துநாதர் (ப. 482) முதலிய பலரின் அரிய கருத்துக்கள் விதைக்கப் பெற்றுள்ளன.

'மனிதன் ஒருவன் இவ்வுலகில் இல்லாமையினாலன்றோ இன்று இத்துணை கோடி மக்கள் இருக்கின்றனர்' என்ற ஹென்றி தோருவின் கூற்று (3-1-1985, ப. 2) மிகவும் விரிவாகச் சிந்திக்கப்படுகிறது. இது சீர்மைமிக்க வாழ்வுக்கு நேர்மையாக உதவும் நல்லுரை.

ஆங்கிலம் படித்தவர் பலர். அதை உயர்வாக மதிப்பவர் பலர். ஆனால் சேஷாசலம் போன்று ஆங்கிலத்தைப் படித்து, மதித்து தமிழுடன் இணைத்துத் தமிழ் மக்களுக்குப் பயன்படத் தக்க முறையில் எடுத்துரைத்தவர் மிகச் சிலர். ஆங்கில மொழியைக் கொண்டு தமிழின் பெருமையை எடுத்துக் காட்டி யுள்ளதாகக் கருதலாம்.

பலவகையான இலக்கியச் செல்வங்களைத் திரட்டித்தரும் ஆசிரியரின் உள்நோக்கம் சிந்திக்கத் தக்கது. மக்களின் நல் வாழ்வுதான் அவருடைய முக்கிய நோக்கம். தாம் வாழும் தமிழ் நாட்டில் தம்மோடு வாழும் தமிழ் மக்கள் போலித்தனமாக வாழக்கூடாது. நேர்மையாக நடந்து வஞ்சனைக்கு இரை யாகாது உண்மையை உணர்ந்து மெய்ஞ்ஞான சிந்தனையுடன் நல்வாழ்வு வாழ்ந்து சிறக்க வேண்டும் என்ற நல்லுள்ளத்துடன்

அறியாமையை அகற்ற இலக்கியங்களின் துணையுடன் சேஷாசலம் அரும்பாடு படுகிறார்.

ஓரிடத்தில் அவர் கூறும் கருத்து ஊன்றிப் பார்க்கத் தக்கது. 'புலவர் சொற் கேளாத நாளெல்லாம் வாழாத நாட்களே. மண்ணிற் பிறந்த பாவத்தால் நம்மைத் தலையெடுக்கவொட்டாது மண்ணோடு அழுத்தி வைக்கும் குழப்பங்களுக்கு இடையே உயிரின் உண்மைநிலை கண்ட சான்றோர் தம் அனுபவத்தாலும் அனுமானத்தாலும் நெடுந்தூரம் நோக்கவல்ல அவர் மனத்தின் வண்மையாலும் கனிய வைத்து உண்டவர் உய்யுமாறு அளிக்கின்ற பழங்களை எம்மோடு கலந்துண்ண நண்பர்கள் வம்மின்' (19-4-1928, ப. 317).

இவ்வுரை ஆசிரியரின் நோக்கத்தை நன்கு விளக்கும். தேர்ந்தெடுத்த இலக்கியக் கனிகளை மனவளர்ச்சியுற்று மனிதன் உய்வதற்காக வாரி வாரி வழங்குகிறார். வழங்கியதை வாங்கி உண்ண வேண்டியது மாந்தர் கடமை. சேஷாசலத்தின் இலக்கியச் சிந்தனை தூயமனத்தின் வெளிப்பாடு. உயரிய நோக்கத்தின் புலப்பாடு.

# சிந்தனைச் சீர்மை

சேஷாசலம் இலக்கியங்களைப் படித்துச் சீர்மையுடன் சிந்திக்கிறார். நலம் நாடி நல்லதைத் தேடி இலக்கியங்களைப் புரட்டுகிறார். இனிய கனிகளைப் பறித்துப் பயன்படு பொருளாய்க் கொள்வோர்க்குக் குறையின்றிக் கொடுக்கிறார். சுவைமிக்க சாற்றை ஊறச்செய்து மனங்களிக்க ஊட்டுகிறார். அவரது சிந்தனை பல கூறுகள் உடையது.

## அறிவு விளக்கச் சிந்தனை

இலக்கியத்தை ஆசிரியர் தம்முடைய அறிவு விளக்கம் கொண்டு சிந்திப்பதைப் பல இடங்களில் காணமுடிகிறது. கம்பராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப் படலத்திலுள்ள ஒரு பாடலை எவ்வாறு அவர் சிந்திக்கிறார் என்று பார்க்கலாம்.

மாதர்கள் கற்பின் மிக்கார்
　　கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வதிட்ட ரொத்தார்
　　வேறுள மகளி ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்னாள்
　　திருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாம்
　　தயரதன் தன்னை யொத்தார்!

இப்பாடலில் ஓரிடம் ஆசிரியரின் சிந்தனையைக் கிளறுகிறது. கற்பின் மிக்கார் அனைவரும் கோசலையின் மனத்தை ஒத்திருந்தனர். மற்றுள்ள மகளிர் சீதையை ஒத்திருந்தனர்.

கோசலை போன்று சீதை கற்புடையவள் இல்லையா? 'கற்பினுக்கணி' எனப் பின்னர் அனுமனால் சிறப்பித்துக் கூறப்படும் சீதை கற்பின் மிக்காள் இல்லையா? கோசலைக்கும் சீதைக்கும் இடையிலுள்ள கற்பின் வேறுபாடு என்ன?

கம்பர் இப்பாடலில் கற்புக்கு என்ன பொருள் காண்கிறார்? கோசலையும் சீதையும் கற்பில் சிறந்தவர்கள் என்பது உண்மை

யாயின் இருவருடைய கற்புநிலைக்குமுள்ள வேறுபாடு என்ன? சீதை திருமகளை ஒத்தாள் என்று கூறியிருப்பது மேலும் சிந்திக் கத் தூண்டுமன்றோ? இவ்வாறு பல வினாக்களை எழுப்பிச் சிந்திக்க ஆசிரியர் தூண்டுகிறார்.

கம்பராமாயணத்துக்கு வெளியே சென்று சிந்திக்கத் தலைப் படுகிறார். திருக்குறள் காமத்துப் பாலுக்குத் தோற்றுவாய் கூறும் உரையாசிரியர் பரிமேலழகரின் விளக்கம் ஒளி காட்டுவ தாகத் தோன்றுகிறது.

'காமவின்பம் ............ புணர்ச்சி, பிரிவு என இரு வகைப் படும். இனி அவை தம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவு என்றும், பிரிவைக் கற்பு என்றும் பெரும் பான்மை பற்றி வகுத்துக் ................ கூறுகின்றனர்'.

கணவனுடன் உறைந்து புணர்ச்சி இன்பம் நுகர்ந்து வாழ் வது களவாகவும், கணவனைப் பிரிந்து அவனையே நினைத்து வாழ்வது கற்பாகவும் கருதப்பட்டுள்ளதை இவ்வுரை வாயிலாக அறியலாம். 'கற்பின் மிக்கார்' என்று கம்பர் இங்குக் குறிப்பது கணவனைப் பிரிந்து கற்புக் கடம் பூண்டு வாழும் பெண்களைத் தான் என்று கருதவேண்டும்.

இவ்விளக்கத்துக்குப் பொருத்தமாகக் கோசலையின் வாழ்க்கை இருந்ததா என்று அடுத்து சிந்திக்கவேண்டும். கோசலை தன் கணவனான தயரதனைப் பிரிந்து வாழ்ந்தாளா என்பது ஆய்வுக்கு உரியது.

வால்மீகி இதைத் தெளிவாகக் கூறுகிறார். தயரதன் கைகேயியை மணந்ததும் கோசலை கணவனைப் பிரிந்து தனித்து வாழ்கிறாள். கம்பர் இவ்வாறு வெளிப்படக் கூறவில்லை. ஆயினும் அவள் தயரதனோடு உடனுறையவில்லை என்பதற்குக் குறிப் பான சான்று உள்ளது.

இராமன் முடிசூடப்போகும் செய்தியைக் கோசலை பிறர் மூலம் தான் அறிகிறாள். அறிந்ததும் அவள் கணவனிடம் சென்று அதை உறுதிப்படுத்தாது நேரே கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குகிறாள். கணவனுக்கும் அவளுக்கும் இணக் கமும் நெருக்கமும் இருந்திருந்தால் அவனிடம் சென்று உண்மை

அறிந்திருப்பாள். கோசலை கணவனுடன் நெருங்காது பிரிந்தே வாழ்ந்திருக்கிறாள். [12-3-1931, ப-195]

கணவனைப் பிரிந்து வாழ்ந்தாலும் கோசலை கற்புக் கடமை தவறவில்லை. ஆகையால் அவள் கற்பின் மிக்காள் ஆகிவிடு கிறாள். ஆழ்ந்த சிந்தனையோடு அறிவு விளக்கம் செய்யும் சேஷாசலத்தின் திறமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதனை மேலும் சிந்திக்க அவருடைய விளக்கம் இடம் தரு கிறது. கற்புக் கடனை இரண்டாகப் பிரிக்கலாம். உடனுறைக் கற்பு, பிரிந்துறைக் கற்பு என்பவை இரண்டும் கற்புடைமைதான் இருப்பினும் இரண்டிலும் மிக்கது பிரிவிலும் கற்புக் கடன் காப்பது. கோசலை பிரிந்து வாழ்ந்தும் கற்புக் கடன் பூண்டு ஒழுகியதால் கற்பின் 'மிக்காள்' ஆகிறாள். சீதை உடனுறைக் கற்பினள்.

பாடல்களுக்குச் சிறப்பு விளக்கம் கொடுக்கும்போதுதான் தம் அறிவுப் பரப்பை ஆசிரியர் நன்கு விளக்கிக் காட்டுகிறார். கம்பர் கைகேயி சூழ்வினைப் படலத்தில் ஒரு பாடல் வாயிலாக மலைக் காட்சியைக் காட்டும் பாங்குக் கருதிப் பார்க்கத் தக்கது.

சாய டங்க நலங்க லந்து
தயங்கு தன்குல நன்மையும்
போய டங்க நெடுங்கொடும்பழி
கொண்ட ரும்புகழ் சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல்
கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கின வென்ன வந்து
குவிந்த வண்குமு தங்களே!''

இப்பாடலை அனைவரும் நன்கு புரியும் தரமாக உரை விளக்கம் முதலில் தரப்படுகிறது. பின் சிறப்பு விளக்கம் சிந்தனை உரை யாக ஊறி வழிகிறது.

குமுதங்கள் குவிதலென்னும் இயற்கை நலத்தினால் கேகயன் மடந்தையின் செயலின் கொடுமையும் சீரிய மங்கையர் பிறர் பழியைத் தம்பழியாய்க் கொண்டு நாணத்தால் வாய்திறக்கமாட் டாமல் வாளா அமைகின்ற குலப்பெருமையும் ஒருங்கே விளங்கக் கூறினர்.

'சீரிய நங்கையர்' என்று இருப்பதனினும் 'சீறிய நங்கையர்' என்ற பாடம் ஒரு வகையில் சிறிது பொருள் சிறக்கலாம் எனத் தோன்றுகிறது. இனப் பழிக்கு அழிந்து நாணும் நங்கையர் தன்மையை முன் 'கங்குலென்னும் நங்கை'யின் திறத்தில் கம்பர் காட்டியாய் விட்டபடியால் கோபிக்கின்ற குணத்தை இங்குக் கூறுமாற்றால் வேறுபட்ட நயம் இப்பாடத்தால் எய்தவரும். பொதுவறப் பொங்கும் கோபம் மூண்டக்கால் வாய் திறந்து யாதும் உரைக்கலாற்றாது குமுறுவர் என்னும் கொள்கையை, மறவரை 'மடித்த வாயினராய்ப்' போரினுள் புகுத்துவதைச் சில புலவர்களின் உரைகளில் மிகக் காணலாம்.

'இந்தத் தற்குறிப்பேற்றம் உணர்வதற்கே அன்றி உரைப்பதற்கு ஒண்ணா நிலையில் இந்திரஜாலம் போல் அமைந்துள்ளது' [1931, ப-152]

உரை சிந்தனைக்கு உரியதாகிறது. சீரிய மங்கையர் பிறர் பழியைத் தம்பழியாகக் கொண்டு நாணுவது பொருத்தம். அதைச் சீறிய மங்கையர் பாலேற்றிக் கூறியது பொருந்துமா என்பது கருதத் தக்கது. ஆசிரியர் அவர் பார்வைக்கு ஏற்றவாறு காரணம் காட்டுகிறார். இது மேலாய்வுக்கு உரியது. இருப்பினும் இப்பகுதி ஆசிரியரின் அறிவு விளக்கத்தைப் புலப்படுத்திக் காட்டாமல் இல்லை.

சூளாமணியில் குமார காலச் சருக்கம் தொண்ணூற்று மூன்றாவது பாடலை விளக்கும் சேஷாசலம் அவரது தமிழ்ப் புலமைமிக்க சிந்தனை நுட்பத்தைப் புலப்படுத்திக் காட்டுகிறார்.

''துளங்கொளி பவளத் திண்காற்
சுடர்மணி தவழும் பூமி'' (பா. 93, அ. 3)

இவ்வடியிலுள்ள 'துளங்கொளி பவளம்' என்ற தொடருக்கு விளக்கம் தருவதைப் பார்க்கலாம்.

'ஒளிப்பவளம்' என்பதற்கு ஒளியை வீசும் பவளம் என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையாகப் பொருள்கொள்ள இயலாது. அவ்வாறாயின் 'துளங்கொளிப் பவளம்' என ஒற்று மிகுந்திருத்தல் வேண்டும். 'ஒளி பவளம்' என்பதனை வினைத்தொகையாகவும் கொள்ள இயலாது. ஏனெனில் ஒளி என்பது இங்குப் பெயர்ச்சொல். பிரகாசம் செய்

என்னும் பொருளில் அது வினைப்பகுதியாய் நிற்குமாறில்லை. பிரகாசம் செய் என்னும் பொருளில் வரும் வினைப்பகுதி ஒளிர் என்பது வினைச் சொல்லின் ஒளி என்பதற்கு மறை அல்லது மறைத்துவை என்பதே பொருள். ஒளி துலங்கு பவளம் என மாறி வந்திருக்கின்ற காரணத்தை முன்னிட்டு, வல்லின மெய் மிகவில்லை போலும் (19-3-1931, ப. 209).

இச்சிந்தனை மிக நன்றாக உள்ளது. 'ஒளி துலங்குப் பவளம்' என்று வரும்போதும் பொருள் பொருந்தி வருகிறது. இவ்வாறு சிந்திக்கும் போக்கு மிக அரிது. இது ஆசிரியரின் அறிவு விளக்கத்தைக் காட்டுகிறது. இவ்வாறே இவர் பாடல் களுக்கு அலசி ஆராய்ந்து பொருள் காண்கிறார்.

*ஒப்பிலக்கியச் சிந்தனை*

இலக்கியங்களை ஒப்பிட்டு நல்ல முறையில் விளக்கம் தருகிறார். ஒரே இலக்கியத்திலுள்ள தொடர்புடைய பகுதிகளைப் பொருத்தி விளக்கல், ஒரே மொழி இலக்கியங்களை ஒப்பிட்டுக் காட்டல், பன்மொழி இலக்கியங்களை ஒப்பிடல் ஆகிய மூன்று முறைகளில் ஒப்பீட்டு இலக்கியச் சிந்தனை இவரால் மேற் கொள்ளப்படுகிறது.

கம்பராமாயணத்தில் கைகேயி தயரதனிடம் வரம் கேட்கத் துணியும்போது தன் ஒப்பனை கோலத்தை அகற்றும் இடம். கம்பரின் பாடலைப் பார்க்கலாம்.

'விளையும் தன்புகழ் வல்லியை
வேரறுத் தென்ன
கிளைகொண் மேகலை சிந்தினள்
கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் மதியின்
மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுதல் அரும்பெறல்
திலகமு மழித்தாள்'

இப்பாடலுக்குப் பொருள் விளக்கம் செய்யும்போது சீதைக்கு மண வணி சூட்டும் முறையைக் கம்பர் விளக்கும்போது பாடிய பாடலை நினைவு கூர்கிறார். இரண்டும் நேர் மாற்றமுடைய செயல்கள்.

'மொய்வளர் குவளை பூத்த
    முளரியின் முளைத்த முந்நாள்
மெய்வளர் மதியி னாப்பண்
    மீனுண்டே லனைய தேய்ப்ப
வய்யக மடந்தை மார்க்கும்
    நாகர்கோ தையர்க்கும் வானத்
தெய்வமங் கையர்க்கு மெல்லாந்
    திலகத்தைத் திலகஞ் செய்தார்'

முன்னது திலகம் அழித்தல். பின்னது திலகம் இடல். இரு எதிர் செயல்களை ஒப்பீட்டாய்வுக்கு ஆசிரியர் எடுத்துக் கொள்கிறார்.

மதியில் மறுவைத் துடைப்பது போன்று கைகேயி தன் கூந்தல் புறமும் ஒளிமிக்க நெற்றியிலிருந்த திலகத்தை அழிக்கிறாள். மங்கல மடந்தையர் மதிப்பது திலகம். கைகேயி அதை யகற்றி அமங்கலம் ஆகிறாள். ஆனால் சீதையின் நிலை முற்றிலும் மாறுபட்டது. அன்று அவளுக்கு மணநாள். பூவுலக நங்கையரும் நாகருலக மங்கையரும் வானுலக மகளிரும் மதித்துப் போற்றும் மங்கையர்த் திலகமான சீதைக்குத்திலகமிட்டு வாழ்த்தினர்.

இந்தப் பாடலுக்கு விளக்கச் சிந்தனை தரும்போது கம்பரின் கைகேயி கோலம் களைந்து கிடந்த நிலையை வால்மீகியின் கைகேயி கோலமிழந்து கோபமுற்று இருந்த நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார். ஆசிரியரின் உரையைக் காணலாம்.

வால்மீகி சிறிது மாற்றுகிறார். கைகேயியைக் கோபாக் கிரகத்துள் சேர்த்தனர். கொழுநர்பால் ஊடிய மடவார் சென்று தம் சீற்றத்தை மென்று கொண்டிருப்பதற்காகவே ஓர் அறை வடமொழி மனை நூலில் அமைக்கப் பெற்றிருந்தது போலும். தலை நோவு தீருமாறு புலிப்பால் கொணரும்படி மனைவியர் தம் கணவன்மாரை ஏவும் இடம் இதுவேயாதல் வேண்டும்.

கம்பரது மனைமுறையில் இத்தகைய பொல்லாத இடமேதும் இல்லாமையினால் கூனி போனபின் கைகேயி அங்ஙனே தன் கோலத்தை அழித்துவிட்டு விழுந்து கிடந்தாள். (8-1-1931, ப. 12). ஆசிரியரின் ஒப்பிலக்கியச் சிந்தனை பலவகை அனு

மானங்களுக்கு இடம் கொடுப்பதைக் காணலாம். அவற்றை ஒப்புக்கொள்வது படிப்போரின் விருப்பம்.

தோலாமொழித் தேவரின் சூளாமணிப் பாடலொன்றை (பாடல் 165) விளக்கும்போது திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிப் பாடலைத் தருகிறார்.

'மாஞ்சினை கறித்த துண்டம்
துவர்த்தலின் மருங்கு நீண்ட
பூஞ்சினை முருக்கஞ் சோலைப்
பூங்கள்வா யார மாந்தித்
தீஞ்சுவை மிழற்று கின்ற
சிறுகுயில் செல்வ ரேனும்
தாஞ்சுவை திரிந்த பின்றைச்
சார்பவ ரில்லை யன்றே ?

இச்சூளாமணிப் பாடலை அடுத்து பெரியதிருமொழிப் பாடலைத் தருகிறார்.

'மாம்பொழில் தளிர்கோதிய
மடக்குயில் வாயது துவர்ப்பெய்த
தீம்பலங்கனி தேனது நுகர்திரு
வெள்ளறை நின்றானே'. (7-5-1931, ப. 343)

இவ்விரு பாடலையும் பக்கத்தின் பக்கம் தந்தாலே போதும். இருவர் சிந்தனையும் ஒன்றுபட்டுள்ளது நன்கு புரியும். இரு நூலையும் சிந்தித்துப் படித்ததின் பயனாகவே இத்தகைய ஒப்பீடு செய்ய ஆசிரியரால் இயன்றது. இலக்கியத்தைப் படித்துச் சிந்திப்போர்க்கு இது நல்ல வழிகாட்டி.

கம்பராமாயணத்தில் கைகேயியின் கடுமையான நிலையைக் கூறும் ஒரு பாடலுக்குச் சேஷாசலம் தரும் விளக்கம் ஒப்பாய்வு நிலையிலும் அறிவாக்க நிலையிலும் மிகச் சிறந்து விளங்குகிறது.

'அஞ்சல ளையன தல்லல் கண்டுமுள்ள
நஞ்சில ணாணிள ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்சனெ மாதரை யுள்ள லார்கடக்கோர்'

கம்பரின் இப்பாடல் சேஷாசலத்தின் உரைகாண், திறத்தால் தனிச் சிறப்பு பெற்றுத் திகழ்வதாகக் கூறலாம். வெளிப்படை

யான பொருளைத் தந்து பாடலை முதலில் புரியவைத்துப் பின் அதுபற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டுகிறார். படிப்படியாக அவர் இப்பாடலை எப்படி அணுகுகிறார் என்று நோக்கலாம்.

'இதற்கு முன் செய்யுளும் இதுவும் சேர்ந்து கம்பரது கருத்து யாதெனக் காணப் பெரிதும் திகைக்கச் செய்கிறது.'

ஆசிரியரின் திகைப்பு படிப்போரின் கவனத்தை முன்னுள்ள பாடல்மீது செலுத்துகிறது. திகைப்பின் காரணம் எளிதாக அறிய முடியவில்லை. அதை அறியும் அவா தூண்டப்படுகிறது. அடுத்து இப்பாடலைக் கொண்டு சில எண்ணங்களை எழுப்புகிறார்.

'அஞ்சினளல்லள், உள்ளம் நைந்தாளல்லள், நாணம் கொண்டிலள் என்றுரைக்க கம்பருக்கே நாணம் விளைகிறது' என்றும் கருதலாம்.'

கைகேயியின் கொடுஞ் செயலைக் கண்டு கம்பர் நாணி வருந்தி இவ்வாறு பாடியுள்ளாரோ என்று தாம் கருதுவதாகக் கூறிப் படிப்போரின் சிந்தனையைத் தட்டி வேகமுறச் செய்கிறார். எதையும் உறுதிப்படுத்தவில்லை.

கைகேயி புரிந்தது தீச்செயலே ஆயினும் அவள் உண்மையில் தீமை புரிகின்றாளா? அவளது கொடுஞ் செயலுக்குரிய காரணம் யாது? அதன் முடிவு எப்படி இருக்கும்? இத்தீச் செயலில் ஏதாவது நல்முடிவுக்கு வாய்ப்பு இருக்குமா? இறைத் தூண்டலால் இத்தீச் செயல் நிகழ்கின்றதா? இத்தனை வினாக்களும் ஆசிரியரின் மனத்தில் எழுந்திருக்க வேண்டும். தொடர்ந்து வரும் அவருடைய சிந்தனை விளக்கம் அவரது மனக் கருத்தைப் புலப்படுத்தும்.

'வேந்தனது வாய்மையைக் காத்தளிக்கும் பொருட்டே தீய சக்தியின் வேடத்தைத் தாங்கிய உத்தமியாவாள் இக்கைகேயி' என்ற சோமசுந்தர பாரதியின் கொள்கையைக் கம்பரும் கொண்டிருந்தாரோ என்னும் ஐயம் இப்பொருள் பற்றித் தோன்றுவது இயற்கையே!

'இமையோர் புரிந்த மாயையால் கேகயன் தனையை இவ்வண்ணம் ஒழுகலுற்றாள்' என்று கம்பர் முன் சொல்லிய வாய்மையைக் கடைபிடித்துப் பார்க்குங்கால் இவளது உள்ளம்

நடுங்கியதும், நஞ்சிலா உள்ளத்தளாய் அவள் தன் புறச் செய்கைகளைக் கண்டு அஞ்சிலள், நாணிலள் என்று பழிக்க இக்கவிஞர் நாணியதும் பெரும்பாலும் பொருத்தம் உடையன ஆகலாம்.

கவிஞரின் கருத்துக்கு அமைதிகாணும் அருமையான விளக்கமாக இது அமைந்து சிறக்கிறது. எவ்வளவு படித்து எதையெதை எல்லாம் அறிந்து எப்படியெப்படி எல்லாம் சிந்தித்து இவ்வாறு விளக்கம் தரப் படுகிறது என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும்.

இப்பாடலின் இறுதி இரண்டு அடிகளும் ஆசிரியருக்குச் சிந்தனைச் சிக்கலை ஏற்படுத்துகிறது. மடந்தையர் வஞ்சனை வேடம் கொண்டவரா? இவ்வாறு கம்பர் ஒரு கருத்தைக் கூறியிருப்பாரா? இக்கூற்று மங்கையர் அனைவரையும் குறிக்குமா? அவ்வாறு குறிப்பதாயின் அது வழுவன்றோ? இத்தகைய வினாக்கள் ஆசிரியரின் மனத்தை அரித்திருக்க வேண்டும். விளக்கம் தரப்படுகிறது.

'இப்பாடலின் பின்னிரண்டடிகள் பொருளில் இடம் புரிதற்குரியவைகளே. தயரதன் கூற்றாயின் தக்கதாகலாம், மற்றிதுவோ கவிக்கூற்று'.

தம் சிக்கலை மிகத் தெளிவாகப் புலப்படுத்தும் ஆசிரியர் படிப்போரைத் தம் பக்கம் திருப்பித் தம் விளக்கத்தை ஆவலுடன் எதிர்பார்க்கும் நிலையை ஏற்படுத்தி விடுகிறார். நம்மை ஒப்பிலக்கியச் சிந்தனைக்கு அழைக்கிறார்.

சேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்' நாடகத்தில் ஓரிடம். நாடகத் தலைவன் ஹாம்லெட்டின் தாய் கர்ட்ரூட் ஒழுக்கம் தவறுகிறாள். அவளைப் பார்த்து மகன் கூறுகிறான். 'நொய்ம்மையே நின் பெயர் மாதராள் என்பதன்றோ' (Frailty thy name is woman) இதை 'வஞ்சனையே! உன் பெயர்தான் பெண்ணோ' என்று மொழி பெயர்த்திருந்தால் எளிமையாக இருந்திருக்கும்.

ஒட்டுமொத்தமாகப் பெண்ணைக் குறை கூறும் கூற்று ஆசிரியருடையது அன்று. பாதிப்புக்குள்ளாகிற தன்னை வெறுத்து மனம் கொதிக்கும் பாத்திரத்தின் உணர்ச்சிக் கூக்குரல். ஆனால் கம்பரின் பாடலில் இக்கூற்று கவியினுடையது. கவிஞர் இவ்வாறு பெண்களைப் பற்றிக் கூறலாமா? என்பது கேள்வி.

இவ்விடத்தில் வால்மீகி கூறுவதை ஆசிரியர் குறிப்பிடுகிறார். 'இராமனை வனத்துள் போக்கிப் பரதனுக்கு முடியைச் சூட்டு என்னும் இவ்வெதிர்பாராக் கொடுமையை யாவரே ஆற்ற வல்லார்...........பெண்கள் கெட்டார்கள் வெகு துச்ச குணம் உள்ளவர்கள். தமது காரியத்தையே விரும்புகிறவர்கள்.

'ஐயோ! எல்லாப் பெண்களையும் ஏன் நான் வீணாக நிந்திக்க வேண்டும்! பரதனது தாயாகிய உனது குணமே இவ் வண்ணம் இருக்கிறது. மாதரைப் பொதுவுறப் பகைத்த மயக்கத் தினின்று விரைவில் தெளிந்து கொண்டனன். கம்பருக்குக் கைகேயியின் பால் மூண்ட சீற்றம் அதனினும் பெரியதோ!' (29-1-1931, ப. 93).

வால்மீகியும் மிக வருந்திப் பெண்களைக் குறை கூறினாலும் முடிவில் உணர்ச்சிக் கொந்தளிப்பு அடங்கிக் குறை மீண்டு விட்டார். ஆனால் கம்பர் மீளாமல் இருந்து விட்டாரே. ஆசிரி யரால் இதைத் தாங்க முடியவில்லை. கம்பரை இக்குறையி லிருந்து மீட்க வேண்டும் என்ற துணிவில் தம் சிந்தனைக் குதிரையைத் தட்டி விடுகிறார்.

வியாசர்பாரதத்துக்குத் தாவுகிறார். அங்குத் தருமன் இயக்கனிடம் கூறும் ஒரு கூற்றைப் பார்க்கிறார். 'கொடிதினும் கொடியது மடந்தையர் இதயமே!' இதுவும் ஆசிரியர் கூற்றில்லை, இது கம்பரை மீட்காதே என்று கருதி கம்பரின் உரைகளையே துழாவித் துழாவிப் பார்க்கிறார். அவர் பத்தினிப் பெண்டிரைப் பாராட்டிப் பெருமைப் படுவதைப் பார்த்து ஆசிரியர் பெரும் திகைப்படைகிறார்.

இவ்வாறு பெண்களைப் பாராட்டும் கம்பரா பெண்களை முழுமையாகக் குறை கூறிப் பேசுவார்? ஒரு திருக்குறள் அவருக்கு நினைவுக்கு வருகிறது.

'இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்'

திருவள்ளுவர் இங்கு 'மகளிர்' என்று குறிப்பிடுவது வரைவின் மகளிரை அன்றிக் குலப்பெண்களை அன்று என்பதை விளக்கு கிறார். (29-1-1931, ப. 94).

'கம்பர் தவறார்'. இது சேஷாசலத்தின் உறுதியான எண்ணம். ஆனால் அவர் தவறி விட்டதாக ஒரு தோற்றம். அதை மாற்றிவிட வேண்டும். இதற்கான அரிய முயற்சியைத் தொடர்கிறார். பாடலை மேலும் படிக்கிறார். பொருள் விளக்கத்துக்கு மாற்றிடம் உள்ளதா என்று தேடுகிறார். ஈற்றடிகள் இரண்டையும் பலவாறு அந்வயப்படுத்தி ஒரு முடிவுக்கு வருகிறார்.

'வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்று
தஞ்சு என மாதரைத் தக்கோர் உள்ளலர்'

இவ்வாறு இப்பாடலை அந்வயிக்குங்கால் 'வஞ்சனை உடையவள் போல் இங்குக் கைகேயி தோன்றுகின்றாளாயினும் உள்ளத்தில் விடமில்லாத தன்மையை உணர்வோம். இப்படியே வஞ்சனை உடையவர்கள்போல் தோன்றிப் பழிப்புக்குப் பாத்திரமான பிறமாதர்களின் செய்கைகளையும் உய்த்துணர்ந்து ஆராய்ந்ததால் கள்ளமற்றவர்களாய் அவர் திகழ்கின்ற தன்மை உணரப் பெறும். ஆதலின் வெளித்தோற்றத்தைக் கடந்து உட்சென்று ஆராயும் அறிவிலா மனிதர் 'வஞ்சனை பண்டு மடந்தை வேடம்' என்றென்று பலபடி பேசலாமாயினும் தக்கோர்களோ மாதரை ஒருபோதும் அவ்வண்ணம் எளிதில் எண்ணமாட்டார்கள்' எனப் பொருள் எய்த இயன்றதாகிறது. எனின் கம்பரும் மாதரைப் பழித்ததாகாது. மாதரைப் பழித்தார் என்னும் பழுக்கு அவரும் ஆளாகார் (29-1-1931, ப. 94).

இப்பாடலைச் சேஷாசலம் அணுகியுள்ள முறை சீர்மையாகவும் சிறப்பாகவும் உள்ளது. ஆழமான சிந்தனை, ஒப்பிலக்கியப் பார்வை, உலகியல் உணர்வு, அறிவு விளக்கம் ஆகிய பல கோணங்களில் சிந்தித்து விளக்கம் தரப்படுகிறது. இத்தகைய இலக்கியப் பார்வை இருந்தால் தமிழ், உலக அரங்கில் பெறும் இடம் மிக உயர்ந்ததாக இருக்கும்.

## வாழ்வியல் சிந்தனை

வாழ்வை நினைத்துப் பார்த்துப் பாடல்களுக்குப் பொருள் கண்டு பயனுடன் கருத்துக்களை வழங்கும் போக்கைச் சேஷாசலத்திடம் காணமுடிகிறது. உலக இயல்பை ஊன்றிக் கவனித்து நல்லதைப் புகன்று அல்லதைக் கடிந்து கூற அவர் சற்றும் தயங்கவில்லை.

புறநானூற்றில் நக்கீரன் பாடிய ஒரு பாடலை விளக்கும் பாங்கு இதனை விளக்கும் தரமாக உள்ளது.

உண்பன நாழி உடுப்பன விரண்டே
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போ மெனினே தப்புந பலவே'

பாடலின் பொருளை நன்கு புரியுமாறு முதலில் விளக்கிவிடுகிறார். பின் தன் கருத்தைக் கூறுகிறார்.

இவர் [நக்கீரர்] பாடிய சொற்கள் இந்நற்றமிழ் நாட்டில் நடமாடும் எனில் உரிமை என்று சிலர் உதவாத மொழிகளைத் தூண்டுவாரோ? துய்ப்போம் என்ற தோற்றத்தால் தப்பின எத்தனையெத்தனை என்று எண்ணிச் சொல்வதே இயலாமல் போய் விட்டன.

'எல்லாத் துறைகளிலும் இத்துய்க்கின்ற உரிமைக்காக அலைந்தலைந்து திரிவதால் துன்பங்களே ஒன்றன்பின் ஒன்றாக நாளுக்கு நாள் தொடர்ந்து நமது வாழ்க்கையை எல்லாம் வெறியாட்டி வைக்கின்றன அல்லவோ.' [4-6-1931, ப-422]

'மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ' என்று மக்களுக்கு அறிவுரைக்கும்போது நாட்டுமக்களின் மனநிலையை அறிந்து அதை நெறிப்படுத்தி நல்வழி காட்டும் தரமாக இதை விளக்கிக் கூறுகிறார்.

நல்லதை நாடாது கயமையையும் வஞ்சகத்தையும் புரியாது கீழ்மையானதை நம்பி மக்கள் கெடுவதை ஆசிரியர் வாழ்க்கையில் கண்டு வருந்துகிறார். பெரியோரை அறியாது சிறியோரை நம்பி மக்கள் சீரழிவதைப் பார்த்து மனம் கலங்குகிறார். அவர்களைத் திருத்த விரும்புகிறார். அதை ஒரு திருக்குறள் விளக்கவுரையில் காட்டுகிறார்.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்'

சிற்றினத்தவர் தம்மைப் போன்ற சிற்றினத்தவர்களோடுதான் உறவு கொண்டாடிச் சூழ்வார்களேயொழிய பெரியோரை நாடியடைய அஞ்சுவர்.

'திருவள்ளுவர் அவருக்கே உரிய மதிநுட்பத்தால் நுனித்து உரைத்திருக்கிறார். 'பெரியோர் சிற்றினத்தவரைச் சேர அஞ்சுவர்' என்று திருக்குறள் உரை ஆசிரியர் நாம் கண்ட பொருளுக்கு மாறாகப் பொருள் கொண்டிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். ஆயினும் இப்பொருளே ஏற்புடைத்து என்று எண்ணவும் தகும்.

சிறியோர் இயற்கையு ளில்லை பெரியோரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு'

இது சிறியோரின் இயற்கை என்பது திருவள்ளுவரின் கருத்து.

'பிளாட்டோ, சேக்ஸ்பியர், காளிதாசர், கம்பர், மாணிக்கவாசகர், திருவள்ளுவர் போன்றவரை நாடாமல் வர்த்தமான பத்திரிகைகளையும் அது போன்ற புல்லிய வெளியீடுகளையும் சுற்றமாய்ச் சூழ்ந்து கொள்வதின் காரணம் ஐயமற வெளிப்பட்டு நிற்கிறது.

அரசியல்வாதிகள், சீர்திருத்தவாதிகள், முன்னேற்ற முழக்கினர், கீழ்த்தரமான பத்திரிகைகாரர் அனைவரும் போலிகள் என்பது ஆசிரியர் கருத்து. இதை 1935-ஆம் ஆண்டில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைச் சிற்றினத்தவர் சுற்றமாய்ச் சூழ்ந்து கொள்வதை அன்றே கண்டு வருந்துகிறார். மாந்தர் நலம் நாடும் கன்பூஸியஸ் போன்ற பெரியோரை நாடி நலமடைய வேண்டும். (17-1-1935, ப. 34).

மக்களின் போக்கு அவரது நல்ல மனத்தைப் புண்படுத்தி இருக்கிறது. சீர்பெற்று நல வாழ்வு பெறுவதற்கு உரிய வாயில்களை விரும்பாது தீயதை விரும்புவதைக் கண்டு சேஷாசலம் மனம் வெதும்பி இருக்கிறார். தவறான வழிகளைப் பின்பற்றச் செய்யும் கவர்ச்சிமிக்க வெற்றுரைகளைக் கேட்டுச் சீர்கெட்டு அழிவதைக் கண்டு அவர் மனம் வெதும்பி இவற்றைக் கூறுகிறார்.

வாழ்வியலுக்கு உதவும் அரிய கருத்துக்களைக் காணும்போது உவகையால் துள்ளிக் குதிக்கிறார். உணர்ச்சிப் பெருக்கில் போற்றிப் புகழ்கிறார்.

'யாது மூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா'

என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடலை விளக்கும்போது அவர் காட்டும் உணர்ச்சி அளவிட முடியாதது.

என்ன கலைத்திறம், என்ன மதிநுட்பம், என்ன பேரறிவு, என்ன திப்பிய அறிவு, என்ன சொன்னயம், என்ன அளப்பரிய பெருமை யாம் காண இவ்வகவல் பாவினுள் அடங்கி இருக்கிறது. யாம் காணாதன இன்னும் எத்தனையோ? இதனைப் பாடிய மாபெரும் புலமையோன் கணியன் பூங்குன்றனை நினைக்க நினைக்க உவகை மிகுகின்றது. இத்தகைய புலவன் ஒருவன் இருந்த காலத்தில் தேயத்தின் மேன்மையை நினைத்து உவக்கின்றோம். மாட்சியின் பெரியோரை வியத்தலுமிலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்று முடிக்கின்றபோது உவகையோடு எழுந்து உள்ளம் குதிக்கின்றது. (5-3-1931, பக். 161-162).

கீழான தீயவுரைகளைக் கடிவதிலும் மேலான நல்லுரைகளைப் போற்றுவதிலும் சேஷாசலம் தன்னுணர்ச்சி எல்லையை மீறியே சென்றிருப்பதாகத் தோன்றுகிறது. மக்கள் நல்வாழ்வே அவருடைய சிந்தனை நோக்கமாக உள்ளது. போலித்தனமும் வஞ்சகமும் அவரால் தாங்கமுடியாத பாவ வினைகள். புறச்செயல்களைவிட அகவுணர்வுகளை மிகவும் மதித்து உண்மைகளைக் கண்டறிகிறார்.

சிந்தனைச் சீர்மை, சொன்னலம், செயல் உயர்வு என்ற வரிசையில் வாழ்வியல் பாங்கை முறைப்படுத்திக் காண்கிறார். எண்ணப் பொலிவின்றிச் செயல் பெருமை இல்லை.

செந்நாப் புலவரின் சொன்னலம் அன்னார் உள்ளத் தூய்மையில் அடங்கி இருக்கிறது. கள்ள மனத்தர் கக்கும் சொற்கள் மக்கள் வாழ்வைப் பாழ்படுத்துமே அன்றி மேம்படுத்தாது. அகமனக் குரலில் உண்மை இருந்தால் வெளிப்படும் சொல்லும் செயலும் மக்கள் வாழ்வை மேம்படுத்தும். மாசற்ற மனமே நற்பொருள் வழங்கும். வாழ்வியல் சிறக்கவே வாயுரைக்க வேண்டும். வாழ்வியல் பயனே பாவலர் பனுவல்.

## உளவியல் சிந்தனை

மனித மனம் சிந்தனை நிறைந்தது. பல எண்ணங்களின் தோன்றிடம். சில எண்ணங்கள் வெளிப்படும். பல அமுங்கிக்

கிடக்கும். அமுக்கப்பட்டவற்றுள் சில உடைப்பெடுத்து கரவாக வெளிப்படும். அனுபவம், வளர்ச்சிப் பருவம் ஆகியவற்றுக்குத் தக்கவாறு எண்ணங்கள் மனதில் அரும்பும். உளநூலார் இதை நன்குணர்ந்து சிந்திப்பர்.

இலக்கியத்துக்குப் பொருள் விளக்கம் காணும்போது உளவியல் அறிவு மிகவும் துணைபுரியும். சரியான விளக்கம் காண நன்கு உதவும். சேஷாசலம் எந்த அளவுக்கு உளவியல் சிந்தையோடு இலக்கிய விளக்கம் கண்டுள்ளார் என்பதைப் பார்க்கலாம்.

கம்பராமாயணத்தில் தயரத மன்னனின் மனநிலையை, கைகேயி சூழ்வினைப் படலத்திலுள்ள ஒரு பாடலுக்கு விளக்கம் காணும் வாயிலாகச் சிந்திக்க ஆசிரியர் முயல்கிறார். அவ்விடத்தில் வால்மீகியின் கருத்துடன் கம்பரின் கருத்தை ஒப்பிட்டுத் தம் சிந்தனையைத் துலக்க விரும்புகிறார்.

மாமன்னனாகவும் பெருவீரனாகவும் மனத்திண்மையுடையவனாகவும் இருந்த தயரதன் இக்கட்டத்தில் அகவை ஏறிய முதியவனாக இருக்கிறான். அப்பருவத்துக்குத் தக்க உளவியல்பை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் காணும் முயற்சி நடைபெறுகிறது. ஆசிரியரின் ஆய்வுரையை நோக்கலாம்.

''நரைத்த குஞ்சியன், திரைத்த மேனியன், நடுங்கும் யாக்கையொடு குரலுமுடையனாய்த் தயரதன் முனிவரர் வால்மீகி வகுத்த வழி நுவன்ற வாக்கியங்களில் புல்லிய வென்று சொல்லற்குரியவைகளைக் கம்பர் புறக்கணித்தாரேனும் செவ்வி மாற்றினால் சிறக்க நிற்பதைக் கையாள்வாராயினர்.

துனியுறு துயரக் கோலம் பூண்டு நின்ற தன் தேவியைத் (கைகேயி) தேற்றுவான் வேண்டி 'உனக்கு என்ன பயம் வந்தது? சொல்வாய்! சூரியன் பனித் துளிகளை அகற்றுவது போல அதை ஒரு நொடியில் அகற்றி வைக்கிறேன்' எனப் பகர்ந்த இம்மாற்றம் பெருமையினும் முதுமையின் சிதைவே மிகவுடைத்து.

கைகேயியின் மனக் கோள்களுக்கு இணங்க, வளர்கின்ற தலையை வாங்குவானாம்; வாங்க நின்ற தலையை செருகுவானாம்; வறியோனை நிதிக் கிழவன் ஆக்குவானாம்; செல்வந்தனை வறியவனாய் வீழ்த்துவானாம்; என்னே இது!

அயோத்தி நாடுடைய வள்ளல் ஆட்சியெல்லாம் பெண்டாட்டி சொல் ஆட்டமேயோ! இந்தப்படி அவளுக்குத் தான் செய்ய நிற்கு மோர் குற்றேவலிற்றானோ பனித்துளி அகற்றும் பரிதியெனத் தன்னை இறுமாத்திசைத்தான்.

வடநூல் முனிவர்தம் வாக்கிற்கிலக்காகிய ஓர் மன்னவன் உள் ளமும் உவமமும் இன்னதாயின், இதனையே கவியரசர் கம்பர் கருத்துக்கு இசைந்த கோமுனி கோசிகன் முன்னோரிடத்தில்,

> 'துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
> பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப் போன்'

என்று அந்த உவமையையே மால்கொண்ட மனைவியின் துனி யைத் துடைக்கப் புகும் வீரமன்றிப் படியினைக் காப்பதாம் வேறோர் காரியத்துக்கு அமைத்துக் கொண்டாரெனின் பிறி தொன்றினிப் பகர்தல் வேண்டுமோ!" (22-1-1931, ப-53).

இவ்விளக்கம் கண்டு சேஷாசலத்தின் மதிநுட்பத்தை அறிய லாம். உளவியல் கொண்டு செயல்முறை கண்டு பொருத்தம் பார்த்து முன்பின் ஒத்துப் பார்த்து விளக்கம் கூறுகிறார். முதுமை யில் மனம் தளர்ந்து மெலியும் என்ற கோட்பாட்டை அடிப்படை யாக்கி ஆய்வு செய்கிறார். கம்பரும் வால்மீகியும் உளவியல் சிந் தனையில் மேலும் கீழுமாக இருப்பதைக் குறிப்பாக உணர்த்து கிறார்.

கைகேயின் விருப்பத்தை நிறைவேற்ற வால்மீகியின் தயரதன் தான் இதுவரை செய்துள்ள புண்ணியங்களை எல்லாம் கொண்டு சபதம் செய்கிறான். 'இது பழங்கிழவனின் ஏலாத் தனம்' என்பது சேஷாசலத்தின் கருத்து.

புண்ணியத்தால் புகன்ற இச்சூளினைக் கம்பர் தம் காவியத் தினுள் புகுத்திடாது காத்தனர். மேன்மகனாக இருப்போன் ஒரு வன் மூப்பினாலும் மோகத்தினாலும் தன்னிலை தளர்ந்து சிறிது தள்ளாடலாமே அன்றித் தலைகீழாய் வழுவித் தொங்கமாட்டான்.

'ஆதலினால் இம்மண்ணரசாட்சியில் தான் சாதிக்க வல்லதை ஒருவாறு நினைத்தவனாய் 'உன்னை இகழ்ந்தவர் மாள்வர்' என்ற மட்டோடு தன் நாவின் பிழைக்கு எல்லையிட்டுப் புண்ணி யத்தையும் போயிழக்காமல் ஓரளவு பழி நீங்கினான். இவ்வாறு வால்மீகத்தினின்று கம்பர் எடுப்பதும் விடுப்பதுமான இடங் கள் சில உள்ளன.'

(22-1-1931, ப-54)

விளக்க ஆசிரியரின் உளவியல் சிந்தனை விளக்கமுடையது என்பது இதனால் நன்கு விளங்கும். இலக்கிய நுண்மை காணும் தன்மையை அறியலாம்.

காணாததைக் கண்டது போன்று பலவாறு அனுமானித்துக் கூறுவது மனித இயல்பு. இந்த உளவியல் கூற்றைக் கொண்டு அனுமானப் பிரமாணம், காட்சிப் பிரமாணம் ஆகியவற்றின் வேறுபாடுகளை விளக்கி ஒரு கம்பராமாயணப் பாடலுக்குப் பொருள் கண்டுரைக்கிறார்.

இராமன் முடிசூடப் போகிறான் என்றதும் அனைவரும் அயோத்தி நகர் வந்து கூடுகின்றனர். வந்து திரண்டவரைக் குறித்து மக்கள் பலவாறு பேசியதைக் குறிப்பிடும் பாடல்.

'வேந்தரே பெரிதென்பாரும் வீரரே பெரிதென்பாரும்
மாந்தரே பெரிதென் பாரும் மகளிரே பெரிதென்பாரும்
போந்ததே பெரிதென்பாரும் புகுந்ததே பெரிதென்பாரும்
தேர்ந்ததே தேரி னல்லால் யாவரே தெரியக் கண்டார்!

இப்பாடலுக்கு இணையாகச் சீதையின் சுயம்வரத்தின் போது வில் கொண்டு வருவதைக் கண்டு மக்கள் பலவாறு அனுமானித்துக் கூறியதை ஆசிரியர் குறிப்பிட்டு விளக்குகிறார். (19-3-1931, ப-215)

இவ்விரிவான விளக்கத்தில் உலக நடப்பு, மக்களின் உளவியல் பாங்கு ஆகியவை விளக்கப்படுகின்றன. உளவியல் கண் கொண்டு இலக்கிய உண்மைகளை அறிய வேண்டியது முறை. இது சிறப்பான அணுகுமுறையாக அமைகிறது. ஆசிரியர் நன்கு இதைப் பயன்படுத்தியுள்ளார்.

### ஆன்மவியல் சிந்தனை

ஆன்மீக உணர்ச்சி அனைவருக்கும் தேவை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவராகச் சேஷாசலம் காணப்படுகிறார். இலக்கியங்களை அணுகும்போது அவரது ஆன்மீகச் சிந்தனை நன்கு புலனாகிறது. அமைதி பெற ஆன்ம உணர்வே ஒரே வழி என்பதை உறுதியாக நம்புகிறார். அதைப் பல இடங்களில் உறுதிப்படுத்திக் காட்டுகிறார்.

இவர் இலக்கியப் பாடல்களுக்குப் பொருள் காண்பதில் ஒரு முக்கிய கூறு விளங்குகிறது. அதை 'மெய்யறிவு தேடல்' என்று

குறிப்பிடலாம். பாடலுக்குரிய பொருளை முதலில் நன்கு அறிகிறார். அடுத்து அது வாழ்வியலுக்குத் தரமுடையதா என்று நோக்குகிறார். அதோடு நிறைவு அடையாமல் ஆன்மீகச் சிந்தனைக்கு அப்பாடல் உதவுகிறதா என்று பார்க்கிறார். ஆன்ம உணர்ச்சி உடையதை நன்கு மதித்து ஈடுபாட்டுடன் விளக்கம் செய்கிறார்.

'பிரபஞ்சத்தின் மெய்ம்மையோடு தன்னை உறவு செய்து கொள்ள முயல்கிறவனே மனிதனாவான்' என்ற தாகூரின் கருத்து அவருக்கு மிகவும் பொருத்தமாகும். (31-1-1935, ப. 2). இவர் பாடல்களில் மெய்ம்மை உணர்வு தேடி அலைகிறார்.

'மெய்ம்மையை நோக்குங்கால் உண்மை அனைத்தும் பொய் போலும்மே. ஆயுள் காலத்தை அவலமாக்காமல் நாம் வாழ வல்லவர்கள் ஆவதற்கு அம்மெய்ம்மையின் தன்மையை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.' (14-2-1935, ப. 98).

இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே இவர் பாடலாய்வு மேற்கொள்கிறார். தம் கருத்துக்கு ஆதரவாக மேனாட்டு அறிஞர் பிளேட்டோ, ஆலிவர் கோல்ட்ஸ்மித், தாமஸ் கார்லைல், ஜான் மில்டன், மாத்யூ ஆர்னால்ட் போன்றோரின் கருத்துக்கள் இவரால் பல இடங்களில் மேற்கோள் காட்டப்படுகின்றன. (1935, ப 98; 1931, ப. 502, 528, 582, 602, 622, 681). மெய்ம்மை ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும். ஆகையினால் அதைத் தேடுகிறார். தேடிக் கண்ட உண்மைகளைப் பிறருக்கு வழங்கி ஆன்மீக உணர்ச்சி ஊட்டி உதவுகிறார்.

சுப்பிரமணிய பாரதியார் பாடிய வேதாந்தப் பாடல்கள் சேஷாசலத்தை மிகவும் கவர்ந்துள்ளன. அவற்றைப் பற்றி அவர் கூறும் கருத்துக்கள் சிந்தித்து உணரத் தக்கவை. அவற்றைப் பார்க்கலாம்.

'பாரதியார் பாடிய வேதாந்தப் பாடல்கள் எளிமையானவை. வாழ்க்கையில் வெறுப்பைத் தூண்டாது ஊக்கத்தை ஊட்டுவன. இவர் பாடிய வேதாந்தப் பாடல்கள் தமிழுலகத்திலுள்ள மற்றெல்லா நூல்களை விடவும் அதிகமான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நம் வாழ்க்கைக்குத் தருவதை நாம் அனுபவத்தில் காணலாம்.' (14-2-1935, ப. 110).

'மனமென்னும் நிலத்தில் வித்தூன்றி நாள் தவறாமல்

கவலையைப் பயிராக்கும் உழவர்களாகிய நாமே கவலைக்கு மிகவும் அஞ்சி உயிர் வாழ்கின்றோம். இதனினும் அறியாமை உலகத்தில் வேறு யாதுமில்லை என்ற கொள்கையை விளக்கும்,

'நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி யுயிர் வாழ்தல் அறியாமை'

என்ற இணையற்ற அடிகள் உண்மை உணர்வும் உள்ளத்துக்கு ஒளியும் ஆறுதலும் தெளிவும் உண்டாக்கும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை' (14-2-1935, ப. 110).

அடுத்ததாகப் பாரதியார் புதுவையில் தன் குரு குள்ள சாமியால் அறிந்த அருளுபதேசம் பற்றிக் கூறுகிறார்.

'பரிதி காட்டி அக்கணமே கிணற்றுளதன்
விம்பங் காட்டி அறிதி கொல்லோ.....'

எனக் கேட்கவே 'அறிந்தேன்' எனப் பதிலிறுத்தார். இதனால் பாரதியார் வேதாந்த மரத்திலோர் வேரைக் கண்டதாகவும் அதைத் தமிழுலகத்தார்க்கு எடுத்துரைக்கிறேன் என்று,

'தேசுடைய பருதியுருக் கிணற்றி னுள்ளே
தெரிவதுபோ லுனக்குள்ளே சிவனைக் காண்பாய்.

என்ற இரண்டடிகளால் மிக நுட்பமாகக் கூறுகிறார். பாரதியாரின் ஏனைய பாடல்கள் உட்பொருளை வெளிப்படுத்தும் திறவுகோல் இவ்வடிகளே ஆகும்.

'அத்வைத சித்தாந்தத் தத்துவத்தை உவமை முகத்தாலே விளக்க வந்த அடிகளே பாரதியாருக்கு அவர்குரு செய்த உபதேசமாகும். இதனால் ஏனைய இரண்டான துவைதம், விசிஸ்டாத்வைதம் ஆகியவற்றைப் பாரதியார் அறவே தள்ளிவிடவில்லை.' (14-2-1935, ப. 111).

பாரதியாரின் இப்பாடலிலிருந்து சேஷாசலம் கண்டுணரும் ஆன்மீகம் மிகுதியானது. இறைவன் அகத்துள்ளான். மெய்யறிவொளி உடையோர் இறையுணர்வு பெற்று விருப்பு வெறுப்பறுவர். கவலை கொள்ளார். அமைதியும் ஆறுதலும் பெற்று வாழ்வர்.

இறைவன் அருள் பெற்று உய்வது மாந்தர் அனைவரின் விருப்பாக இருத்தல் வேண்டும். தூயோரன்றி மற்றோர் இறையருள் பெறுதல் இயலாது. மாந்தர் பலர் வஞ்ச நெஞ்சினராய் இருக்கின்றனர். அன்னார் இறைநாட்டம் இன்றிக் குறைபட்டுள்ளனர். ஆகையினால் இறையருள் இழந்துள்ளனர். மனிதன் என்றாலே வஞ்சகன் என்று நினைக்கும் அளவுக்குத் தாழ்வுற்றிருக்கிறான்.

இதை விளக்க விரும்பும் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தில் ஒரு பாடல் பாடியுள்ளார். அது சேஷாசலத்தின் மனதை மிகவும் கவர்கிறது.

'பொய்மறை யான புலாலுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை யற்ற முறாதே
யிம்முக னோடுற வெற்கரு ளென்னா
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே'

குரங்கின் நற்செயல் கண்டு இறைவன் மகிழ்ந்து அதற்கு நற்கதி அருள நாடுகிறான். அது மனிதனாகப் பிறந்து நற்பயன் இயற்றி இறையடி சேர வேண்டும் என்று விரும்புகிறான். மனிதனால்தான் நல்ல செயல்களைத் தன் மனப் பக்குவத்தால் நன்கு செய்ய முடியும். ஆகையினால் குரங்குக்கு அருள் செய்ய விரும்பிய இறைவன் அதனை மனிதப் பிறவியாக்க விரும்பினார்.

இதனைக் குரங்கு அறிகிறது. தன்மிருகப் பிறவி மாறி மனிதப்பிறவி அடைய அது விரும்பவில்லை. ஆனால் இறையருள் பெற்று நற்கதி அடைவதை மிகவும் நாடி விரும்புகிறது. ஏன் மனிதனாக மாற்றப்படுவதை அது விரும்பவில்லை என்பதைச் சிந்திக்கத் தூண்டுகிறார் ஆசிரியர்.

இறைவனைக் குரங்கு எவ்வாறு கவர்ந்தது என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும். அது மிருகமாக இருந்த போதும் தூய நெஞ்சோடு வில்வயிலை வழிபாடு செய்தது. அதன் கள்ளம் கபடமற்ற தூய சிந்தனையும் செயலும் இறைவனைக் கவர்ந்தது.

மிருகமாக இருந்து இவ்வளவுதான் அதனால் செய்ய முடியும்.

அது மனிதனாக மாறினால் இன்னும் சிறப்பாக இறை வழிபாடு செய்து அவனை எளிதாக அடைய முடியும். மனிதப் பிறவி இறையருள் பெறுவதற்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமையும். ஆனால் குரங்கு மனிதப் பிறவி எடுக்க மறுக்கிறது.

அது கூறும் காரணம் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. வஞ்சகமே உருவமாகக் காணப்படும் மனிதனாகப் பிறந்து இறையருளை இழக்க அது விரும்பவில்லை.

மனிதன் என்றாலே வஞ்சகன் என்று நினைக்கும் அளவுக்கு வஞ்சகம் மனித நெஞ்சத்தில் குடிகொண்டிருக்கிறது. இறையருளை மனிதன் பெறவே முடியாது என்ற அளவுக்கு அவன் தாழ்வுற்றுள்ளான். ஆகையினால் குரங்கு மனிதனாக மாற இறைவனிடமே மறுக்கிறது. வஞ்சக மனிதன் இறையருளைப் பெறவே முடியாது. இந்நிலையில் அவன் விலங்கை விடவும் தாழ்ந்து விடுகிறான்.

இக்கருத்தைக் கச்சியப்ப சிவாச்சாரியார் இலக்கியச் சுவை மலிய கவினழகுடன் இப்பாடலில் எடுத்துக் கூறுகிறார். இக் கருத்து சேஷாசலத்தை மிகவும் கவர்கிறது. அவர் மனித இயல்பைக் கூர்ந்து கண்டு பெரும்பாலோரின் வஞ்சக உள்ளங்களை உணர்ந்து மனம் நைந்து வருந்துகிறார்.

மனிதன் நிலையான இறையருளை நாடாது நிலையற்ற உலக வாழ்வை மலினமாக வாழ விரும்பி வஞ்சக நெஞ்சங் கொண்டுப் பிறரை வருத்துவது மிகத் தவறாகும். பொய்ம்முக மனிதனை விட மெய்ம்முகக் குரங்கு மேலானது. செல்வ வாழ்வு மனிதனைச் சீரழித்துவிடும்.

கபட வாழ்வுடைய மனிதனின் முகம் கொண்டு பரமபதம் பெற முடியுமா என்று குரங்கு சிந்திக்கிறது. உள்ளத் தூய்மை இன்றி இறையருள் பெற இயலாது என்பது ஆன்மவியல் சிந்தனை. தூய மனிதரைக் காண்பது அரிது என்பது வாழ்வியல் சிந்தனை (4-7-1929, ப. 516).

தமிழ்ப்பாடப் பகுதியிலும் இறையருள் பற்றி ஆசிரியர் கூறுகிறார். அஷ்டப்பிரபந்தத்திலிருந்து ஒரு பாடலை எடுத்துப் படிப்பிக்கின்றார் (பாடம் 81).

'திங்களிறு மாந்துலவத் தீம்பாற் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே – பொங்கமரி
லார்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் பற்று'

பரந்தாமன் வீற்றிருக்கும் மலை திருவேங்கடம். அது மிக உயர்ந்தது. மிக உயர்வுடையது. அதிலிருக்கும் யானை, உதித்தெழும் மதியைத் தீம்பாற் கட்டியெனக் கருதித் தன் கையை நீட்டுகிறது.

பால்மதியைப் பாற்கட்டியாகக் கருதியது மயக்க அணி. மலையின் உயரத்தை மதி எட்டும் தூரமாகக் காட்டியது உயர்வு நவிற்சி அணி. மதியின் இறுமாப்பு அகங்காரத் தன்மையைக் குறிக்கும். மிகவுயர்வை எண்ணி நிலவு இறுமாப்புடன் வானில் பவனி வருகிறது. மிகவுயர்ந்த வேங்கடமலையில் நிற்கும் யானை அதைப் பிடித்துண்ண கையை நீட்டுகிறது. இறுமாப்புக்கு எதிர்ப்பாக இச்செயல் தோன்றுகிறது.

இவ்வாறு சிந்திக்கவும் இடம் உள்ளது. சேஷாசலம் பின்னிரண்டடிகளையும் ஆன்மீகத் தொடர்புடன் சிந்திக்கிறார். போர்க்களத்தில் ஒலித்த வலம்புரிச் சங்கையுடைய பரந்தாமனின் அருளைப் பெற்ற அடியவரின் செய்பிழை என்று எதையும் யாராவது கூறினால் அதை அவர் கேளாதிருப்பார். இறையடியார் பிழை எதையும் செய்யமாட்டார். தூயோரே இறையன்பராக இருப்பர். அவரை யார் குறை கூறினாலும் இறைவன் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. கோளர் சொல் கேளான் இறைவன்.

ஆன்மீக உணர்வு உடையவர்களே ஆன்மீகத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர். கபடில்லாத உள்ளத்தினர் கவலைக்கு ஆட்படும்போது கடவுளைப் பற்றிச் சிந்திக்கின்றனர். ஆன்மீக வழி கண்டவர் எதிலும் அதைப்பற்றியே சிந்தித்து ஆன்மீக உணர்ச்சியில் முதிர்ச்சி அடைகின்றனர். சேஷாசலம் தனிமனிதயியல், மானிடவியல், சமூக வாழ்வியல், மனவியல், ஆன்மவியல் என்ற பார்வையில் இலக்கியங்களை அணுகிச் சிந்திக்கிறார்.

## நிறைவுச் சிந்தனை

இலக்கியம் ஒரு கலை. அதில் அழகைக் கண்டு களிக்க வேண்டும். இலக்கியத்தின் சுவையை அறிந்து அதைப் பருகி மகிழ வேண்டும். அதன் நயங்கண்டு இன்பம் கொள்ள வேண்டும்.

சொற்பொருளை நன்குணர்ந்து இலக்கியத்தைப் புரிய வேண்டும். இலக்கணப் புலமையுடன் சிந்திக்க வேண்டும். பொருள் மாற்றமிருக்கும் இடங்களை மேலும் மேலும் இடனறிந்து அதற்குத் தக்கவாறு மேற்சிந்தனை செய்ய வேண்டும்.

பிறநாட்டு நல்லறிஞர் நூல்களை நன்கு கற்க வேண்டும். கருத்துக்களைத் திரட்டி அவற்றின் நயமும் பயனும் காண வேண்டும். தமிழ் இலக்கியங்களுடன் அவற்றை ஒப்பிடுப் பார்க்க வேண்டும். நிறை காண முயல்வது முக்கியம். குறை காணின் குறிப்பிடுவது தவறில்லை.

பாடலின் பொருளை நன்குணர்ந்து பல கோணங்களில் அதை அலசிப் பொருள் தெளிவு பெறுதல் வேண்டும். இலக்கியம் வாழ்வுக்கு உதவ வேண்டும். மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கு அது துணைபுரியும் பாங்கு விளக்கப்படுதல் தேவை. பண்பாட்டுக் கூறுகள் சமூகச் சிந்தனையுடன் சுட்டப்படுதல் வேண்டும்.

ஆன்ம நேயத்தை வளர்க்கும் இலக்கியம் சிறப்புடையது. மனித மனத்தைப் பக்குவப்படுத்தி ஆன்மீக உணர்வை ஊட்டி இறைப்பற்றை விளக்குவது மிகச் சிறந்த இலக்கியமாக விளங்கும். சமய உணர்வும் ஆன்மீக உணர்வும் பிரித்தறிய வேண்டியவை. சேஷாசலம் தமிழ்நாட்டில் தோன்றிய மிகச்சிறந்த இலக்கியச் சிந்தனையாளர்.

✶

**கருவி நூல்**

**கலாநிலையம் 5-1-1928—1935 வரையிலான இதழ்கள்**

# சிறப்புச் சொல்லகராதி


அடியார்க்கு நல்லார் 30
அந்வயம் 59
அப்பர் 14, 15
அறிவு விளக்கச் சிந்தனை 49-53
அனுமானப் பிரமாணம் 5
அஷ்டப்பிரபந்தம் 69
ஆல்பிரெட் டென்னிசன் 45
ஆன்மவியல் சிந்தனை 65
இதழின் நோக்கம் 8–19
இயேசு கிறிஸ்து நாதர் 47
இலக்கியச் சிந்தனை வாயில்கள் 1-6
உதயணன் சரித்திரம் 17
உளவியல் சிந்தனை 62-65
ஒட்டுமொழித் தன்மை 2
ஒப்பிலக்கியச் சிந்தனை 53-59
ஓயினான் 45
ஓதல்லோ 44
ஓமர் கயாம் 47
கச்சியப்ப சிவாச்சாரியார் 68,69
கணியன் பூங்குன்றனார் 62
கம்பர் 2,3,18,59,61
கம்பராமாயணம் 9,22,28,33,49, 53,63
கலிங்கத்துப்பரணி 3
கலித்தொகை 37
காட்சிப் பிரமாணம் 5
காளமேகப் புலவர் 2
காளிதாசர் 43,61
கிரே 40
சங்கரதாஸ் சுவாமிகள் 45
சம்பந்த முதலியார் 45
சலசலோசன செட்டியார் 45
சாலமன் 40
சிலப்பதிகாரம் 12,39
சிலேடைப் பொருள் 2
சீனிவாசராகவன் 9, 10
சுப்பிரமணிய பாரதியார் 66
சூளாமணி 12,27,33, 52,55
சேக்ஸ்பியர் 10,44,57,61
சோமசுந்தர பாரதி 56
டென்னிசன் 10
தனிப்பாடல் 12,17
தாமஸ்கிரே 46
திருக்குறள் 12,40,60
திருமங்கையாழ்வார் 55
திருவள்ளுவர் 58,61
தேவாரம் 13
நக்கீரன் 60
நச்சினார்க்கினியர் 31
நளவெண்பா 12,19,29,33
நெற்குன்ற வாணர் 17
பால் 40
பிளாட்டோ 61
புறநானூறு 12,29,
புறப்பொருள் வெண்பா மாலை 38
பெருங்கதை 12
மணிமேகலை 12,38
மனோன்மணீயம் 3
மாணிக்க வாசகர் 61
மீனாட்சி சுந்தரனார் தெ.பொ. 10,13
ராபர்ட் லூயி ஸ்டீபன்ஸன் 47
ரால்ப் வால்டோ எமர்ஸன் 47
ரோமியோ ஜூலியட் 45
வால்மீகி 3,18,22,26,50,54,64
வால்மீகி இராமாயணம் 42
வாழ்வியல் சிந்தனை 59-62
விக்ரமோர் வசீயம் 43
விபுலானந்த அடிகள் 45
வியாசர் பாரதம் 58
வில்லிப்புத்தூரார் 16
வில்லிபாரதம் 3,15,40
ஜான் கீட்ஸ் 46
ஜான் மில்டன் 47
ஜூலியஸ் சீசர் 44
ஹாம்லெட் 57

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி,
சென்னை–600 113.

## அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | |
|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15-00 |
| தமிழரின் தாயகம் | 10-00 |
| உ.வே சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | 10-00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50-00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12-00 |
| தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10-00 |
| உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | 10-00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20-00 |
| அகலமும் ஆழமும் | 12-00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15-00 |
| உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள் | 12-00 |
| மகாமதிப்பாவலர் | 11-00 |
| உலக முதன் மொழி தமிழ் | 12-00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15-00 |
| தமிழ் தந்த வ.உ சி | 15-00 |
| உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு | 15-00 |
| வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் | 15-00 |
| மு.வ. புதினங்களில் தமிழ்—தமிழினம் | 20-00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 22-00 |
| கிறித்தவமும் தமிழகமும் | 15-00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள் தேசியம், காந்தியம் | 16-00 |
| தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும் | 25-00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26-00 |
| காந்தீயப் பெருந்தலைவர் காமராசர் | 20-00 |
| மலையாளக் கவிதை | 15-00 |
| நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | 18-00 |
| நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை | 14-00 |
| தொல்காப்பியப் பதிப்புகள் | 27-00 |
| தமிழும் பிராகிருதமும் | 12-00 |